2013, August 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013

# நவி பிள்ளையின் வருகை அச்சுறுத்தலா, வாய்ப்பா?



விக்னேஸ்வரன் எதிர்நோக்கப் போகும் சவால்கள்

வெலிவேரியாவும் வடக்கில் இராணுவமயநீக்க அறைகூவலும்

மன்மோகன் சிங்கும் நவாஸ் ஷெரீப்பும் நியூயோர்க்கில் சந்தித்துப் பேசுவார்களா?

பிள்ளையின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமையப்போகும் சர்வதேச சமூகத்தின் முடிவுகள்


தமிழகத்தில் தேர்தல் திருவிழாவுக்கான ஏற்பாடுகள்

தலைவாவுக்கு தலையடி வந்த காரணம்

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


























Amaya Resorts & Spas offers authentic Sri Lankan experiences all over the island. From the fascinating ruins and historical sites of the Cultural Triangle to the hills of Kandy, Nuwara Eliya, Golden sands at Hikkaduwa & Adventures to Yala, Amaya offers a cultural immersion with modern comforts. Whether it is through architecture, art, music, dance, cuisine or history, each resort incorporates aspects of the local setting and culture into the guest's experience.


Amaya Lake - Dambulla
Amaya Hills - Kandy
Hunas Falls by Amaya - Kandy
Langdale by Amaya - Nuwara Eliya
Coral Rock by Amaya - Hikkaduwa
The Bungalow by Amaya - Kandy
Amaya Signature - Dambulla

For reservations Tel: +94 11 4767 888 / 800
or sales@amayaresorts.com
www.amayaresorts.com
Level 27, East Tower, Colombo 01, Sri Lanka.

Reflections of Sri Lanka

AMAYA
Resorts & Spas
Sri Lanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருவருடன் அவருக்கு விளங்குகிற மொழியில் பேசுங்கள் அது தலைக்கு ஏறும். அவருடைய சொந்த மொழியில் பேசுங்கள் அது இதயத்திற்கு போகும்.

\- நெல்சன் மண்டேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலம்
2013, ஆகஸ்ட் 15 - 30
பக்கங்கள் - 68




நவி பிள்ளையின் விஜயம் அச்சுறுத்தலா, வாய்ப்பா?
- பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க எம்.பி.




மன்மோகன்சிங்கும் நவாஸ் ஷெரீபும் நியூயோர்க்கில் சந்திப்பார்களா?
- எம்.பி.வித்தியாதரன்

60 தமிழ் அரசியல் கட்சிகளுக்கான செயற்திட்டம்
- சாந்தி சச்சிதானந்தம்




தேர்தல் திருவிழாவுக்கான ஏற்பாடுகள்
- முத்தையா காசிநாதன்

62 தலைவாவுக்கு தலையிடி வந்த காரணம்




வேகமாக முன்னேற்றம் காண வேண்டிய நிலையில் இலங்கை சினிமாவின் தரம்
- விமல் திஸாநாயக்கா




தேர்தலுக்கு பிறகு விக்னேஸ்வரன் எதிர்நோக்கப் போகும் சவால்கள்
- குமார் டேவிட்




1953 ஹர்த்தால் முதல் 2013 வெலிவேரியா வரை...
பாலா தம்புவுடன் நேர்காணல்
- அகிலன் கதிர்காமர்

55 சினோடன் விவகாரமும் அமெரிக்க - ரஷ்ய உறவுகளும்

31 நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகளினால் அதிகரிக்கும் சுமைகள்

12 நவி பிள்ளையின் அறிக்கையை அடிப்படையாக கொண்டு அமையப்போகும் சர்வதேச சமூகத்தின் முடிவுகள்
- என்.சத்தியமூர்த்தி

28 வெலிவேரியாவும் வடக்கில் இராணுவமயநீக்க அறைகூவலும்
- ஹரிம் பீரிஸ்




வெலிவேரியா; அபிவிருத்தியின் பலியாட்களைத் தேடி...
- குசல் பெரேரா

42 'பெரிய்ய்ய' தமிழ்நாடா, சிறிய தமிழ் நாடா?




கடைசிப் பக்கம்
க.ரகுபரன்

*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியபீடத்திலிருந்து...

# எதற்காக புதிய ஆணைக்குழு?

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது காணாமல் போனவர்கள் குறித்து தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய முறைப்பாடுகளை அரசாங்கம் விசாரிக்க வேண்டுமென்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில் சிபாரிசு செய்திருந்தது எல்லோருக்கும் தெரியும். அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருபது மாதங்களுக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்ட நிலையிலும் காணாமல் போனோர் தொடர்பில் எந்தவிதமான விசாரணையையும் நடத்துவதில் அக்கறை காட்டப்படவில்லை என்பதை அரசாங்கம் அதன் சொந்த நடவடிக்கையின் ஊடாகவே உலகிற்கு அம்பலப்படுத்தியிருக்கிறது.

போரின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகஸ்ட் 14 ஆம் திகதி ஆணைக்குழுவொன்றை நியமித்திருக்கிறார். மூவர் கொண்ட இந்த ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி மக்ஸ்வெல் பரணகம. மனோகரி இராமநாதனும் குடிசன மதிப்பீடு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் பிரியந்தி சுரஞ்சனா வைத்தியரத்னவும் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர். இந்த நியமனங்களில் இருக்கக்கூடிய ஒரு முரண் நகை என்ன வென்றால், பரணகமவும் திருமதி இராமநாதனும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகப் பணியாற்றியவர்கள். அவர்கள் இருவரையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு ஆணைக்குழுவின் மிகவும் முக்கியமான சிபாரிசுகளில் ஒன்றை நடைமுறைப்படுத்துவதில் அக்கறை காட்டாமல் இருந்து வந்த அரசாங்கம், அவர்களில் ஒருவரைத் தலைவராகவும் மற்றவரை உறுப்பினராகவும் கொண்டு புதியதொரு ஆணைக்குழுவை நியமித்து அதே சிபாரிசுடன் சம்பந்தப்பட்ட விவகாரத்தை விசாரணை செய்து 6 மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருக்கும் விசித்திரத்தைக் காண்கிறோம்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அலட்சியம் செய்த அரசாங்கம் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து நான்கு வருடங்களுக்கும் கூடுதலான காலம் கடந்த நிலையில் காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு ஆணைக்குழுவொன்றை நியமிக்க முன் வந்ததற்கான காரணம் என்ன? தங்கள் அன்புக்குரியவர்கள் காணாமற்போனதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தேடிக்கொடுக்கும் உண்மையான அக்கறையா அல்லது சர்வதேச சமூகத்திடமிருந்து வருகின்ற நெருக்குதல்களைச் சமாளிப்பதற் கான ஒரு தந்திரோபாயமா என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயத்தின் பின்புலத்தில் இந்த புதிய ஆணைக்குழுவின் நியமனம் குறித்து பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இறுதிக் கட்டப்போரின் போது பெரும் எண்ணிக்கையான மக்கள் காணாமல் போனதாகக் கூறப்பட்டதை பாதுகாப்புப்படைகளின் அதிகாரிகள், குறிப்பாக, பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ பகிரங்கமாக, திட்டவட்டமாக நிராகரித்து வந்திருப்பதற்கு மத்தியில் ஜனாதிபதி புதிய ஆணைக்குழுவை எதற்காக நியமித்தார்? எல்லாவற்றுக்கும் மேலாக, இராணுவத்தினால் நியமிக்கப்பட்ட 6 உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக்குழு நான்கு மாதங்களுக்கு முன்னர் பாதுகாப்புச் செயலாளரிடம் கையளித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை இச் சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டியிருக்கிறது. அந்த அறிக்கையின் முதற்பகுதி போரின் இறுதிக் கட்டத்தில் குடிமக்களின் இழப்புக்களுக்கான பொறுப்பில் இருந்து இராணுவத்தை விடுவித்தது மாத்திரமல்ல, ஜனாதிபதியினால் அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம் குடிமக்களுக்கு எந்தவிதமான இழப்புமின்றியே (Zero Civilian Casualty) இராணுவ நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டிருந்தது. எனவே, போரின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி புதிய ஆணைக்குழுவை நியமித்ததன் அர்த்தம் என்ன?

போரின்போது ஆட்கள் காணாமல் போகவில்லை என்று இதுகாலவரையும் அரசாங்கத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் பகிரங்கமாக நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் கூறியதெல்லாம் பொய்யா? பெருவாரியான மக்கள் காணாமல் போயிருப்பதாக இடையறாது முறையிட்டுக் கொண்டு, நியாயமான விசாரணையொன்றை வேண்டி நின்ற சக்திகளின் நிலைப்பாடு ஜனாதிபதியின் பிந்திய செயலினால் நியாயப்படுத்தப்பட்டு நிற்கிறது. ஆனால், இன்னொரு முக்கியமான விடயம் ஆணைக்குழுக்களின் விசாரணைகள், அறிக்கைகளைப் பொறுத்தவரை இலங்கை ஒரு நம்பகத்தன்மையான வரலாற்றுத் தடத்தைக் கொண்டிருக்கவில்லை என்ற உண்மை எம்முன்னால் விரிந்து கிடக்கிறது. ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## வாலிக்கு சிலை

இந்த ஆண்டு பல இசைத்துறை ஜாம்பவான்களை தமிழ் சினிமா இழந்திருந்தாலும் மூன்று தலைமுறையினருக்கு பாடல்கள் எழுதியிருக்கும் வாலியின் இழப்பு தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு ஏற்பட்ட பெரும் இழப்பென்றே கூற வேண்டும்.

தமிழ்த் திரையுலகில் 15,000 இற்கும் மேற்பட்ட பாடல்களை எழுதி தமிழ்ரசிகர்களை தன்வசப்படுத்தியிருந்த வாலிக்கு, 'கவிஞர் கண்ணதாசனுக்கு எடுத்ததைப் போன்று சென்னையில் பிரதான இடத்தில் சிலை எடுக்க வேண்டும்' என்று காசிநாதன் எழுதியுள்ளார். உண்மையில் சென்னையில் மட்டுமல்ல, தமிழன் பரந்துவாழும் இடங்களிலெல்லாம் அந்த உன்னத கவிஞனுக்கு சிலை வைக்க வேண்டும்.

வாணி குமரேசன், வவுனியா.

## அரசகுடும்பக் குழந்தை பிறப்பும் பரபரப்பும்

அரச குடும்பத்தில் எந்தவொரு சம்பவம் நடந்தாலும் அதை ஒரு பரபரப்பான சம்பவமாக உலகிலுள்ள அனைவருக்கும் வெளிப்படுத்துவதில் ஊடகங்கள் முதன்மை வகிக்கின்றன. அவ்வாறானதொரு சம்பவம் தான் கடந்த மாதம் இங்கிலாந்து அரச குடும்பத்திலும் நடைபெற்றது. அது தான் பிரித்தானிய இளவரசர் வில்லியமுக்கும் இளவரசி கேட்மிடில்டனுக்கும் பிறந்த குழந்தை. குழந்தை பிறப்பென்பது உலகில் ஒவ்வொரு நிமிடமும் நடக்கும் ஓர் சாதாரணவிடயம். இருந்த போதிலும், இக் குழந்தையின் பிறப்பில் மட்டும் ஏன் இந்த ஆரவாரம் என்ற கேள்வி பலரின் மனதிலும் தவிர்க்க முடியாமல் எழுந்தது.

இதுகுறித்து உலகில் ஒவ்வொரு நிமிடமும் பிறக்கும் குழந்தைகளுக்கு சிறிதேனும் வித்தியாசமில்லாத இன்னுமொரு குழந்தை இது. எல்லாக் குழந்தைகளுக்கும் பெயர் வைப்பது போலவே இதற்கும் அதன் பெற்றோர் பெயர் வைத்திருக்கிறார்கள். அவற்றுக்கு இருக்கும் பாட்டிகள் போலத்தான் இதற்கும் ஒரு பாட்டி இருக்கிறது. இதிலென்ன அதிசயம்? என்று சாந்தி சச்சிதானந்தம் கேட்டிருக்கும் கேள்வி அருமையிலும் அருமை.

ரமேஷ் சுப்பிரமணியம்
தலவாக்கலை.

## கெவின் ரூட்டின் அகதிக் கொள்கை

கடந்த சில மாதங்களாக எமது ஊடகங்களை பெருமளவுக்கு ஆக்கிரமித்த விடயம் எது என்று பார்த்தால்- அது படகு மூலம் புகலிடம் தேடி அவுஸ்திரேலியா செல்லும் அகதிகள் சம்பந்தமானது என்றே கூறவேண்டும். படகு அகதிகள் வருகையைத் தடுப்பதற்காக அவுஸ்திரேலிய அரசு எத்தனையோ பல நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும், அகதிகளின் படையெடுப்பு குறைந்த பாடாகத் தெரியவில்லை.

## சினிமா விமர்சனம்

வழமையாக சஞ்சிகைகளில் வெளிவருகின்ற சினிமா விமர்சனப்பாணியை விடவும் வித்தியாசமான முறையில் அறிவு பூர்வமாக, சிந்தனையைத் தூண்டுகிற விதத்தில் சமகாலம் சஞ்சிகையில் சினிமா விமர்சனங்கள் வெளியாகி வருகின்றன. சில இதழ்களில் அந்த விமர்சனங்களைக் காண முடிவதில்லை. ஒவ்வொரு இதழிலும் தவறாமல் கனதியான சினிமா விமர்சனங்களைத் தர வேண்டும்

கிருஷ்ணமூர்த்தி ரகுபரன்,
சில்லாலை

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடந்த மாதம் அவுஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட் அகதிக்ள் தொடர்பில் புதிய நடைமுறைகளை அறிவித்திருந்த நிலையில், அவை சர்வதேச விமர்சனத்துக்கு உள்ளாகின. இது தொடர்பில் கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யன், 2011 இல் அவுஸ்திரேலிய உச்சநீதிமன்றம் மலேசியாவுக்கு அகதிகளை அனுப்பி வைப்பது அவுஸ்திரேலியாவின் சர்வதேச கடமைகளை மீறுவதாகும் என்று தீர்ப்பளித்தது. இப்போது இப்புதிய சட்டமும் கன்பராவிலுள்ள உச்ச நீதிமன்றக் கதவுகளைத் தட்டும் என்றதொரு ஆறுதலான விடயத்தை அகதி அந்தஸ்து கோரி சென்று நடுத்தெருவில நிற்கும் அகதிகளுக்கு கூறியிருக்கிறார். நிச்சயமாக அக்கதவு தட்டப்பட்டு அந்த அகதிகளுக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்க வேண்டும்.

கருணாகரன் ஜீவகன், பருத்தித்துறை.

## சத்தியமூர்த்தியின் கருத்து ஏற்பும் மறுப்பும்

சமகாலம் ஜூலை 16-30 இதழ் வடமாகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் நீதியரசர் விக்னேஸ்வரனை மையப்படுத்தியே வெளியாகியிருந்தது. காலத்தின் தேவை இது என்பதை ஏற்றுக்கொள்வதோடு, என்.சத்தியமூர்த்தி எழுதிய கட்டுரையில் சமவளவு ஏற்பு, மறுப்பும் எனக்கு உண்டு என்கின்றேன்.

அதிகார அங்கீகாரம் (Recognition of power) எனும் நிலையிலிருந்து இன்று அதிகாரப் பரவலாக்கம் (Devolution of Power) அல்லது அதிகாரப் பகிர்வு (Power Sharing) எனும் நிலைக்கு இன்று நகர்த்தப்பட்ட அல்லது நகர்ந்த தமிழ்ச் சமூகம் இன்று ஓர் தெளிவான அரசியல் நிரலுக்குள் தம்மை உள்வாங்குவதன் மூலமே தமது இருப்பை தக்கவைக்க முடியும் என்பது நிதர்சனமானது. இது பூர்ஷுவா அரசியலில் இருந்து விலகி நிகழளவில் பார்க்கப்பட வேண்டிய விடயம்.

சத்தியமூர்த்தி குறிப்பிடுவது போல் அரசியல் அனுபவம் வேறு, அரசு முறைகள் சார்ந்த அறிவு என்பது வேறு ஆக இருப்பினும் சட்டம் எனும் மறைகரம் கொண்டே அரசாங்கம் (Government) அரசு (State) எனும் முறைமையை இயக்குகின்றது. எனவே நீதியரசர் விக்னேஸ்வரனின் தகைமை பற்றி இம்மட்ட கருத்து முகத்தளவிலேயே புறத்தொதுக்கத்தக்கது.

இரண்டாவதாக அவர் கூறியதைப் போன்று வல்லுநர் குழு ஒன்று தேவை என்பதை முழுமையாக ஏற்பதோடு மேலதிகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையின் பரீட்சிப்பு செயன்முறைக்காய் ஐந்து ஆண்டுகளை வீணடிக்காது ஓர் குறுகிய கால உபாய செயற்திட்டத்தை முன்னிறுத்தி அமுலாக்குவதன் மூலம் ஓர் அறுதியான இறுதி முடிவை எட்டலாம். அதாவது, இலங்கை அரசின் பட்டுக்கையுறை கொண்ட இரும்புக்கரத்தை வெளிப்படுத்தலாம் அல்லது இதய சுத்தியுடன் கூடிய தீர்வை தமிழ் மக்கள் பெற்றுள்ளதாக நிம்மதி பெற உதவலாம் என்பது எனது நிலைப்பாடு.

அ.அர்ஜுன், இறுதிவருடம்,சட்டபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 04
2013, ஆகஸ்ட் 16 - 30

A Fortnigtly Tamil News Magazine


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



பாதை போகிற வழியில் செல்லாதீர்கள். பாதை இல்லாத இடத்திற்குச் சென்று உங்களுக்கென்று ஒரு தடத்தை விட்டுச் செல்லுங்கள்
- ரால்ப் வால்டோ எமர்சன்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....

இந்த நாட்டுக்குள்ளேயே பொதுமேடைகளில் ஏறி நின்று கொண்டு, கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டு என்னைச் சர்வாதிகாரி என்று எவ்வாறு கூறுகிறார்கள் என்பதை என்னால் விளங்கிக் கொள்ளவே முடியவில்லை.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

போதைப்பொருள் கடத்துபவர்களும் விற்பனை செய்பவர்களும் கசிப்புக் வடிப்பவர்களும் இன்று அரசியல்வாதிகளாக வந்து எங்களை 'மச்சான்' என்று அழைக்கிறார்கள் என்றால் பாருங்களேன்.



போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம

பாலியல் வல்லுறவு மற்றும் கொலைக்குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கும் 50 அரசியல்வாதிகளில் 47 பேர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியைச் சேர்ந்தவர்கள். ஊடகங்களில் இருக்கின்ற அந்த அரசியல்வாதிகளின் நண்பர்கள் அவர்களுக்கு வெள்ளை அடித்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை, அவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் சொல்லொணாத் தொல்லைகளுக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகுகிறார்கள். ஊடகங்கள் எதிர்க்கட்சியைக் குறை கூறுவதை விடுத்து, அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்த வேண்டும்.



ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி. ரோசி சேனநாயக்க

வடமாகாணத்தில் உள்ள 14 தேர்தல் தொகுதிகளில் நான்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெறும். ஐந்து தொகுதிகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும். எஞ்சிய ஐந்துதொகுதிகளிலும் வெற்றிபெறுகிற கட்சியே வடமாகாண சபையில் ஆட்சியமைக்கும் என்று ஊடகங்களினால் மேற் கொள்ளப்பட்ட அபிப்பிராய வாக்கெடு ப்புகள் தெரிவிக்கின்றன. இந்த ஐந்து தொகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே ஏறத்தாழ சமநிலை காணப்படுகிறது.



இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும

அரசியல் கட்டமைப்பு முழுவதுமே வர்த்தகமயப்படுத்தப்பட்டுவிட்டது. கட்சிக்காகப் பாடுபட்டுழைத்த அரசியல்வாதிகள் மறக்கப்பட்டுவிட்ட அதேவேளை, பணத்தைத் தாராளமாக அள்ளிவீசுகிற பேர்வழிகள் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெறுகிறார்கள். வேட்பாளர்களை நியமிப்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குடும்ப அரசியல் நடத்துவதாக சில ஊடகங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. நான் ஒருபோதும் எனது உறவினர்களை அரசியலுக்குக் கொண்டுவந்ததில்லை. வாக்காளர்கள் தான் குடும்ப அரசியலை ஊக்குவிக்கிறார்கள்.



நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி.சில்வா

அண்மையில் வெலிவேரியாவில் இடம் பெற்ற கொலைகள் தொடர்பாகவும் அரசாங்க அனுசரணையுடனான பயங்கரவாதம் தொடர்பாகவும் சர்வதேச விசாரணை வேண்டுமென்று கேட்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஏனென்றால், இதுவரையான உள்நாட்டு விசாரணை எதுவுமே பயனைத்தரவில்லை.



ஐக்கிய தேசியக்கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி

இன்றுள்ள பெரும்பான்மையான அரசியல்வாதிகள் பணம் சம்பாதிப்பதற்காகவே அரசியலுக்கு வந்தவர்கள். இவர்கள் மக்களுக்குச் சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டவர்கள் இல்லை. இவர்கள் தங்களின் இமேஜை கெடுத்துக் கொள்கிறார்கள். அரசியலின் ஊடாக சொத்துக்களைக் குவித்த அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்டார்கள்.



மாகாண சபைத் தேர்தல்களுக்குப்பிறகு புதிய போர் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியிருக்கிறார். புதிய போர் எதையும் பற்றி எமக்கு எதுவும் தெரியாது. ஏனென்றால், நாட்டை நாசப்படுத்திக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள். புதிய போரைப் பற்றி விளக்கமளிக்குமாறு விக்னேஸ்வரனைக் கேட்கப் போகிறேன்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# மதசகிப்புத்தன்மை இல்லாததன் விளைவுகள்



முஸ்லிம் மக்கள் ரமழான் பெருநாளைக் கொண்டாடி முடித்த கையோடு கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் ஒரு பள்ளிவாசல் மீதும் அதற்கு அருகாமையில் இருக்கும் முஸ்லிம்களின் வீடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் நியாய சிந்தை படைத்த சகலரினாலும் தயவுதாட்சண்யமின்றிக் கண்டிக்கப்பட்டது. சர்ச்சைக்குரியதென்று கூறப்பட்ட பள்ளிவாசல் பிரச்சினைக்கு அரசியல் தலைவர்களும் மதமற்றும் சமூகத்தலைவர்களும் பேச்சுவார்த்தை மூலம் சுமுகமான தீர்வொன்று காணப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது.

இனிமேல் முஸ்லிம்களின் வணக்கத்தலங்கள் மீது இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்படாதிருப்பதை அரசாங்கத்தினால் உறுதிப்படுத்த முடியுமா? அவ்வாறு தாக்குதல்கள் இடம்பெற்றால், அதில் ஈடுபட்டவர்களும் அவர்களைத் தூண்டிவிட்டவர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்களா?

கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட தாக்குதல்தான் அண்மைக்காலத்தில் முஸ்லிம்களின் வணக்கத்தலம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய முதலாவது தாக்குதல் அல்ல. அண்மைக்காலமாக நாட்டின் பல பகுதிகளில் முஸ்லிம்களின் வணக்கத்தலங்களுக்கு எதிராக வன்முறைகள் தூண்டிவிடப்பட்டிருந்தன. அந்தத் தொடர்ச்சியான வன்முறைச் சம்பவங்களில் பிந்திய சம்பவமாக மாத்திரமே கிராண்ட்பாஸ் தாக்குதலைக் கூறமுடியும்.

முஸ்லிம் அமைச்சர்கள் உட்பட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி பேதங்களுக்கு அப்பால் ஐக்கியப்பட்டு நின்று கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீதான தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டுமென்று கோரினார்கள். ஆனால், பள்ளிவாசல் பிரச்சினைக்கு காணப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 'சுமுகத்தீர்வை' அடுத்து வன்முறைக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையின் சூடும் தணிந்துவிட்டதையே காணக்கூடியதாக இருந்தது.

முஸ்லிம் வணக்கத்தலங்களுக்கு எதிராகவும் வர்த்தக நிறுவனங்களுக்கு எதிராகவும் பௌத்தமதவாதச் சக்திகளின் தூண்டுதலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய பெருவாரியான சம்பவங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால் கிராண்ட்பாஸ் சம்பவம் இடம் பெற்றிருக்க வாய்ப்பில்லை.

சிறுபான்மை மதத்தவர்களின் வணக்கத்தலங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தில் இருந்து விலக்குப் பெற்றவர்கள் போன்று தான்தோன்றித்தனமாகச் செயற்படக்கூடியதாக இருக்கின்ற சூழ்நிலையும் சட்டத் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டவர்கள் இத்தகைய மதவாத வன்முறைச் சக்திகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குக்காட்டுகின்ற தயக்கமுமே இலங்கையில் மதசகிப்புத்தன்மை படுமோசமாகச் சீர்குலைந்திருப்பதற்கான முக்கிய காரணங்களாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# எகிப்திற்கு அவசரமாகத் தேவைப்படுவது கருத்தொருமிப்பு




எகிப்தில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கிளர்ச்சியும் கலவரமும் அரபுலகில் சனத்தொகையில் கூடிய அந்த நாட்டின் எதிர்காலத்தின் மீது இருள்படியச் செய்திருப்பது மாத்திரமல்ல, அரபு வசந்தத்தின் மரபையும் மலினப்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதி முஹமட் முர்சியின் அரசாங்கத்தை கடந்த மாதம் இராணுவம் கவிழ்த்ததையடுத்து முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் வீதி ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார்கள். இராணுவம் ஏதேச்சாதிகாரத்தனமாக இரும்புக்கரம் கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளில் இதுவரை குறைந்தபட்சம் ஆயிரம் பேர் இறந்துபோனார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தார்கள். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் நூற்றுக்கணக்கான முக்கியஸ்தர்களும் உறுப்பினர்களும் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எகிப்து இன்று இடர்பாடானதும் முக்கியமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமுடையதுமான ஒரு கட்டத்தில் இருக்கிறது. மூன்று தசாப்தங்களுக்கும் கூடுதலான காலமாக பதவியில் இருந்த சர்வாதிகாரி ஹொஸ்னி முபாரக்கின் ஆட்சியை 2011 ஆம் ஆண்டில் தூக்கியெறிந்த ஜனநாயக ஆதரவு அலை புதியதொரு பாதையைச் சுய நிர்ணயம் செய்வதற்கான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தை எகிப்திற்கு வழங்கியிருந்தது. ஆனால், முபாரக்கின் வீழ்ச்சிக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கு கிடைத்தவெற்றி புதிய அரசாங்கத்தை கர்வத்தனமானதாக மாற்றிவிட்டது. கருத்தொருமிப்பைக் காண்பதற்குப் பதிலாக, முர்சியின் நிருவாகம் ஏனைய தரப்புகளின் விருப்புக்கு மாறாக இஸ்லாமிய அரசியலமைப்பொன்றை நிறைவேற்றியதுடன், பொருளாதாரத்தையும் உகந்த முறையில் நிருவகிக்கத் தவறியது. இதையடுத்து எகிப்தியர்கள் மத்தியில் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் அரசாங்கம் மீது வெறுப்புணர்வு ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய இராணுவம் இஸ்லாமியவாதிகளுக்கு எதிராக மதச்சார்பற்ற அரசியல் இயக்கங்களைப் பயன்படுத்தியது.

இன்று எகிப்துக்கு மிகமிக அவ்சியமாகத் தேவைப்படுவது பரந்தளவிலான அரசியல் மற்றும் சமுதாய கருத்தொருமிப்பேயாகும். அதாவது தாராளப் போக்கைக் கொண்ட முற்போக்குவாதிகளுக்கும் இஸ்லாமியவாதிகளுக்கும் இடையிலான ஒரு இணைப்பேயாகும். இத்தகைய இணைப்பு ஏற்படுவதற்கு சகல தரப்புகளினாலும் நெகிழ்வுத்தன்மையான போக்கு வெளிக்காட்டப்படவேண்டும். தேர்தலில் மக்களினால் தெரிவு செய்யப்பட்டால், அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கு இருக்கின்ற உரிமையை முற்போக்காளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே வேளை, சிறுபான்மையினத்தவர்களுக்கும் பெண்களுக்கும் இருக்கின்ற சமத்துவ உரிமைகளை முஸ்லிம் சகோதரத்துவ இயக்கமும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். அரபுலகில் எகிப்துக்கு இருக்கின்ற முக்கியத்துவம் வாய்ந்த அந்தஸ்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, அந்த நாட்டில் மூளக்கூடிய முழு அளவிலான உள்நாட்டு யுத்தம் மேற்காசியா பூராகவும் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தும். தாராளவாத ஜனநாயகத்தை தோற்றுவிப்பதற்காக எகிப்திய சிவில் சமூகமும் தன்னை ஐக்கியப்படுத்தி விவேகமான முறையில் துணிவாற்றலுடன் செயற்பட வேண்டுமென்று சர்வதேச அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

அல்லாவிட்டால், சில தசாப்தங்களுக்கு முன்னர் அல்ஜீரியா சென்ற வழியிலேயே எகிப்தும் போக நேரும். இதன் விளைவாக மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் எகிப்திய இராணுவம் ஏறிமிதிப்பதற்கு வழி திறந்துவிடப்படும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# தெஹ்ரானில் தென்படும் மாற்றம்

ஈரானின் புதிய ஜனாதிபதி ஹசன் றோஹானி அண்மையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் (ஆகஸ்ட்3) தெஹ்ரானில் தேசிய பாராளுமன்றத்தில் நிகழ்த்திய தொடக்கவுரை தேர்தலில் அமோகவெற்றி அவருக்கு வழங்கியிருக்கும் ஆணையைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது. தனது உள்நாட்டுக் கொள்கை அணுகுமுறை பெண்களின் உரிமைகளில் முன்னேற்றம், அன்றாடவாழ்வில் அரசாங்கத் தலையீடுகளில் தணிவு மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு ஆகியவற்றுடன் சேர்த்து மிதவாதத்தன்மை கொண்டதாக இருக்குமென்று அவர் கூறினார். சர்வதேச உறவுகளைப் பொறுத்தவரை, மேற்குலகம் ஈரானிடமிருந்து 'போதுமான அளவு பிரதிபலிப்பை' எதிர்பார்ப்பதானால், மதிப்பைத் தர வேண்டுமேயன்றி, தடைகளை விதிக்கும் 'மொழியில்' பேசக்கூடாது என்பதே அவரின் நிலைப்பாடாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.



றோஹானியின் வெளியுறவு அமைச்சர் முஹமட் ஜாவாட் சரீவ், ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈரானின் முன்னாள் தூதுவர். அமெரிக்காவுடன் இரகசிய இருதரப்பு பேச்சுகளை முன்னர் நடத்தியவரான சரீவ், மிகவும் குறிப்பிடத்தக்க திறமை வாய்ந்த ஒரு இராஜதந்திரியாவார்.

புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்தில் ஐம்பதுக்கும் அதிகமான நாடுகளின் தலைவர்களும் ஏனைய பிரதிநிதிகளும் பங்கேற்றனர். 1979ஆம் ஆண்டுக்குப் பிறகு ஈரானிய ஜனாதிபதியொருவரின் பதவியேற்பு வைபவத்தில் இவ்வாறாக வெளிநாட்டுத் தலைவர்கள் கலந்துகொண்டது இதுவே முதற்தடவையாகும். அணுத்திட்டம் தொடர்பாக சர்வதேச சமூகத்துக்கு இருக்கக்கூடிய விசனங்களுக்கு 'அமைதி வழியிலான தீர்வொன்றைக் காண்பதை' ஈரான் விரும்புமேயானால், அமெரிக்கா மனமுவந்த ஒரு பங்காளியாகச் செயற்படத் தயாராயிருக்கிறது என்று ஒபாமா நிருவாகம் தெரிவித்திருந்தது.

என்றாலும் றோஹானியின் பதவியேற்பு வைபவத்திலிருந்து அமெரிக்கா விலகியே இருந்தது. முக்கியமான பல விவகாரங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதில் அமெரிக்கா கஞ்சத்தனத்தையே காட்டியது. அத்தகைய முதலாவது விவகாரம், ஈரானுக்கு எதிரான அமெரிக்காவினதும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் தடைவிதிப்புகளாகும். ஈரானுடன் இன்னமும் வர்த்தக, வாணிப நடவடிக்கைகளில் ஈடுபடுகிற நாடுகளைப்

*(44ஆம் பக்கம் பார்க்க...)*

## முஷாரப்பிற்கு எதிராக பெனாசிர் கொலை வழக்கு

பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றம் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பெர்வெஸ் முஷாரப் மீது முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கொலையில் சம்பந்தப்பட்டதாக வழக்குத் தொடுத்திருக்கிறது.

2007 டிசம்பரில் ராவல்பிண்டியில் பெனாசிர் பூட்டோ தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் வைத்து துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பாகிஸ்தானில் முன்னாள் இராணுவத் தளபதியொருவருக்கு எதிராக இதைப்போன்று முன்னொருபோதுமே நடவடிக்கை எடுக்கப்பட்டதில்லை. எந்தக் குற்றத்தையும் செய்ததாக வழக்குத் தொடரப்பட்டதில்லை.

பெனாசிர் பூட்டோவை கொலை செய்தது, கொலைக்கு சதிசெய்தது, கொலை செய்யப்படுவதற்கு வசதி செய்து கொடுத்தது என்ற குற்றச்சாட்டுகள் முஷாரப்பிற்கு எதிராக அரசாங்க வழக்குத்தொடுநரால் ஆகஸ்ட் 20 ஆம் திகதி சுமத்தப்பட்டன.



முஷாரப் தனது 70 ஆவது பிறந்த தினத்தை சில தினங்களுக்கு முன்னர்தான் கொண்டாடியிருந்தார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவி பிள்ளையின் அறிக்கை அமையக்கூடிய சர்வதேச



என்.சத்தியமூர்த்தி

'வரும், ஆனால் வராது,' என்ற வடிவேலுவின் திரைப்பட ஜோக்காக மாறிப்போன ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவி பிள்ளையின் இலங்கைப்பயணமே தனியொரு முக்கியத்துவத்தை பெற்றுவிட்டது. இதற்கு அப்பால் சென்று, இனப் போர்க்கால அரசு செயற்பாடு, போர் முடிந்த பின்னர் இணக்கச் சூழ்நிலை தோன்றுவதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையின் முன்னெடுப்புகள் ஆகியவை தொடர்பான நவி பிள்ளையின் அறிக்கை குறித்த எதிர்பார் ப்புகளும் ஹேஷ்யங்களும் அதற்கான முக்கியத்துவத்தைப் பெறுவது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்றே.

இராஜதந்திர ரீதியாக நவிபிள்ளையின் இலங்கை விஜயமே சர்வதேச சமூகம் ராஜபக்ஷ அரசிற்கு விடுக்கும் செய்தி. கடந்த ஆண்டு, அரசின் ஆவலையும் அழைப்பையும் அவர் ஏற்க மறுத்ததும் இராஜதந்திர அழுத்தத்தின் மற்றொரு முகமே. இதனால் மட்டும் தனது இலங்கை விஜயத்தின் போது நவிபிள்ளை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து விடுவார் என்றல்ல பொருள். அதேசமயம், தனது விஜயத்திற்குப் பின்னர் செப்டம்பர் மாதம் ஜெனீவாவில் அவர் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கும் அறிக்கை குறித்து தமிழ்ச் சமூகமும் அரசியல் தலைமையும் இப்போதே தெளிவான ஒரு கொள்கையை எடுக்க வேண்டியது அவசியம். இதுவே புலம்பெயர் தமிழ்த் தலைமைகளுக்கும் பொருந்தும்.

இதுவரை, ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டங்களில், நவிபிள்ளையின் தலைமை இலங்கை அரசைத் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்துள்ளது. குறை கூறியுள்ளது. அதுவே இப்போதும் தொடரும் என்று தமிழ்ச் சமூகம் எதிர்பார்க்கலாம். சர்வதேச அரங்கில், புலம்பெயர் தமிழர்களில் அரசியல் காய் நகர்த்தல்கள் அத்தகைய எண்ண வோட்டத்தின் அடிப்படையில் கூட அமைந்து விடலாம். ஆனால், அதற்கு மாறாக நவிபிள்ளை தொடர்ந்து அரசைக்குறை மட்டும் கூறாமல், அதன் சிலபல நல்ல முயற்சிகளை ஆதரித்து அறிக்கை கொடுத்தால், அதனை தமிழ்த் தரப்பு எவ்வாறு எதிர் கொள்ளும்?

இனப்பிரச்சினை குறித்து, இலங்கை அரசு தரப்பு மற்றும் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் பற்றியும் குறை கூறுவதற்கு நிரம்பவே விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயின் அடிப்படையில் சமூகத்தின் முடிவுகள்




யங்கள் உள்ளன. ஒவ்வொரு கட்டத்திலும் அன்றைய தமிழ்த் தலைமைகள் அந்தக் குறைபாடுகளை பட்டியலிட்டுக் காட்டியுள்ளன. இன்றளவும் தமிழ்த் தேசியவாதிகளின் அகராதியில் இனப் பிரச்சினை குறித்த விமர்சனங்கள் 1931ஆம் ஆண்டு முதல் அடுக்கடுக்காக முன்வைக்கப்படும். அவை உண்மையும் கூட.

ஆனால், என்றென்றுமே தமிழ்த் தரப்பு தங்களது கடந்தகாலப் பிழைகளை ஏற்றுக்கொண்டதில்லை. அவற்றின் பிரதிபலிப்பே நிகழ்காலம் என்ற சித்தாந்தமும் அவர்கள் அறிந்திராத விடயம். அந்த விதத்தில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தவறுகளை இன்றளவும் தமிழ்ச் சமூகம், காலம் கடந்து கூட ஒத்துக் கொள்ளவில்லை. ஆனால், அன்று விடுதலைப் புலிகள் இயக்கம் விட்ட பிழைகளுக்கு அண்மைய சாட்சியான நோர்வே போன்ற நாடுகளின் வாக்கையும் வாதத்தையும் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. என்றாலும், அவற்றின் அடிப்படையிலேயே சர்வதேச சமூகம் செயல்பட்டது என்பதே உண்மை.

அந்த விதத்தில், தென் ஆபிரிக்கத் தமிழரான நவநீதம்பிள்ளையின் ஆராய்ச்சி முடிவுகளையும் அறிவுரைகளையும் இலங்கை அரசும் தமிழ்த் தலைமைகளும் ஏற்றுக்கொள்கிறதோ, இல்லையோ, அதனை சர்வதேச சமூகம் முழுதாகக் கவனத்தில் கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம். ஜெனீவாவிலும் சரி, பிற உலக அரங்குகளிலும் சரி, சர்வதேசத்தின் முடிவுகள் நவிபிள்ளையின் அறிக்கையை ஒட்டியே இருக்கும் என்று கூட கருத இடமிருக்கிறது.

### வடக்கு மாகாண தேர்தல்

தமிழ் அரசியல் தலைமைகள் என்ன நினைத்துச் செயல்படுகிறதோ, இல்லையோ, வடக்கு மாகாண "தமிழ்த் தேசியவாதிகள்" என்று தங்களை பறைசாற்றிக் கொள்பவர்களில் பலரும் போருக்குப் பிந்தைய கால கட்டத்தில் தங்களது சமூகத்திற்கு எந்தவித நலனும் பலனும் கிடைத்து விடவில்லை என்று கருதியே செயல்பட்டு வருகிறார்கள். "எங்கே அரசு நல்லது செய்து விட்டால், தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொண்டு விடுவார்களோ" என்ற கவலையில் மட்டுமே அவர்கள் செயல்படுகிறார்களோ என்று கூடச் சந்தேகப்பட இடமிருக்கிறது.

அந்த விதத்தில், இனப் போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், வடக்கு மாகாணத்தில் நடந்தேறியுள்ள வளர்ச்சிப் பணிகளை ஏற்றுக் கொண்டு அரசைப் பாராட்டி விடவே கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். அரசைப் பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டி, தட்டிக் கொடுக்க வேண்டிய இடத்தில் தட்டிக் கொடுத்து, தட்டிக் கேட்க வேண்டிய விதத்தில் தட்டிக் கேட்டு செயல்படுவது ஒருவித அரசியல். மாறாக, அரசு எது செய்தாலும், அதில் உள்ள நன்மைகளையும் உண்மைகளையும் ஏற்றுக் கொள்ள மனமில்லாமல், மாறாக, அரசின் தவறுகளையும், அரசின் தவறு என்று தாங்களே கூட கஷ்டப்பட்டு முடிவு செய்து கொள்ள வேண்டியவற்றை மட்டுமே சர்வதேச சமூகத்தின் முன் படம் பிடித்துக் காட்டி வருகிறார்கள் எனலாம்.

இதற்கு உதாரணமாக, வடக்கு மாகாணத்தில் நடந்துள்ள சாலை அபிவிருத்திகளையும், போருக்குப் பின்னர் மக்களுக்குக் கிடைத்துள்ள உயிர், உடல் மற்றும் உடைமைகள் குறித்த மன அமைதியையும் கூறலாம். இவை குறித்து தமிழ்த் தலைமைகளும், தமிழ்த் தேசியவாதிகளும் ஒரு வார்த்தை கூடக் கூறிவிடவில்லை என்பது மட்டுமல்ல, இவை குறித்த நல்லெண்ணம் எதுவும் அவர்களுக்கு தோன்றிவிடவில்லை என்பதும் உண்மை.

இவ்வாறாக, தங்களது மனவோட்டத்தையும் எண்ண இயக்கத்தையும் மழுங்கடித்துக் கொண்டவர்கள், மத்திய அரசு, வடக்கில் மாகாண சபைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலை நடத்துவதை வரவேற்கத் தக்க முயற்சி என்று கருதுவதற்கு இட மில்லை. மாறாக, சர்வதேச சமூக மும், அதனைச் சார்ந்துள்ள ஐ.நா. அமைப்புகளும், வடக்கு மாகாண சபைத் தேர்தலை வரவேற்றால், அதனை ஜீரணித்துக்கொள்ள தமிழ்ச் சமூகம் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். பின்னர், அதனை பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லை என்றால், விடு தலைப் புலிகள் இயக்கத்தின் மீது சர்வதேச சமூகம் கொண்டிருந்த மரியாதையை பிரபாகரன் தலைமை இழந்ததைப் போலவே, தற்போதைய தமிழ்த் தலைமைகளும் இழக்க நேரி டும்.

### அரசியல் தீர்வு?

ஆனால், வடக்கு மாகாண சபைத் தேர்தல் மற்றும் கண்ணால் கண்டு, உணர முடிந்த வளர்ச்சிப் பணிகள் முதலியவை மட்டுமே நவி பிள்ளை யின் அறிக்கையில் இடம்பெறும் என் றல்ல பொருள். அரசியல் தீர்வு, இரா ணுவத்தைப் பின்வாங்குதல் போன்ற பிரச்சினைகளையும் அந்த அறிக்கை அலசி ஆராயும் என்றும் எதிர்பார்க்க லாம். அதைவிட முக்கியமாக, ஜெனீவாவில் அலசி-ஆராயப்பட் டுள்ள இனப்போர் காலத்திய மனித உரிமை மீறல்களில் அரசின் செயல் பாடுகளையும், செயல்பாடற்ற தன் மைகளையும் கூட அந்த அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இதற்கு இடைப்பட்ட காலகட்டத் தில், இனப்போரும் தமிழ்ச் சமூகமும் பங்கு பெறாத, பாதிக்கப்படாத "வெலிவேரியா சம்பவம்" குறித்தும் கூட நவிபிள்ளையின் அறிக்கையில் கருத்து இருக்கலாம். அதுபோன்றே, வடக்கு, வட மேற்கு மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலின் நம்பகத்தன்மை குறித்தும் நவிபிள்ளை தனது அறிக்கையில் சில கருத்துகளை முன்வைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இதில் குறிப்பாக இனப் பிரச்சினை மற்றும் இனப்போர் குறி த்த பகுதிகளில், அவரது அறிக்கை, அரசால் அமைக்கப்பட்ட "கற்றுக்

# மீனவர் பிரச்சினையில் புதிய முயற்சி



அடுத்தடுத்து தமிழ் நாட்டு மீன வர்கள் இலங்கைக் கடல் படையினரால் கைது செய்யப்படு வதும், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு நீதிமன்றக் காவலில் வைக்கப்படுவதும், அந்தச் சமூகத்தி னரிடையே மறுபடியும் கவலை யைத் தோற்றுவித்துள்ளது. அதன் எதிரொலியாக, தமிழ் நாட்டு மீனவர் கள் மீண்டும் ஒரு முறை போராட்டம் அறிவித்துள்ளார்கள். தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவும் இந் தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு காட்டமாக கடிதம் எழுதியுள்ளார். அதன் காரணமாகவோ என்னவோ, மத்திய அரசும் இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரி யவசத்தை வெளியுறவுத் துறைக்கு அழைத்து தனது கவலையைத் தெரி வித்துள்ளது. இராஜதீக மரபின்படி, இந்தியாவின் இந்தச் செயல்பாடு, இலங்கை அரசிற்கு ஒரு நிர்ப்பந்த த்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க் கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க, தமிழ் நாட்டு மீனவர்களின் பிரதிநிதிகள் மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்கள். மாநில மீன் வளத்துறை அமைச்சர் ஜெயபால், தலைமைச் செயலாளர் ஷீலா பால கிருஷ்ணன் ஆகியோரோடு அவர் கள் நடத்திய பேச்சுவார்த்தையில், இலங்கையில் உள்ள தமிழ் மீனவர்க ளுடன் தாங்கள் பேச்சுவார்த்தை நடத்தி தங்களது பிரச்சினைகளுக்கு முடிவு காண, முதலமைச்சர் ஜெயல லிதா வழிவகை செய்ய வேண்டும் என்று கோரிக்கை செய்துள்ளனர். அவ்வாறு, நடைபெறும் பேச்சுவார்த் தையில், மாநில-மத்திய அதிகாரி களும் கல ந்து கொண்டு, தங்களது முயற்சிக்கு அரசு அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்பது அவர்க ளின் சொல்லப்படாத கோரிக்கை.

தமிழ் நாடு மீனவர்களின் தற்போ தைய முயற்சிக்கு வித்திட்டவர் என் னவோ இலங்கைப் பொருளாதார வளர்ச்சி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தான். கடந்த ஜனவரி மாதம் இலங்கை வந்த தமிழ் நாடு மீனவர் பிரதிநிதிகள் சிலருடன் கலந்துரை யாடிய அவர், அண்மையில் புது டில்லி சென்றபோது, தற்போதைய மீனவர் தலைவர்களையும் சந்தித் துப் பேசினார். இரு முறையும், அவர் இரு நாட்டுத் தமிழ் மீனவ சமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க குழுவின்'' அறிக்கை செயல்படுத்தப்படும் விதம் குறித்தே அமையும் என்ற கருத்து நிலவுகிறது. அதுவே, ஜெனீவாத் தீர்மானங்களின் அடிப்படையும் கூட.

தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரையில், வடக்கு மாகாண தேர்தல் அமைதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. அது தமிழர்களுக்கு என்றல்ல, நாட்டில் உள்ள அனைத்து சமூக மக்களின் அடிப்படை உரிமையும் கூட. இது இலங்கை என்றல்ல, எல்லா ஜனநாயக நாடுகளுக்கும் பொருந்தும். அதேசமயம், தேர்தல் முறைகேடுகள் நடைபெற்றால், அதனை அரசியல் ரீதியாக மட்டுமே பார்த்து அதனை எதிர்க்கும், எதிர்நோக்கும் மனப்பக்குவத்தை தமிழ்த் தலைமைகளும் மக்களும் கூட பெற வேண்டும்.

மாறாக, தேர்தல் முறைகேடுகள் இனப்பிரச்சினையின் ஓர் அலகு போல எண்ணிச் செயல்பட்டால், அதனால் தமிழ்ச் சமூகம் தன்னைத் தானே தொடர்ந்து ஏமாற்றிக்கொண்டு வருகிறது என்றே அர்த்தம். அதிலும் குறிப்பாக தமிழ் அறிவு ஜீவிகள் இது போன்ற பொய்மைக்கு இடம் கொடுக்கக் கூடாது. காரணம், இலங்கை என்றல்ல, தெற்கு ஆசியாவில் அனைத்து நாடுகளிலுமே, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், இனம், மதம், மொழி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு, இதுபோன்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வந்துள்ளன.

மாறாக, அந்த நாடுகளில் எங்குமே, 2001 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் வாக்காளர்களை அச்சுறுத்தி தேர்தல் முடிவுகளை தன் இஷ்டப்படி மாற்றிக் கொண்டதைப் போன்ற நிகழ்வுகள் அரங்கேறியதே இல்லை எனலாம். அதன் பயனாளிகள் யார்? தொடர்ந்து, கொழும்பில் இருந்து அரசு நடத்தி, தேர்தல்களின் வெளிப்படைத் தன்மையை இல்லாது ஆக்குவதாக சிங்களத் தலைமைகளை குற்றம் சாட்டி வந்துள்ள தமிழர்கள் தான்! ■

தாயப் பிரதிநிதிகளால் மட்டுமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற எண்ணத்தை வலியுறுத்தினார். அதுபோன்றே, தமிழ் நாடு மீனவப் பிரதிநிதிகள் இலங்கை வரும்போது, அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சந்தித்து, பிரச்சினைக்கு முடிவு காண வழி செய்வதாகவும் வாக்குறுதி அளித்தார்.

### அரசியல் தயக்கம்?

மீனவச் சமுதாயப் பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பது இரு நாட்டு அரசுகளும் சில ஆண்டுகளுக்கு முன்பாகவே ஏற்றுக்கொண்ட விடயம். இலங்கையில் இனப்போர் உச்சகட்டத்தில் இருக்கும் போதும், போர் முடிவிற்கு வந்த பின்னரும் கூட இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் உயர் மட்டத்தில் ஏற்றுக்கொண்டு, பல்வேறு சமயங்களில் இதை வலியுறுத்திக் கூறி வந்துள்ளனர். இனப்போர் முடிவிற்கு வந்த காலகட்டம் தொடங்கி இரு நாட்டு அரசுகளுக்கு இடையேயான மீனவர் பிரச்சினை குறித்த உயர்மட்ட அதிகாரிகள் குழுக் கூட்டங்களிலும் இந்தக் கருத்தை இரு சாராரும் வலியுறுத்தி வந்துள்ளனர். அந்தக் கூட்டங்களில் தமிழ் நாடு அரசின் பிரதிநிதியாக, முன்பு எப்போதும் இல்லாமல் ஓர் உயர் அதிகாரி பங்குபெற்று அந்தக் கருத்தை ஏற்று வந்துள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு தொடங்கி, இரு நாட்டு தமிழ் மீனவப் பிரதிநிதிகள் இடையே நடந்து வந்த மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தற்போது முக்கிய கட்டத்தில் முன்னேற்றம் இல்லாமல் தத்தளிக்கிறது. அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு தமிழ் நாடு மீனவர்கள் இலங்கை செல்ல வேண்டும் என்று இருக்கும் நிலையில் அதனைச் செயல்படுத்த தமிழ் நாடு அரசு ஏனோ தயக்கம் காட்டுகிறது என்றே எண்ணத் தோன்றுகிறது. இலங்கைப் பயணம் குறித்து, இந்தியாவின் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுவரும் நினைவூட்டு கடிதங்களுக்கு எல்லாம் கடந்த ஓராண்டுக்கும் மேலாக அது மௌனத்தையே பதிலாக அளித்து வந்துள்ளது. மாறாக, இலங்கைக் கடல் படையினரால் தமிழ் நாடு மீனவர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் அதுகுறித்து ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு காட்டமாக கடிதம் எழுதியுள்ளார். அவற்றை மாநில அரசு பத்திரிகைகளும் உடனடியாகவே வெளியிட்டு வந்துள்ளன.

### மீறப்பட்ட ஒப்பந்தம்

கடந்த 2010-ஆம் ஆண்டு பாக்கு நீரிணையின் மறுபக்கத்தில் உள்ள இராமேஸ்வரம், நாகபட்டினம் போன்ற தென்தமிழ் நாட்டு மீனவர் சமுதாயங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய இலங்கை மீனவப் பிரதிநிதிகள் ஒரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டனர். அதன்படி, தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடல் பகுதியில் வருடத்திற்கு 72 நாட்கள் தொழில் செய்யலாம் என்றும், யாழ்ப்பாணப் பகுதியில் கரையை ஒட்டி ஐந்து மைல்கள் வரையிலும் அவர்கள் பயணிக்கலாம் என்றும் இலங்கை மீனவர்கள் ஏற்றுக்கொண்டனர். அதுபோன்றே, இலங்கை அரசால் தொடர்ந்து தடை செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட படகுகளையும் மீன் வலைகளையும் தாங்கள் பயன்படுத்த மாட்டோம் என்று தமிழ் நாடு மீனவர்கள் உறுதியளித்தனர். இந்தப் பேச்சுவார்த்தைகளில் இரு நாட்டு மத்திய அரசுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

என்றாலும், இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்படாமலே இருந்து வருகிறது. காரணம், தடை செய்யப்பட்ட படகுகள் மற்றும் வலைகளைப் பயன்படுத்தமாட்டோம் என்று உறுதியளித்த தமிழ் நாடுப் பிரதிநிதிகள், அதனை தங்களது மீனவ சமுதாயம் செயல்படுத்துவதை உறுதிசெய்ய முடியவில்லை. இன்னும் சொல்லப்போனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையில் நடந்த பேச்சு வார்த்தைகள் இந்த ஒரே காரணத்தி னால் முன்னேற்றம் காணவில்லை என்று செய்திகள் தெரிவித்தன. அவ் வாறாகி இருந்தால், தற்போதைய கைது நடவடிக்கைகளுக்கு தேவை இருந்திருக்காதோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத் திட்ட இரு நாட்டு மீனவர் பிரதிநிதி களும் குறிப்பாகப் பாதிக்கப்பட்ட சமுதாயங்களையும் தொழில் ரீதி யான மீனவர்களையும் முழுவது மாகப் பிரதிபலிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அப்போதே எழுந்தது. என்றாலும், அந்த ஒப்பந்தம் செயல் படுத்தப்படமாட்டாது என்ற எண் ணத்திலேயே தொழில் ரீதியான மீன வர்கள் அது குறித்த தங்களது எதிர்ப்பைப் பிரகடனப்படுத்த வில்லை. ஆனால், அவர்களது பிரதி நிதிகள் தான் தற்போது, தமிழ் நாடு அரசு, தாங்கள் இலங்கை சென்று அங்குள்ள தமிழ் மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வகைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். அதுமட்டு மல்ல, தங்களது பேச்சுவார்த்தை முன்பு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருக்கும் என்றும் சமிக்ஞை காட்டியுள்ளனர்.

## அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கை?

தமிழ் நாடு அரசு பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய மீனவப் பிரதிநிதிகள், இலங்கைக் கடலில் தொடர்ந்து வரும் பிரச்சினையால், தாங்கள் மாற்றுத் தொழில் திறனை வளர்த்துக் கொள்வதற்கும் அரசின் உதவியைக் கோரியுள்ளனர். அதன் படி, ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் வாங்குவதற்கு மத்திய-மாநில அரசு கள் தங்களுக்கு நிதியுதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளனர். அதுபோன்றே, இலங்கைக்கு அருகாமையில் உள்ள இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை மேற் கொள்ள வழிசெய்யும் முகமாக, தனுஷ்கோடி கடல் பகுதியில் கால் வாய் வெட்டித் தரவேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளனர். இந்த கடல் பகுதியில் 'இராமர் பாலம்' வழக்கில் இந்திய உச்ச நீதி மன்றம் சாதகமான தீர்ப்பளித்தால் மட்டுமே இது குறித்து மத்திய-மாநில அரசு கள் முடிவு எடுக்க முடியும்.

ஆனால், கடந்த 2011ஆம் ஆண்டு மீண்டும் தமிழ் நாட்டில் பதவிக்கு வந்த ஜெயலலிதா தலைமையிலான அ.இ.அ.தி.மு.க அரசு, தற்போதைய படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப் பிற்கு ஏற்றவகையில் மாற்றி அமைத் துக்கொள்ள 25 சதவீத மானியம் வழங்குவதாக அறிவித்தது. இந்த ஆண்டு, மாநில பட்ஜெட்டில் அந்த மானியம் 50 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது. என்றாலும், இந்தத் திட் டத்தை செயல்படுத்துவதில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை என்று மீனவர்கள் கருதுகிறார்கள். அதில் முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் (மட்டுமே), இலங்கை கடல்பகுதி யில் தொழில் செய்யும் தமிழ் நாட்டு மீனவர்கள், மாற்றாக ஆழ்கடல் மீன்பிடியில் இறங்க முடியும்.

இனப் போருக்குப் பின்னர், முப் பது ஆண்டு காலத்திற்குப் பிறகு, தங் களது கடல் பரப்பில் இலங்கைத் தமிழ் மீனவர்கள் தொழில் செய்ய வேண்டிய நியாயத்தை தமிழ் நாடு மீனவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அதேசமயம், தங்களது வாழ்வா தாரப் பிரச்சினைக்கும் அவர்கள் பதிலை எதிர்பார்க்கிறார்கள். அவர்க ளில் சிலராவது, அதிக லாபம் ஈட் டும் நோக்கத்தில் மட்டுமே இலங் கைக் கடல் பரப்பில் சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் தொழில் செய் கிறார்கள். அவர்களை இந்திய கரை யோரங்களிலேயே தடுத்து நிறுத்து வது தமிழ் நாடு அரசின் கைகளில் மட்டுமே உள்ளது. அதனால்தான், தற்போது தமிழ் நாடு மீனவப் பிரதிநி திகள் மாநில அரசின் உதவியை நாடி யுள்ளனர்.

அதுபோன்றே, எதிர்வரும் வடக்கு மாகாண தேர்தலுக்குப் பின்னர் அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தமிழ்த் தலைமை அரசாங்கம் அமை யும் என்பதனை தமிழ் நாடு மீனவர் தலைவர்கள் அறிந்தே உள்ளார்கள். தற்போது தமிழ் நாட்டில் உள்ளது போலவே, அங்கு தோன்றும் அரசி யல் போட்டி மனப்பான்மையில், இரு நாட்டு மீனவர் பிரச்சினை இரு சாராருக்கும் இடையே சண்டை மூட்டிவிடுவதாக அமைந்துவிடும் என்பதனையும் அவர்கள் உணர்ந்தே உள்ளார்கள். அந்த விதத்தில், தங் களது வாழ்வாதாரப் பிரச்சினையை அரசியலாக்கி, அதன் காரணமாக, இலங்கை அரசியல் மற்றும் அரசு தலைமைகளை உரசிப் பார்த்து, அதில் சிக்கித் தவிக்கும் தங்களின் கஷ்டங்களில் தமிழ் நாடு அரசியல் கட்சிகளும் தலைவர்களும் குளிர் காய நினைக்கிறார்கள் என்ற எண் ணம் அவர்களுக்கு தோன்றத் தொடங்கியுள்ளது.

அதாவது, தாங்கள் குறிப்பிட்டுக் கோரும் போது மட்டும், இலங்கையு டனான மீனவர் பிரச்சினையில் தமிழ் நாடு அரசியல் மற்றும் அரசு தலை மைகள் தலையிட்டால் போதும் என் றும், மற்றப்படி இந்தப் பிரச்சி னையை இரு நாட்டு மீனவர்களும் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என் பதையும் இந்திய சமுதாயத் தலை வர்கள் உணர்ந்துள்ளனர். அந்த எண் ணத்தின் வெளிப்பாடே, அவர்கள் தமிழ் நாடு அரசுக்கு விடுத்துள்ள கோரிக்கையும், இலங்கை அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் நடத்திவரும் பேச்சுவார்த்தையும்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க எம்.பி.

## நவி பிள்ளையின் விஜயம்

# வாய்ப்பா, அச்சுறுத்தலா?



உள்நாட்டு அரசியல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயத்தை இந்த நாட்டில் மனித உரிமைகள் தொடர்பில் கொள்கைகளையும் நடைமுறைகளையும் மேம்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கக்கூடிய ஒரு சிறந்த சந்தர்ப்பமாக நோக்க முடியும். இச்சந்தர்ப்பம் பயன்படுத்தப்படுமென்றும் நவநீதம்பிள்ளை ஒரு அச்சுறுத்தலாக நோக்கப்படமாட்டார் என்றும் நான் நம்புகிறேன்.

ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் பதவிக்கு வந்த ஆரம்ப கட்டத்தில் நவநீதம்பிள்ளை செய்த சில அறியாப்பிழைகள் அவரைப் பற்றி எமது மனதில் தவறான எண்ணங்களை உருவாக்கிவிட்டன.குறிப்பாக, 2009 ஆம் ஆண்டு பிரிட்டனின் முன்முயற்சியினால் கூட்டப்பட்ட ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் விசேட கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது எம்மை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட அறிக்கையொன்றை அவர் விடுத்தார். பயங்கரவாதத்தை நாம் ஒழித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் இலங்கை தொடர்பில் சமநிலையான அணுகுமுறையை அமெரிக்கா கொண்டிருந்தது என்று நாம் நினைத்த வேளையில் நவிபிள்ளையின் அந்த அறிக்கையை வாஷிங்டனும் ஆதரித்ததாக பின்னர் விக்கிலீக்ஸ் மூலமாக அறியக்கூடியதாக இருந்தது பெரும் கவலை தருகிறது.

அந்த நேரத்தில் தான் கூறியதை அவர் நம்பியிருக்கக்கூடும். ஆனால், இலங்கையின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு விசேட கூட்டத்தொடர் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு நவிபிள்ளை தொடர்ந்தும் இலங்கையைக் கண்டித்துக் கொண்டிருந்தது தான் மிகவும் மோசமானதாகும். அடுத்த வழமையான கூட்டத் தொடரில் அவர் விடுத்த அறிக்கை மனித உரிமைகள் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்த்துரைப்பது போலத் தோன்றியது. இதற்காக ஜெனீவாவில் உள்ள இந்திய பிரதிநிதியினால் நவிபிள்ளை வெளிப்படையாகக் கண்டிக்கப்பட்டார். அதற்குப் பிறகு நவிபிள்ளை முறையற்றது என்று கருதப்படக்கூடிய எதையுமே செய்யவில்லை என்பதைக் கூறிக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எவ்வாறெனினும், அந்த நேரத்தில் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய நிலைப்பாடு இன்று வலுவடைந்து காணப்படுகிறது. அதற்கு பிரதானமாக நமது சொந்தத் தவறுகளே காரணம் என்பதை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். முதலாவதாக, மனித உரிமைகள் பேரவையில் நாம் கட்டியெழுப்பிய ஆதரவை மூன்றாம் உலக நேச அணிகளை அலட்சியம் செய்ததன் மூலமாக தூக்கியெறிந்தோம். பதிலாக வெளியுறவு அமைச்சுக்குள் இருந்த தனபாலா ரசிகர்களின் சிந்தனையே செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருந்தது. ஆபிரிக்கர்களை நம்பக்கூடாது. அணிசேரா கொள்கைக்குப் பதிலாக, மேற்குல

> ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் பதவிக்கு வந்த ஆரம்ப கட்டத்தில் நவநீதம் பிள்ளை செய்த சில அறியாப்பிழைகள் அவரைப்பற்றிய எமது மனதில் தவறான எண்ணங்களை உருவாக்கி விட்டன. நாளடைவில் முறையற்றது என்று கருதப்படக் கூடிய எதையுமே அவர் செய்யவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கில் உள்ள எமது பாரம்பரிய நண்பர்கள் என்று வர்ணிக்கப்படுபவர்களுடன் நெருக்கமாக வேண்டும் என்பதே இந்தச் சிந்தனையாகும். இதெல்லாம் இந்தியாவை அவமதிப்பதாக இருந்ததுடன், உண்மையான ஒரு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமொன்றின் வெளியுறவுக் கொள்கைக்கும் எதிரானதாக அமைந்தது.

எமது இரண்டாவது தவறு நாம் அளித்த வாக்குறுதிகளை துரிதமாக நிறைவேற்றத் தவறியமையாகும். நாமும் எமது நண்பர்களும் ஆதரித்த மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தில் உள்ளவை மாத்திரமல்ல, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் சேர்ந்து ஜனாதிபதி வெளியிட்ட கூட்டறிக்கையில் உள்ள வாக்குறுதிகளும் இந்தியாவுடன் சேர்ந்து விடுத்த கூட்டறிக்கையில் உள்ள வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. ஐ.நா. தீர்மானத்துக்காக தயான் ஜெயதிலகவை குறைகூறுவது இலங்கை மக்களின் வஞ்சகத்தனமான தேசியவாத எதிரிகள் மத்தியில் ஒரு புதுப் பாணி நடைமுறையாகிவிட்டது. ஆனால், அவமதிப்பாக அமைந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டவற்றுக்கு அதாவது, கூட்டறிக்கைகளில் இருந்து எடுக்கப்பட்டு ஐ.நா. தீர்மானத்தில் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு ராஜபக்ஷாக்களே பொறுப்பாகும்.

இந்தத் தேசியவாதிகள் கூறுவதைப் போன்று, ஜனாதிபதி தவறாக வழி நடத்தப்பட்டுவிட்டார் என்று கூறி தயான் ஜெயதிலகவைக் குற்றஞ்சாட்டுவது முட்டாள்தனமானதாகும். அந்த நேரம் கண்டியில் இருந்த ஜனாதிபதிக்கு வெளியுறவு அமைச்சே ஆலோசனை கூறியது. அத்துடன், அந்தவேளையில் வெளியுறவு அமைச்சின் செயலாளராக இருந்த பாலித கோஹன அறிக்கையில் இருந்த சில அம்சங்கள் குறித்து தான் எச்சரிக்கை செய்ததாக என்னிடம் கூறியிருந்தார். அறிக்கையில் இருந்த அரசியல் கடப்பாடுகள் பற்றிய அம்சங்கள் தொடர்பில் கருத்து வேறுபாடு இருக்கவில்லை. தொடர்ந்து முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணித்தார். அவர் இணங்கியவற்றை துரிதமாக நடைமுறைப்படுத்துமாறு அவரின் ஆலோசகர்களில் எவருமே தூண்டுதல் கொடுக்கவில்லை. இதையடுத்தே ஐ.நா.செயலாளர் நாயகம் தனது சொந்தத்தில் நடவடிக்கையை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

அந்த நடவடிக்கையின் விளைவுகளே தருஸ்மன் அறிக்கையும் பேட்ரீ அறிக்கையுமாகும். அவையிரண்டும் இலங்கைக்கு மாத்திரமல்ல, இலங்கை மக்களின் நலன்களுக்காக அரசாங்கத்துடன் சேர்ந்து வழமையாகச் செயற்படுகிற ஐக்கிய நாடுகள் கட்டமைப்புக்கும் கூட படுமோசமாக நேர்மையற்றவையாக அமைந்திருந்தன என்றே நான் நம்புகிறேன். ஆனால், அந்த அறிக்கைகளில் கூறப்பட்டவற்றை விரிவான முறையில் மறுதலிப்பதில் நாம் அக்கறைப்படவில்லை என்பதனாலும், தருஸ்மன் அறிக்கை வெளிவந்த உடனடியாகவே நான் முன்வைத்த கேள்விகளை வெளியுறவு அமைச்சு அலட்சியம் செய்ததனாலும், எம்மை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கு அவை




(அறிக்கைகள்) மனித உரிமைகள் பேரவையின் இருதீர்மானங்களுக்கு பங்களிப்பைச் செய்தன என்று எம்மால் முறையிட முடியாது.

2012ஆம் ஆண்டில் எமக்கு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டதற்கு மத்தியிலும் நாம் சுமார் ஒருவருட காலமாக (தமரா குணநாயகத்தைப் பதவி நீக்கியதைத் தவிர) எதையுமே செய்

**நவி பிள்ளையை சந்திக்கும் பட்சத்தில் மகிந்த சமரசிங்க தான் இவ்வளவு வருடங்களும் செய்து கொண்டிருப்பதை உள்ளதை உள்ளப்படி கூற வேண்டியிருக்கிறது. இதை அவர் இலங்கை அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடாக இனிமேலும் முன்வைக்க முடியாது. ஏனென்றால் மனித உரிமைகள் விவகாரத்தைப்பற்றி அவர் பேசிக்கொண்டிருக்கிறாரே தவிர அதைக் கையாளுவதற்கான ஆணை உண்மையில் அவருக்கில்லை**

யவில்லை. இந்தியாவுடனும் மூன்றாம் உலக நாடுகளுடனுமான தமரா குணநாயகத்தின் உன்னதமான உறவுகள் எமது பழைய நேச அணிகளின் (2009 இன்) ஆதரவை மீண்டும் பெறுவதற்கு பெரிதும் உதவின. ஆனால், தங்களுக்குள் தகராறுப்பட்டுக்கொண்ட இரு அமைச்சர்களின் தலைமையிலான பெருவாரியானோரைக் கொண்ட தூதுக்குழுவின் செயற்பாடுகளினால், தமராவின் பணிகள் சாத்தியமற்றவையாக்கப்பட்டன. இரு அமைச்சர்களும் எமது நோக்கத்தைச் சேதப்படுத்தக்கூடிய அறிக்கைகளை வெளியிட்டனர். ஜனாதிபதியின் செயலாளர் மேற்கொண்ட துரித நடவடிக்கையே உண்மையில் செயற்திட்டம் (Action plan) ஆராய்வுக்கெடுக்கப்படக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியது. ஆனால், அதன் நடைமுறைப்படுத்தல் தாமதமாகியது. தாமதப்படுத்துவதை நோக்கமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட நிறைவேற்று அதிகாரி மேலும் கூடுதலான உயர்பதவி யொன்றுக்கு அனுப்பப்படும்வரை, செயற்திட்டத்தின் சிற்பியான திருமதி. விஜயதிலக செயலணிக் குழுவின் கூட்டங்களுக்குக் கூட அழைக்கப்படவில்லை.

இப்போதாவது அரசாங்கம் ஒரு முக்கியமான விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் அடிப்படையில் நோக்குகையில், நவிபிள்ளை சந்திக்க வேண்டிய மிகவும் முக்கிய புள்ளி திருமதி விஜயதிலகவே. ஆனால், வெளியுறவு அமைச்சு செயற்படுகின்ற விதத்தையும் திருமதி. விஜயதிலகவை பொறுத்தவரை, வெளியுறவு அமைச்சர் காட்டுகிற பகைமையுணர்வையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அவரை நவிபிள்ளை சந்திப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றே யோசிக்க வேண்டியிருக்கிறது. எனவே, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயலணிக்குழு (LLRC Task Force)வுடன் நவிபிள்ளை விரிவான சந்திப்பொன்றை நடத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படப் போவதில்லை.

நவிபிள்ளையின் அக்கறைக்குரிய இரண்டாவது விவகாரம் மனித உரிமைகளாகும். ஆனால், அங்கும் ஒரு பெரிய ஓட்டை ஒன்று இருக்கிறது. செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்புக்குரியவராக அமைச்சர் மகிந்த சமரசிங்கவே கருதப்படுகிறார். ஆனால், அவர் அதிகாரமற்றவராக, முற்றிலும் வலுவற்றவராக இருக்கிறார். இதை அவரே கூறியிருக்கிறார். நடைமுறைப்படுத்தலை துரிதப்படுத்துவதற்கு செயலணிக்குழுவைக் கூட்டுவதற்கு என்னை சமரசிங்க நியமித்தார். அந்தப் பதவியை ஆரம்பத்தில் மொஹான் பீரிஸ் எதிர்பார்த்ததாக எனக்குக் கூறப்பட்டது. அப்படியிருந்தும் அமைச்சர் துணிச்சலுடன் என்னை நியமித்தார். ஆனால், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஒத்துழைத்த போதிலும், உண்மையான செயற்பாடு மந்த கதியிலேயே இருந்தது. அதை உந்தித் தள்ளுவதற்கான ஆணை எனக்கு இல்லை. உகந்ததொரு செயலகம் இல்லாததால் நாமும் எதையும் செய்ய இயலாதவர்களாகவே இருந்தோம். அமைச்சருடன் இது குறித்துப் பேசினேன். மாற்றங்களைச் செய்வதாக அவரும் உறுதியளித்தார். ஆனால், எதுவும் நடைபெறுவதாக இல்லை. நான் இராஜினாமா செய்தேன். எனக்குப் பதிலாக வேறொருவர் இன்னமும் நியமிக்கப்படவில்லை.

அமைச்சர் பதவிவிலகவில்லை என்பதற்காக நான் அவரைக் குறை கூறவில்லை. அவர் வளர்ந்துவருகிற ஒரு இளம் அரசியல்வாதி. பிரகாசமான அரசியல் எதிர்காலமுடையவர். நான் வேறுபட்ட நிலையில் இருப்பவன். ஆனால், நவிபிள்ளையைச் சந்திக்கும் பட்சத்தில் அவர் தான் இவ்வளவு வருடங்களும் செய்துகொண்டிருப்பதை உள்ளதை உள்ளபடி கூறவேண்டியிருக்கிறது. அத்துடன், இதை அவர் இலங்கை அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடாக இனிமேலும் முன்வைக்க முடியாது. ஏனென்றால், மனித உரிமைகள் விவகாரத்தைப் பற்றி அவர் பேசிக் கொண்டிருக்கிறாரே தவிர, அந்த விவகாரத்தைக் கையாளுவதற்கான ஆணை உண்மையில் அவருக்கு இல்லை. எமக்கு எதிரான சர்வதேச சமரைப் பொறுத்தவரை, அமைச்சர் சமரசிங்க இரு பீரிஸுகளினதும் அணியில் இல்லை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இத்தகைய ஆட்களுடன் தான் நவிபிள்ளை சந்திப்புகளை நடத்தப்போகிறார். அதனால், சமரசிங்க நவிபிள்ளையைச் சந்திக்கும் போது அவருடைய அக்கறைகளைத் திருப்திப்படுத்தக் கூடியதாக எதையும் கூறுவதற்கு தன்னை அர்ப்பணிக்க முடியாது. நான் நீண்டகாலமாகக் குரல் கொடுத்துவந்திருக்கிற உரிமைகள் சட்ட மூலத்தை (Bill of Rights) நிகழ்ச்சி நிரலில் சேர்த்தால் மாத்திரமே அவரால் எதையும் சாதிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால், அவர் இன்னமும் அதுவிடயத்தில் ஜாக்கிரதையாகவே இருக்கிறார்.


அரசாங்கம் அதன் சொந்த செயற்திட்டங்களைப் (Action plans) பொறுத்தவரை நடவடிக்கைகள் இடம்பெற்றிருப்பதாகக் காண்பிக்க வேண்டிய மிகவும் முக்கியமான இரு பகுதிகள் இவையாகும். ஆனால், தற்போது கிளம்பியிருக்கிற அக்கறைகள் பற்றியும் அவற்றைத் திருப்திப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்று நடவடிக்கைகள் பற்றியும் அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். இது நவிபிள்ளைக்காக அல்ல, எமது சொந்தப் பிரஜைகளுக்காக. வெலிவேரியா போன்ற பிரச்சினைகள் உகந்த முறையில் கையாளப்படவேண்டும். அதற்கு செயற்பாட்டுக்கான உகந்த ஒரு கட்டமைப்பும் எமக்குத் தேவை. அதன் காரணத்தினால் தான், நல்லிணக்கத்தையும் உள்ளடக்கக்கூடியதாக மனித உரிமைகள் விவகாரத்துக்கென்று தனியானதொரு அமைச்சு ஏற்படுத்தப்படும் வரை நிலைவரங்களில் மேம்பாடு ஏற்படப் போவதில்லை என்பதில் நான் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

இந்தப் பதவிக்கு மகிந்த சமரசிங்கவை நியமிக்கவில்லையானால், ஜனாதிபதி தானே அந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டு சமரசிங்கவை பிரதியமைச்சராக வைத்திருக்கலாம். அமைச்சின் செயலாளராக திருமதி. விஜயதிலகவை நியமிக்கலாம். அவ்வாறு என்றால்தான் சமரசிங்க தொடர்ந்து முறைப்பாடு செய்து கொண்டிராமல் கூடுதலான அளவுக்கு அதிகார பூர்வமாகப் பேசமுடியும். திருமதி. விஜயதிலகவும் கூடுதலான அளவுக்கு பயனுறுதியுடைய முறையில் செயற்படக்கூடியதாக இருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உள்நாட்டு அரசியல்



# தேர்தலுக்குப் பிறகு விக்னேஸ்வரன் எதிர்நோக்கப் போகும் சவால்கள்

சிறப்பான நிருவாகம் ஒன்றை நடத்தக்கூடிய ஆற்றல் விக்னேஸ்வரனுக்கு இருப்பதாக படித்த தமிழர்கள் நம்புகிறார்கள். இடையூறின்றி பணியாற்ற அனுமதிக்கப்பட்டால் அத் தகைய நிருவாகத்தை அவரால் நடத்தக்கூடியதாக இருக்கும் என்பது உண்மையே



குமார் டேவிட்

செப்டெம்பரில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை ரத்துச் செய்வதற்கு சாக்குப் போக்கொன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கண்டுபிடிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்றே தோன்றுகிறது. ஆனால், வெலிவேரியா துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் ஆவேசத்தைக் கிளப்பியிருப்பதால் எதையும் கடும் நிச்சயமாக எவரினாலும் கூறிவிட முடியாது. இச்சம்பவம் மத்திய மாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செல்வாக்கைக் குறைத்துவிடக்கூடிய சாத்தியம் பெருமளவுக்கு இருக்கிறது. வடமாகாணசபையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வென்றெடுக்கும். அது எப்போதோ முடிந்த முடிவு. ஏனைய இரு மாகாணங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தோல்வியடையக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுமானால், அது ராஜபக்ஷ ஆட்சிக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. ஒரு மாகாண சபையிலேனும் ஆளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி தோல்வி காணுமேயானால், அது இந்த ஆட்சியின் முடிவின் ஆரம்பமாகவே இருக்கும். அதனால், தேர்தல்கள் நடைபெறும் என்பது குறித்து திட்டவட்டமாகக் கூறமுடியாத வகையில் ஒரு கேள்விக்குறி இன்னமும் இருக்கிறது என்பதையும் மறுதலிப்பதற்கில்லை.

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும் வடமாகாண சபையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மிகவும் எளிதாகக் கைப்பற்றும் என்ற கற்பிதத்தின் அடிப்படையிலேயே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது. அதாவது, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாணத்தின் முதலமைச்சராகப் பதவியேற்பார் என்று சொல்ல வருகிறேன் என்பதைப் புரிந்துகொள்வீர்கள். வடக்கில் தேர்தலில் வெற்றிபெறுவதும் அவர் பதவியேற்பதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை மிகவும் சுலபமான காரியங்கள். அதைச் சொல்வதிலும் எமக்கு கஷ்டமேதுமில்லை. ஆனால், தேர்தலுக்குப் பிறகுதான் கஷ்டமான கட்டம் ஆரம்பமாகும். விக்னேஸ்வரனும் அவரது நிருவாகமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் எதிர்நோக்கப்போகிற மிகவும் முக்கியமான ஐந்து சவால்களைப் பற்றியதே இக்கட்டுரை. எனது கருத்துகள் விவாதமொன்றைத் தூண்டிவிடுமென்றும் கூடுதலான புதிய சிந்தனைகளுக்கு கதவைத் திறந்துவிடுமென்றும் எதிர்பார்க்கிறேன்.

### ஐந்து முக்கிய சவால்கள்

புதிய வடமாகாண நிருவாகத்துக்கு ஐந்துக்கும் கூடுதலான பெரிய சவால்கள் இருக்கின்றன. ஆனால், முன்னுரிமை அடிப்படையில் முதலில் ஐந்து சவால்களை எடுத்துக்கொள்கிறேன்.

1. மத்திய அரசாங்கத்தினாலும் ஆளுநராலும் சிவிலியன் வாழ்வில் அட்டகாசமாகத் தலையீடு செய்துகொண்டிருக்கின்ற இராணுவத்தினாலும் வேண்டுமென்றே அல்லது தற்செயலாகச் செய்யப்படக்கூடிய இடையூறுகளில் இருந்து வடமாகாண நிருவாகத்தைப் பாதுகாத்தல்.
2. வடக்கில் இராணுவமய நீக்கத்தைச் செய்து தமிழ் மக்களின் பாதுகாப்பையும் பத்திரத்தையும் உறுதிசெய்தல், ஒரு அந்நியப் படையின் ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கின்ற பிராந்தியத்தை ஒத்த நிலைமையை முடிவுக்குக் கொண்டுவருதல்.
3. இராணுவத்தினால் அபகரிக்கப்பட்ட பெருமளவு நிலப்பிரதேசங்களை மீளப்பெற்று, சுமுகமான மீள்குடியேற்றத்தை உறுதி செய்தல். போரின் விளைவாக விதவைகளானோரினதும் அநாதைகளானோரினதும் பிரச்சினைகளைக் கையாளுதல்.

> விக்னேஸ்வரன் எதிர்நோக்கப்போகும் மிகப்பெரிய இடையூறு ஜனாதிபதியும் ஆளுநரும் வடக்கில் நிலைகொண்டிருக்கும் இராணுவமுமேயாகும். வடமாகாண நிருவாகம் ஒன்று வெற்றி பெறுவதை இவர்களில் எவரும் விரும்புவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது

4. பொருளாதாரச் செயற்பாடுகளுக்காகவும் அன்றாட அலுவல்களுக்காகவும் துடிப்பானதும் ஆற்றல் வாய்ந்ததும் பயனுறுதியுடையதுமான நிருவாகமொன்றைக் கட்டியெழுப்புதல், இந்த நோக்கத்திற்காக திறமையும் தகுதியும் வாய்ந்தவர்களை ஆட்திரட்டல் செய்தல்.
5. கட்சியொன்றின் ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குள் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பல கட்சிகளை உள்ளடக்கிய ஒரு அணி) பணியாற்றுதல். கட்சி இயக்க ஆற்றல் மற்றும் கட்டுப்பாட்டு அனுபவம் ஏதும் இல்லாதவர் விக்னேஸ்வரன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை விரைவாகக் கற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருக் கிறது.

விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட் டமை குறித்து படித்த தமிழர்கள் பெருமகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். சிறப்பான நிருவாகமொன்றை நடத் தக்கூடிய ஆற்றல் அவருக்கு இருப்ப தாக இந்த படித்த தமிழர்கள் நம்புகி றார்கள். இடையூறுகள் இன்றி பணி யாற்ற அனுமதிக்கப்பட்டால் ஒரு சிறப்பான நிருவாகத்தை விக்னேஸ் வரனால் நடத்தக்கூடியதாக இருக்கும் என்பது உண்மையே. இது விடயத் தில் 'ஆனால்' என்ற கேள்வியொன்று எழுகிறது. ஏனைய மாகாணங்களில் முதலமைச்சர்கள் என்று சொல்லிக் கொண்டு திரிகிற பேர்வழிகளை விட வும் விக்னேஸ்வரன் மிகவும் வேறு பட்ட தினிசு என்பது நிச்சயம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் எத்தனை உள்ளூராட்சி மற்றும் மாகாண அரசியல்வாதிகள் கொலை காரர்களாகவும் பாலியல் வல்லுறவு போன்ற படுமோசமான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களாகவும் போதைப் பொருள் கடத்தல்காரர் களாகவும் இருக்கிறார்கள்? விக்னேஸ்வரன் கண்ணியமானவர், நேர்மையானவர், படித்தவர், புத்திக் கூர்மையுடையவர். மாகாண சபை நிருவாகங்கள் என்று சொல்லிக் கொண்டு நடத்தப்படுகின்ற பன்றிப் பட்டிகளுக்கு முற்றிலும் வேறுபட்ட முறையில் முன்னுதாரணமாக ஒரு நிருவாகத்தை நடத்திக் காட்டக்கூடிய ஆற்றல் அவருக்கு இருக்கிறது. இங் கும் 'ஆனால்' என்ற கேள்வி யொன்று எழுகிறது.

### மிகப்பெரிய சவால்

விக்னேஸ்வரன் எதிர்நோக்கப் போகும் மிகப்பெரிய இடையூறு ஜனாதிபதியும் ஆளுநரும் வடக்கில் நிலைகொண்டிருக்கும் இராணுவ முமேயாகும். இதை நாம் வெளிப்ப டையாகச் சொல்லத்தான் வேண்டும். ஏனைய மாகாண நிருவாகங்கள் எல் லாம் பெரும் அனர்த்தத்தனமானவை யாகப் போயிருக்கும் நிலையில், வட மாகாண நிருவாகம் வெற்றிபெறு வதை இவர்களில் எவருமே விரும்ப வில்லை என்பது மாத்திரமல்ல, வட மாகாண நிருவாகத்தை அச்சுறுத்தி வைக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்புவதற்கு பகைமையல்ல பிர தான காரணம். அதைவிடப்பெரிய காரணமொன்று இருக்கிறது. தன்னை எதேச்சாதிகாரமாகச் செயற்பட அனு மதிக்கின்ற அதிகாரத்தை பேணிப்பா துகாப்பதில் ராஜபக்ஷ ஆட்சி மூர்க் கத்தனமாக, உறுதியாக இருக்கிறது. சர்வாதிகாரிகள் தனியொரு சவா லையோ அல்லது சுதந்திரமான ஒரு குரலையோ அனுமதிக்கமாட்டார் கள். ஒரு செங்கல் தவறி விலகி னாலும் கூட, முழுக்கட்டிடமுமே இடிந்து வீழ்ந்துவிடும். விக்னேஸ்வர னின் நிருவாகத்தையும் வட மாகாண சபையையும் கீழ்ப்படியவைக்க ராஜ பக்ஷ அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படும். சுயாதீனமான பிராந்திய அதிகார மையமொன்று தோன்றுவ தைத் தடுப்பதற்காக அரசாங்கம் நிதியை நிராகரிப்பது உட்பட சகல விதமான வழிமுறைகளையும் பயன் படுத்தும். அல்லாவிட்டால், ராஜ பக்ஷ ஆட்சி அதன் எதேச்சாதிகாரத் திட்டம் தேய்ந்து போகும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிவரும்.

வடமாகாண சபையின் செயற்பாடு களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப் பட்டால், அதனால் எதையுமே சாதிக்க முடியாமற் போகும். அதன் காரணத்தினால்தான் ஐந்து முக்கிய சவால்கள் என்று நான் கருதுகின்ற வற்றில் மத்திய அரசாங்கத்திடமி ருந்தும் ஆளுநரிடமிருந்தும் இராணு வத்திடமிருந்தும் வரக்கூடிய இடை யூறுகளை முதலாவதாகக் குறிப்பி டுகிறேன். இதுவிடயத்தில் உருப்படி யான முறையில் செயற்படாவிட் டால், மாகாண சபை பட்டுப்போன ஒன்றாகவே போகும். தங்களது மாகாண சபையின் சுதந்திரத்தை உறு திப்படுத்துவதற்கு தமிழ் மக்களை அணிதிரட்ட வேண்டும். விக்னேஸ் வரனும் தமிழ்த்தேசியக் கூட்டமை ப்பும் தனியே இதைச் செய்யமுடி யாது. இலங்கையில் தமிழர்கள் மத்தி யில் தீவிரவாத அறிவிலிகள் சிலர் இருக்கிறார்கள். புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியிலும் அத்தகைய ஆயிரக்கணக்கான பேதைகள் இருக் கிறார்கள். அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் விக்னேஸ்வரனும் வடமாகாண சபையைப்பொறுப்பேற் பதைத் தடுக்க விரும்புகிறார்கள். மாகாண சபைகளுக்கு மட்டுப்படுத் தப்பட்ட அதிகாரங்களே இருக்கின் றன என்பதே இதற்கு அவர்கள் கூறு கின்ற காரணமாகும். மாகாண சபை கள் மிகவும் நலிவுறச் செய்யப்பட்ட நிறுவனங்கள் என்பது உண்மையே. ஆனால், போராட்டத்திற்குள் பிரவே சிப்பதன் மூலம் மாத்திரமே இந்த அதிகாரங்களை விஸ்தரிப்பது தொடர்பிலான கேள்வியைக் கேட்க முடியும். தண்ணீருக்குள் இறங்காமல் நீங்கள் நீச்சலடிக்க முடியாது.

மத்தியதரவர்க்கத்தினர் ஒரு சில்ல றைக் காட்சி மாத்திரமே.அரசியல் வீதிப் போராளிகளே முக்கியமான வர்கள். விக்னேஸ்வரன் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு அனு பவம் பெற்ற ஒருவரல்ல. மத்திய அரசாங்கத்தினால் அத்துமீறல்கள் செய்யப்படுகின்ற வேளைகளில் எல் லாம், புதிய நிருவாகத்தின் சுயாட்சி யை உறுதிப்படுத்துவதற்கான சச்சர வைக் கையாளுகின்ற பணிகளில் மக் களின் பங்கேற்பு முக்கியமானதாக அமையும். பணிகளை விக்னேஸ்வர னுக்கும் அவரது புதிய குழுவின ரிடம் உபகொந்தராத்துக் கொடுத்து விட்டு மக்கள் நித்திரைக்குப் போக முடியாது. இது விடயத்தில் இளை ஞர்கள் முக்கியமானவர்கள். இளை ஞர்கள் முன்னுக்குவந்து ஆக்கபூர்வ மான வழியில் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு மக்களை அணி திரட்ட வேண்டும். சமுதாயத்தின் அடிமட்டத்தில் மக்களை அணிதிரட் டுவதற்கு தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு தவறிவிட்டது என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. இந்தக் குறை பாட்டைப் போக்கி, கூட்டமைப்பினர் தங்களைத் திருத்திக் கொள்வதற்கு இப்போது சந்தர்ப்பம் கிடைத்திருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் மாவை சேனாதிராஜா போன்று மக்கள் ஆதரவுத் தளத்தைக்கொண்ட தலைவர்களின் சக்தி ஆரம்ப வருடங்களில் முக்கியமானதாகும். வடமாகாண சபையின் பரீட்சார்த்தச் செயற்பாட்டை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதன் சொந்த ஜீவமரணப் போராட்டத்துக்கான கடப்பாடாகப் பார்க்க வேண்டுமேயன்றி, ஒரு விக்னேஸ்வரன் செயற்திட்டமாகப் பார்க்கக்கூடாது.

### இராணுவமய நீக்கம்

மக்களின் தனிப்பட்ட பாதுகாப்பும் அச்சமின்றி சுதந்திரமாக வாழ்வதற்கான வாய்ப்பும் ஒரு மாகாண சபையின் கடமைப்பட்டியலுக்குச் சொந்தமான ஒரு செயற்பாடல்ல. நாட்டின் வேறு ஏதாவது ஒரு பகுதியில் இராணுவம் அல்லது பொலிஸார் அடாவடித்தனத்தில் ஈடுபட்டால் அந்த விவகாரம் மாகாண சபையின் நோக்கெல் லைக்குள் வருகிறது என்று கூறிவிடமுடியாது. ஆனால், தமிழ்ப்பகுதிகளைப் பொறுத்தவரை பல வருடகால அடக்குமுறையின் விளைவாக, ஏனைய மாகாண நிருவாகங்கள் கடைப்பிடிப்பதைப் போன்ற அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது (இதுவிடயத்தில்) யதார்த்த பூர்வமானதாக இருக்காது. ஏதாவது தவறுகள் இடம்பெற்றால் மக்கள் முதலமைச்சரிடமும் மாகாணசபையிடமுமே ஓடிவருவார்கள். ஏனென்றால், மிக நீண்டகாலத்துக்குப் பிறகு தமிழர்கள் தங்கள் சொந்தத்தில் ஒரு நிருவாகத்தைக் கொண்டிருக்கப் போகிறார்கள். தங்களை நாடவேண்டாம், போய் பொலிஸில் முறைப்பாட்டைச் செய்யுங்கள் என்று மக்களிடம் தலைவர்களினால் கூற முடியாது. தமிழர்கள் நீண்டகாலமாக இராணுவத்தினாலும் அரசாங்கங்களினாலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவிட்டார்கள். அதனால், பாதுகாப்பு என்று வரும்போது புதிய மாகாண நிருவாகத்திடம் அவர்கள் பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. மக்களின் தனிப்பட்ட பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையை விளங்கிக் கொண்டு செயற்படுவதற்கு முதலமைச்சரும் மாகாணசபையும் துணிவாற்றலைக் கொண்டிருக்காவிட்டால்- அதாவது இராணுவமய நீக்கத்தைச் செய்வதற்கான சவாலுக்கு முகங்கொடுக்கத்தவறினால், பெரும் சீர்குலைவாகப் போய்விடலாம்.

ஆரம்பத்தில் இருந்தே வடமாகாணசபை அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் அதன் வரையறைகளைத் தாண்டியும் அதற்கு அப்பாலும் (13+) பரீட்சிக்கப்படப்போகும் ஒரு களரியாக விளங்கப்போகிறது. 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் போவது என்பது நடைமுறையின் போது கட்டவிழப் போகிற ஒரு போராட்டமாகும். இப்போராட்டம் பேச்சுவார்த்தை அறைகளுக்குள் நடைபெறப்போவதில்லை. புதிய மாகாண சபையைப் பாதுகாப்பதிலும் (ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ள அடிமைத்தனமான சபைகளைப் போல ன்றி உண்மையான அதிகாரப் பரவலாக்கத்தை நோக்கி அதன் அதிகாரங்களை விரிவுபடுத்துவதிலும் இந்தியாவும் சர்வதேச சமூகமும் முக்கிய மானவையாகும். அடக்குமுறையை தனிப்பட்டவர்கள் வெளிக்கொணருவதை விடவும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வெளிக்கொணரும் போது அதற்கு சர்வதேச ரீதியில் கூடுதல் கனதி இருக்கும். சிறுபான்மையினத் தவர்களை நெருக்குவாரங்களுக்குள்ளாக்குகிற ஆட்சிகள் அவற்றின் சொந்த இறைமையை மலினப்படுத்தி சர்வதேச தலையீட்டை வரவழைக்கின்றன. வடமாகாணசபை செயற்படத் தொடங்கியதும் ராஜபக்ஷவின் படைகளின் அடக்குமுறை பெரும் பரபரப்பு விவகாரமாக மாறும். இது கிழக்கிற்கும் ஒரு பெறுமதியான முன்னுதாரணமாக இருக்கும் என்று நம்பலாம்.

### காணி அபகரிப்பு

இராணுவ விரிவாக்கம், குடிப்பரம்பலை அரசாங்க அனுசரணையுடன் மாற்றியமைத்தல் போன்ற வெறுக்கத்தக்க பல்வேறு நோக்கங்களுக்காக மக்களின் காணிகளை அரசாங்கம் அபகரித்த செயல் நன்கு ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. இம்மாத ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மிகவும் ஆக்ரோஷமான முறையில் இந்தக் காணி அபகரிப்பு பிரச்சினையை விளக்கிக் கூறினார். இந்த விவகாரத்துக்கு விக்னேஸ்வரனின் நிருவாகம் அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கவனிக்க வேண்டும். காணி இல்லாமல் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் மீள் குடியமர்விலும் முன்னேற்றம் ஏற்பட முடியாது. வடமாகாண சபையின் செயற்பாடுகள் வடக்கு, கிழக்கில் மாகாண நிருவாகங்களுக்கு காணி அதிகாரங்கள் (அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் கீழ் பரவலாக்கப்பட்டதையும் விட கூடுதலான அளவுக்கு) மாற்றப்பட வேண்டும் என்பதை தெளிவாக விளக்கும் என்று நம்புகிறேன். ஏனென்றால், போரின் விளைவாக வடக்கு, கிழக்கு காணிப்பிரச்சினை மிகவும் பாரதூரமாக வெளிக்கிளம்பியிருக்கிறது. இன்னொரு சிக்கலான விடயம் 1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் தமிழ்ப் பகுதிகளில் இருந்து வெளியேற்றப் பட்டதையடுத்து இடம்பெற்றிருக்கக்

> **விக்னேஸ்வரன் தலைமையில் அமையக்கூடிய வடமாகாண சபை நிருவாகம் காணி அபகரிப்பு பிரச்சினையை முக்கியத்துவம் கொடுத்து கவனிக்க வேண்டும். காணியில்லாமல் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் மீள் குடியமர்விலும் முன்னேற்றம் ஏற்பட முடியாது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் நீண்ட காலமாக இராணுவத்தினாலும் அரசாங்கங்களினாலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு விட்டார்கள். அதனால் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் என்று வரும்போது புதிய மாகாண நிருவாகத்திடம் அவர்கள் பெரும் எதிர்பார்ப்புகளை கொண்டிருப்பார்கள்

கூடிய காணி அபகரிப்பு சம்பந்தமானதாகும். இந்தப் பிரச்சினை மிகவும் துணிச்சலான முறையில் கையாளப்படவேண்டும். தேவநேசன் ஆணைக்குழு இதற்கு நியாயபூர்வமான தீர்வுகளை முன்மொழிந்திருக்கிறது. இது மிகுந்த ஜாக்கிரதையுடன் கையாளப்படவேண்டிய பிரச்சினை. ஆனால், விடுதலைப் புலிகளினால் அபகரிக்கப்பட்டு தமிழர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கக்கூடிய முஸ்லிம்களின் காணிகள் தொடர்பில் முஸ்லிம்களுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய தார்மீகத் தகுதியை தமிழர்களினாலும் முஸ்லிம்களினாலும் தெரிவு செய்யப்படுகிற ஒரு மாகாண சபைக்கு மாத்திரமே இருக்கிறது. வட மாகாணத்துக்கு திரும்பிவர விரும்புகிற முஸ்லிம்களுக்கு வசதியளிக்கப்படவேண்டும்.

### நல்லாட்சி

நல்லாட்சி என்பதே விக்னேஸ்வரனின் துருப்புச் சீட்டாக இருக்கும். இதுவிடயத்தில் அவர் வலிமைமிக்க நிலையில் இருந்து செயற்படக்கூடியதாக இருக்கும். மிதவாதச் சிந்தனை கொண்ட, ஆற்றல் வாய்ந்த பல தமிழர்கள் தாங்களாகவே உதவ முன்வருவர் என நம்ப இடமிருக்கிறது. எனவே அர்ப்பணிப்புச் சிந்தையுடன் செயற்படக்கூடிய, யதார்த்த நிலைமைகளை விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு குழுவைத் தெரிவு செய்வது இலகுவாக இருக்கும். ஆனால், நீண்ட காலத்துக்கு முன்னர் விவகாரங்கள் எவ்வாறு கையாளப்பட்டன என்ற அனுபவங்கள் போதுமான அளவுக்கு இருக்குமென்று சொல்ல முடியாது. களநிலைமைகளுடன் பரிச்சயமான இளைஞர்களின் உதவி தேவைப்படும். முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தங்களின் கடந்த காலத்தை ஒதுக்கி வைத்துவிட்டு புதிய முயற்சிகளில் தங்களை அர்ப்பணிக்க முன்வந்தால், அவர்களைப் பயன்படுத்துவதும் பிரயோகமானதாக இருக்கும்.

ஆட்சிமுறைபற்றி இதற்கு மேல் நான் எதையும் கூற விரும்பவில்லை. அடுத்த மாதங்களில் ஒவ்வொரு பத்திரிகையிடமிருந்தும் ஒவ்வொரு இணையத்தளத்திடமிருந்தும் தேவைக்கும் அதிகமான ஆலோசனைகள் வரும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால், சந்தர்ப்பவாதிகள் மற்றும் தங்களுக்கு வசதியான ஒரு பதவியைப் பிடித்துக்கொள்வதில் நாட்டம் கொண்டவர்கள் பற்றி மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அத்தகையவர்கள் கரப்பான் பூச்சிகள் போன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சுகளுக்குள் அங்குமிங்கும் திரிகிறார்கள்.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தவர்கள் முதலீடுசெய்வார்களா? நிச்சயமாக அவர்கள் முன்வருவார்கள். கல்வித்துறையே இதுவிடயத்தில் காந்தமாக இருக்கும். ஆனால், கோழி அடைகாக்கும் முன்னதாக நாம் குஞ்சுகளை எண்ணலாகாது. நிருவாகத்தின் நம்பகத்தன்மையை வளர்ப்பதற்கே முதலில் கவனம் செலுத்த வேண்டும். காசோலைப் புத்தகத்தைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். ஆனால், புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருந்து (பிறருக்கென வாழுகின்ற) படித்த தமிழர் எவரும் வடக்கை மீளக் கட்டியெழுப்பும் ஆர்வத்துடன் இலங்கைக்குத் திரும்பிவருவார் என்று எதிர்பார்க்க வேண்டாம். இன்று உலகிலே இலட்சியவாதிகள் பெரிதாக இல்லை.

### அரசியல் செயன்முறைகளில் இணைதல்

காப்டன் எப்போதுமே அணியின் ஒரு உறுப்பினராகவே இருக்க வேண்டும். விக்னேஸ்வரன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒரு உறுப்பினராகிவிட்டார் என்று வைத்துக் கொள்வோமே. அன்றாட அரசியல் நடவடிக்கைகளில் கட்சித் தொண்டர்களுடனும் சகாக்களுடனும் ஊடாட்டங்களைச் செய்கிற அனுபவங்கள் அவருக்கு இல்லை. மகாநாட்டு மண்டபங்களும் கமிட்டி அறைகளும் அரசியல் விவாதத்தின் கரடுமுரடான தன்மைகளும் கட்சித் தொண்டர்களுடனான அரசியல் ஈடுபாடுகளும் விக்னேஸ்வரனை ஒரு நீதிபதி யென்ற நிலையில் இருந்து வெளியே நாளடைவில் கொண்டுவரும் பாரம்பரிய இந்துப் பண்பு விழுமியங்கள் அல்ல, சுறுசுறுப்பானதும் செயலூக்கம் மிக்கதுமான நவீன நிருவாக ஆற்றலே தமிழ்த் தாயகத்தின் சமகாலப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்நாட்டு அரசியல்

குசல் பெரேரா

# வெலிவேரியா;
# அபிவிருத்தியின் பலியாட்களைத் தேடி...

இன்னமும் கூட இது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுதான். அதன் பிரஜைகள் தனியாகவும் கூட்டாகவும் தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தவும் பகிரங்கமாக, அமைதியான முறையில் எதிர்ப்பியக்கங்களை நடத்தவும் அத்தகைய இயக்கங்களை ஆதரிக்கவும் உள்ள உரிமையை இன்னமும் கூட, அரசியலமைப்பும் நாட்டின் சட்டமும் உத்தரவாதம் செய்கின்றன. அதனால், சுத்தமான தண்ணீர் கேட்ட நிராயுத பாணிகளான குடிமக்களுக்கு எதிராக முரட்டுத்தனமாக ஆயுதபடைபலத்தைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு உரிமையில்லை. அதை நாம் முழுமையாக ஏற்றுக்கொண்டாக வேண்டும். வெலிவேரியாவின் ரதுபஸ்வெல, நெடுங்கமுவ மற்றும் அவற்றின் அருகாமையில் அத்தனகலு ஓயாவுக்கு தென் மேற்கேயுள்ள சுமார் 10 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நீர்மாசடைதல் தொடர்பாகத் தெரிவித்த முறைப்பாடுகளை சுயாதீனமாகவும் தொழில்சார் நிபுணத்துவ முறையிலும் அரசாங்கம் விசாரித்திருக்க வேண்டியது அதன் கடமையாகும் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கம் அவ்வாறு முறைப்பாடுகளை தாமதமின்றி விசாரிக்க வேண்டுமென்று கோருவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, முரட்டுத்தனமான ஆயுதபடைப் பலத்தை அத்தகைய மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தியமை அவர்களது உரிமைகளை அப்பட்டமாக மீறிய செயலாகும் என்று மீண்டும் கூறுகிறேன். அந்த மக்கள் மீது தாக்குதலை நடத்துவதற்கு இராணுவத்தை அனுப்புவதற்கு அரசாங்கத்துக்கு எந்த உரிமையுமேயில்லை.

ஆனால், அரசாங்கம் அதைச் செய்தது. குறிப்பாக, பாதுகாப்புத்துறை அதை 2013 ஆகஸ்ட் முதலாம் திகதி செய்தது. மூவர் பலியானார்கள். ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்.

மனித வாழ்வுக்கு மேலாக வியாபாரத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது திறந்த சந்தை கொள்கைகளின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்தி. இந்த அபிவிருத்தி மேலும் மனித பலிகளை எடுக்காமல் இடம்பெற போவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்குச் சென்ற தாயை வீட்டுக்குக் கூட்டிவரச் சென்ற இளைஞன் மார்பில் சூடு பட்டு வீதியில் இறந்து கிடந்தான். ஊடகங்கள் சிலவற்றில் வெளியான தகவல்களின் படி வெலிவேரியாவில் பலியானவர்களின் எண்ணிக்கை 7 என்று அறியக்கூடியதாக இருக்கிறது. ஆர்ப்பாட்டம் நடந்த இடத்துக்குச் சென்ற ஊடகவியலாளர்களிடம் படையினர் தங்கள் நடவடிக்கைகளைப் படம்பிடிக்க வேண்டாம் என்று எச்சரிக்கை செய்தார்கள். சில ஊடகவியலாளர்கள் படையினரால் தாக்கப்பட்டார்கள். காயமடைந்தார்கள். சிலரின் புகைப் படக்கருவிகள் சேதமாக்கப்பட்டன.

இதெல்லாம் எதற்காக? ஹேலீஸ் குழுமத்துக்குச் சொந்தமான (ரப்பர் கையுறை தயாரிக்கும்) வெனிகுரொஸ் குளோவ்ஸ் தொழிற்சாலை வெலிவேரியாவின் நெடுங்கமுவவில் அமைந்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் அந்தப் பகுதியெங்கும் நிலத்தடி நீரை மாசுபடுத்துகிறது என்று மக்களினால் செய்யப்பட்ட முறைப்பாட்டை மையமாகக் கொண்டதே இந்த விவகாரம், இந்தத் தொழிற்சாலைக்கு எதிராக மக்களினால் செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரிப்பதை அரசாங்க அதிகாரிகள் தவிர்த்ததை மையமாகக் கொண்டதே இந்த விவகாரம். இது அதிகார அரசியலுடனும் வர்த்தகத்துடனும் சம்பந்தப்பட்ட விவகாரமா கும்.

ஹேலீஸ் குழுமம் இப்போது முற்று முழுதாக தம்மிக பெரேரா என்ற தொழிலதிபரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஹேலீஸின் பங்குகளில் 48 சதவீதத்திற்கும் அதிகமான பங்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் இவருக்குச் சொந்தமானது என்று கூறப்படுகிறது. தம்மிக பெரேரா ஹேலீஸின் தனியொரு மிகப்பெரிய பங்காளர். இவர் போக்குவரத்து அமைச்சின் செயலாளராகவும் பதவி வகிக்கிறார். அரசாங்கம் இவரை முன்னர் ஒரு தடவை இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவராகவும்




நியமித்தது. சர்ச்சைக்குரிய மேற்படி கையுறைத் தொழிற்சாலை முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றதாகும். அத்துடன், அத்தொழிற்சாலைக்கு 2019ஆம் ஆண்டு வரை 10 வருடகாலத்துக்கு 12 சதவீத வரிச் சலுகையும் அளிக்கப்பட்டிருக்கிறது.

இதுதான் இலங்கையின் அபிவிருத்தி வகை மாதிரி. திறந்த சந்தைக் கொள்கைகளின் ஊடாக எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி மனித வாழ்வுக்கு மேலாக வியாபாரத்துக்கு முன்னுரிமை அளிக்கிறது. வர்த்தகப்பிரமுகர்கள் அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்துடன் அரசியல் தொடர்புகளைக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் வாழ்க்கைத் தரத்தின் மேம்பாடு என்று வரும் போது மக்களினால் பெறக்கூடியதாக இருப்பவை எவை என்பது பற்றி இந்த 'அபிவிருத்தி' யில் தெளிவான வரைவிலக்கணம் எதுவும் இல்லை. பதிலாக, அபிவிருத்தி என்பது பொருளாதாரக் குறிகாட்டிகளின் அடிப்படையில் மாத்திரமே பேசப்படுகிறது. எதிரணி அரசியல் வாதிகளும் பொருளாதாரம் பற்றி விவாதிக்கிறார்கள் புள்ளி விபரங்கள், இலக்கங்கள் பிழை என்று நிரூபிப்பதற்காக மாத்திரம். அல்லது இலக்கங்கள் எந்த வளர்ச்சியையும் சுட்டிக்காட்டவில்லை என்று கூறுவதற்கு மாத்திரம் நிலைபேறான அபிவிருத்திக்காக வளர்ச்சி என்பது நிகர உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதத்தைத் தாண்ட வேண்டும் என்று அவர்கள் வாதாடுகிறார்கள்.

ஆனால், இந்தப் பொருளாதார

அபிவிருத்தி மனிதப் பலியாட்களையே விட்டுச் செல்கிறது. எந்தவொரு திட்டமிடலும் கிடையாது. இந்த அபிவிருத்தியில் மனிதர்களுக்கு முன்னுரிமையில்லை. எனவே, வெனிகுரொஸ் போன்ற தொழிற்சாலைகள் பாரம்பரிய கிராமங்கள் மத்தியில் அங்கு வாழும் மக்களின் சம்மதம் இல்லாமல் இயங்கக்கூடியதாக இருக்கிறது. தொழிற்சாலையின் தேவைகளுக்கு ஏற்ப மக்கள் தங்களை இசைவாக்கிக்கொள்ள மறைமுகமாக நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இவ்வாறு மக்களை நிர்ப்பந்திப்பதற்கு வசதியாகக் கூறப்படுகின்ற ஒரு காரணம் இருக்கிறது. தொழிற்சாலை தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்வதுடன், அருகாமையில் உள்ள சில நூறு பேருக்கு தொழில் வாய்ப்பைக் கொடுக்கிறது என்பதே அந்தக் காரணமாகும். வெனிகுரோஸ் தொழிற்சாலை அப்பகுதி மக்களின் சம்மதம் இல்லாமல் அமைந்திருப்பதுடன் அந்த மக்கள் நீர் மாசடைவதாக பிரச்சினை கிளப்பியிருக்கிறார்கள். ஒரு பெரிய தொழிற்சாலை கிராமிய வாழ்வுக்குள் அத்துமீறியிருக்கிறது என்பதைப் பற்றி எவருமே பேசுகிறார்களில்லை. இந்த 'அபிவிருத்தியின்' பலியாட்கள் கிராம மக்களே. குழந்தைகளும் இளையவர்களும் வயோதிபர்களும் மாசடைந்த தண்ணீருடன் இப்போது வாழ வேண்டியிருக்கிறது.

வரைவிலக்கணப்படுத்தப்படாத இந்த அபிவிருத்தியின் பலியாட்கள் வெலிவேரியா மக்கள் மாத்திரமல்ல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வாரங்களுக்கு முன்னர் மொரட்டுவையில் 4000க்கும் அதிகமான தச்சுவேலைக்காரர்களும் பாரம்பரிய கைவினைஞர்களும் 6 கோரிக்கைகளை முன்வைத்து வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். தங்களது உற்பத்திகளுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டும் என்பதும் மரம் ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் என்பதும் அவர்களின் கோரிக்கைகளில் முக்கியமானவை. வீட்டுத்தளபாடங்கள் மற்றும் காரியாலயத் தளபாடங்கள் விற்பனையில் பெரிய கம்பனிகள் மேலாதிக்கம் செலுத்துவதற்குப் பல வழிகளில் அனுமதிக்கப்பட்டு, முன்னுரிமை கொடுக்கப்படுவதால் தங்களது வாழ்வாதாரம் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் கவலை வெளியிட்டார்கள். உட்கட்டமைப்பை முக்கியத்துவப்படுத்துவதில் நாட்டம் கொண்ட அபிவிருத்தி என்பது கூடுதலான அளவுக்கு முதலீடுகளைக் கவருவதற்கு முக்கியமானதாகும். இது மனித வாழ்வை ஓரங்கட்டுகிறது.

1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையே நவதாராளவாதப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த அபிவிருத்தி வகைமாதிரிக்கு வழிவகுத்தது. அதையடுத்து நாட்டில் இருந்த சுமார் ஒரு இலட்சம் கைத்தறிகள் 15 ஆயிரமாக இப்போது குறைந்துவிட்டன. பெரும்பாலும் இக்கைத்தறிகள் கிழக்கின் மருதமுனைப் பகுதியிலேயே இருந்தன. அனேகமாக பெண்களே இவற்றில் தொழில் செய்தார்கள். இக் கைத்தறித்தொழிலின் வளர்ச்சி உச்ச நிலையில் இருந்த காலத்தில் அதன் உற்பத்திகள் கீழ் நடுத்தரவர்க்கத்தவரின் உடைத்தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன், நல்ல வருமானமிக்க தொழிலாகவும் அது விளங்கியது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அக் கைத்தறிகளை நம்பி வாழ்ந்தன. கைத்தறித்தொழில்துறை இந்தியப் புடைவைச் சந்தையை ஆதிக்கம் செலுத்துகின்றன. வகை வகையான, கவர்ச்சியான ஆடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இலங்கையில் கைத்தறித் தொழிலின் வீழ்ச்சியையடுத்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அவற்றின் வாழ்வாதாரங்களை இழந்தன. இவர்கள் 1980களில் இந்த பொருளாதார அபிவிருத்தியின் பலியாட்களாக விளங்கினார்கள். ஆடைத் தொழிற்சாலைகளின் தயாரிப்புகள் கிராமிய சந்தைகளையும் சென்றடைந்திருக்கின்றன.


இந்த அபிவிருத்தி வகை மாதிரியின் விளைவாக கிராமங்களில் இருந்து இளைஞர், யுவதிகள் வெளியேறி தங்களுக்கான புதிய வாழ்வாதாரங்களைத் தேடி மேல்மாகாணத்துக்கு படையெடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. வளர்ச்சியின் சுட்டெண்கள், இலக்கங்கள் குறித்து, பேசுகின்ற இந்த அபிவிருத்தி எல்லாமே ஒரு தேக்க நிலையில் இருக்கும் கிராமிய பொருளாதாரத்திற்குள் வாழ்ந்த இந்த இளைஞர், யுவதிகளைப் பொறுத்தவரை, எந்தவிதத்திலும் அர்த்தமற்றவையாகவே இருக்கின்றன. அந்த அபிவிருத்திப் புள்ளி விபரங்கள், விளக்கங்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் இருக்கின்ற சகலராலும் அறியப்படக்கூடியவையாக இல்லை. ஆள்வீத வருமானமாக 3000 டொலர்களைச் சம்பாதிப்பதற்காக இந்த இளைஞர், யுவதிகள் அவர்களின் வாழ்வு முறைக்கு அந்நியமான சூழலில் மூன்று மாதங்கள் கடுமையாக உழைக்கவேண்டியிருக்கிறது. அவ்வாறு உழைத்தும் கூட, பெரும்பாலானவர்கள் வறுமைப்பட்டவர்களாகவே தொடர்ந்தும் இருக்கிறார்கள். இந்த அபிவிருத்தி வகைமாதிரியின் பலியாட்கள் தங்கள் மீது திணிப்பதற்கு அரசாங்கத்தினால் முயற்சிக்கப்பட்ட தனியார் ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிராக 2011 மே மாதம் கிளர்ந்தெழுந்தார்கள். படுமோசமான அடக்குமுறையையே அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. சுதந்திரவர்த்தக வலயத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் ரொஷான் ஷானுக என்ற இளைஞன் பலியானான். வேறு பலர் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள் மேலும் பலர் வேலையில் மீண்டும் ஈடுபடுத்தப்பட முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள். இந்தச் சம்பவங்களை விசாரிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் தனி நபர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. ஆனால், அதன் அறிக்கை இன்னமும் வெளிச்சத்துக்கு வரவில்லை.

வெலிவேரியா சம்பவம் குறித்து பலவிசாரணைகள் நடைபெறுகின்றன. இராணுவத்தினர் தாங்களும் விசாரணை செய்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் விசாரிக்கிறார்கள். ஜனாதிபதியும் தனது சொந்தத்தில் ஒரு ஆணைக் குழுவை நியமிக்கக் கூடும். ஆனால், அடிப்படை உண்மையென்னவென்றால், எந்த விசாரணையும் எந்த ஆணைக்குழுவும் இந்தப் படுகொலைகளுக்குப் பொறுப்பானவரைக் கண்டுபிடிக்கப்போவதில்லை. 'அபிவிருத்தியின் பலியாட்கள்' தங்களுக்கு இருப்பதாக நம்புகிற எந்தவொரு உரிமைக்கோரிக்கையையும் ஒடுக்குவதற்கும் நசுக்குவதற்குமே இராணுவமும் பொலிஸும் அங்கே இருக்கின்றன.

இந்த அபிவிருத்தி என்பது மேலும் மனிதப் பலியாட்களை எடுக்காமல் இடம்பெறப்போவதில்லை. இது வெறுமனே உரிமை மீறல்களைப் பற்றியதோ, இராணுவத்தைப் பயன்படுத்தி முரட்டுத்தனமாக ஒடுக்குமுறையை மேற்கொள்வதைப் பற்றியதோ அல்ல. இது 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு பதவியில் இருந்து வந்திருக்கிற அரசாங்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாக (மனித வாழ்வின் தரத்தைப்பற்றிய எந்தவிதமான கரிசனையும் இல்லாமல்) துரத்திக்கொண்டிருக்கிற 'அபிவிருத்தி' பற்றியதாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்






ஹரிம் பீரிஸ்

# வெலிவேரியாவும் வடக்கில் இராணுவமயநீக்க அறைகூவலும்

முன்னாள் இராணுவப் பேச்சாளரும் பதக்கங்கள் பல பெற்ற போர்க் கள அதிகாரியுமான லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க இலங்கையின் 20ஆவது இராணுவத் தளபதியாக இம்மாதம் முதலாம் திகதி பதவியேற்றுக்கொண்டார். அவரைப் போன்று தீயசகுனமுடைய தினத்தில் நாட்டின் வேறு எந்த இராணுவத் தளபதியுமே கடமைகளைப் பொறுப்பேற்றிருக்க மாட்டார் என்று கூறலாம். ஏனென்றால், ரத்நாயக்க சம்பிரதாயபூர்வமாக இராணுவத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட வைபவம் முடிந்த கையோடு உடனடியாகவே வெளிவந்த செய்தி கம்பஹா மாவட்டத்தின் வெலிவேரியா பகுதியில் நிராயுத பாணிகளான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் பற்றியதாகும். இத்தாக்குதலில் மூவர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக புதிய இராணுவத்தளபதி இராணுவ விசாரணையொன்றுக்கு உத்தரவிட்டிருந்தார். பலியானவர்கள் சகலரும் குடிமக்கள் என்பதால், அவசர காலச்சட்டம் நடைமுறையில் இல்லையென்றபடியால் மாஜிஸ்திரேட் விசாரணையொன்றும் நடத்தப்படவேண்டும். நீதியான முறையில் இந்த விவகாரம் கையாளப்படுகிறது என்பது வெளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையாகத் தெரியக்கூடியதாக சகல விதமான விசாரணைகளின் முடிவுகளும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். இராணுவத்தின் விசாரணை மற்றும் மாஜிஸ்திரேட் விசாரணையின் கவனத்தையும் குறிப்பாக, ராஜபக்ஷ நிருவாகத்தின் கவனத்தையும் ஈர்க்க வேண்டிய அவசியம் கொண்ட சில விடயங்களை கீழே தருகிறேன்.

### விரிவான பாதுகாப்பு மீளாய்வு அவசியம்

நீண்ட காலமாக இடம்பெற்று வந்த ஒரு போரின் முடிவுக்குப் பிறகு எந்தவொரு நாடுமே, போருக்குப் பின்னரான நிலைவரத்தைக் கணக்கில் எடுத்து, தேசிய பாதுகாப்புக்கு இருக்கக் கூடிய சவால்களையும் அவற்றைச் சமாளிப்பதற்குத் தேவையான வளங்களையும் தேவைகளையும் மதிப்பீடு செய்யும். இலங்கையில் உண்மையில் அதைப்போன்று எதுவுமே செய்யப்படவில்லை. விடுதலைப்புலிகளை எதிர்த்துப் போரிடுவதற்காக கட்டியெழுப்பப்பட்ட பாரிய இராணுவ இயந்திரமே தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. விடுதலைப்புலிகள் இப்போது இல்லை. போர்க்காலத்தைக் காட்டிலும் பாதுகாப்பு பட்ஜெட் சமாதான காலத்தில் பெரியதாக இருப்பதையும் காண்கிறோம். மிகப்பரந்தளவிலான நகர அபிவிருத்தித் திட்டங்கள் தொடக்கம் வெலிவேரியாவில் இடம்பெற்றதைப் போன்று மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கைகள் வரை சகல காரியங்களுக்கும் இராணுவம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கையில் பாதுகாப்பு விவகாரம் தொடர்பில் விரிவான மீளாய்வு தேவை. அத்தகைய நடவடிக்கையொன்றில் ராஜபக்ஷ நிருவாகம் கட்டாயம் ஈடுபடவேண்டும்.

குடிமக்களுக்கு எதிரான நடவடிக்கைக்கு இராணுவம் பயன்படுத்த வேண்டிய தேவை எதிர்பார்க்கப் படக் கூடிய சூழ்நிலைகளில் கூட, அமெரிக்காவுக்குள் ஆயுத நடவடிக்கைகளுக்கு அதன் படைகளை ஒரு போதும் பயன்படுத்துவதில்லை என்ற கொள்கையை அமெரிக்க இராணுவம் கொண்டிருக்கிறது. ஆயுதபாணிகளாக இருக்கக்கூடிய குடிமக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குக் கூட, விசேடமாகப் பயிற்றுவிக்கப் பட்ட பொலிஸும் எமது விசேட அதிரடிப்படையை ஒத்த படையினருமே அமெரிக்காவில் பயன்படுத்தப் படுகிறார்கள். ஒரு சிவிலியன் படையே குடிமக்களைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுத் தப்படுகிறது. இது ஜனநாயக ரீதியானதும் சுதந்திரமானதுமான சமுதாய மொன்றின் அத்தியாவசியமான அம்சமாகும். இந்தக் கொள்கையின் பின்னணியில் இருக்கக்கூடிய நியாயப்பாடு மிகவும் எளிதானது. இராணுவங்களும் இராணுவ அதிகாரிகளும் எதிராளிகள் ஆயுதபாணிகளாக இருந்தாலென்ன, நிராயுதபாணிகளாக இருந்தாலென்ன, அவர்களைப் பிடிப்பதற்கு அல்லது வலுவிழக்கச் செய்வதற்கு (பொலிஸாரைப்போன்று) குறைந்தபட்ச படைபலத்தைப் பிரயோகிப்பதற்கு பயிற்றுவிக்கப்படுவதில்லை. எதிர்த்துத் தாக்குதல் நடத்துவதற்கும் போர் தொடுக்கின்ற ஆயுதபாணிகளைத் தாக்கி நிர்மூலம் செய்வதற்குமே இராணுவத்தினர் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். அந்தப் போர் பாரம்பரியமான போராக இருக்கலாம் அல்லது காட்டுக்குள் இடம்பெறுகின்ற கெரில்லாப் போராக இருக்கலாம் அல்லது நகர்ப்புறங்களில் இடம் பெறுகின்ற பயங்கரவாதத்தாக்குதலாக இருக்கலாம். வெலிவேரியாவில் கூடிய மக்கள் மேற்கூறப்பட்ட எந்தவகையான ஒரு போரிலும் ஈடுபட்டவர்கள் என்று எவராலும் கூற முடியுமா? அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில், இராணுவம் பயன்படுத் தப்பட்டமைக்கான சட்ட ரீதியான அடிப்படை ஐயுறவுக்குரியதாகும்.

தங்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையில் உதவுமாறு பொலிஸார் விடுத்த வேண்டுகோளையடுத்தே வெலிவேரியாவுக்கு இராணுவம் அனுப்பப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் முதலில் கூறினார். இது உண்மையில் அதிர்ச்சியைத் தந்தது. ஏனென்றால், தங்களால் கட்டுப் படுத்த முடியவில்லை என்றால் பொலிஸார் முதலில் தங்களின் கலகம் அடக்கும் பிரிவையே வரவழைத் திருக்க வேண்டும். ஒரு காலாட் படை பிரிகேடியரின் தலைமையிலான இராணுவப் பிரிவையல்ல. வெலிவேரியா சம்பவம் தொடர்பாக நடைபெறுகின்ற விசாரணைகள் ஆராய்ந்துபார்க்க வேண்டிய முக்கியமான படை நடவடிக்கைவிதிகள் (Rules of engagement) இருக்கின்றன. எந்தக் கட்டத்தில், அதுவும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பயன்படுத் தப்பட்டதையடுத்து எவ்வளவு நேரத்துக்குப் பிறகு படுமோசமான படைபலம் பிரயோகிக்கப்பட்டது? ஏன் பிரயோகிக்கப்பட்டது? கலைந்து ஓடிக்கொண்டிருந்த மக்கள் கூட்டத்தினர் மீது விசை தீர்ந்து விடாத தோட்டாக்களை (Live ammunition) ஏன் தீர்த்தது? இத்தகைய ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸாரின் அல்லது படையினரின் இலக்கு மக்கள் கூட்டத்தினரை கலையச் செய்வது அல்

> தங்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையிலேயே உதவுமாறு பொலிஸார் விடுத்த வேண்டுகோளையடுத்தே வெலிவேரியாவுக்கு இராணுவம் அனுப்பப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் முதலில் கூறினார். தங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் பொலிஸார் முதலில் தமது கலகம் அடக்கும் பிரிவையல்லவா வரவழைத்திருக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லது கலவரத்தைக் கட்டுப்படுத்துவ தாகவே இருக்கவேண்டும். எனவே, மக்கள் கூட்டம் கலைந்து ஓடிக் கொண்டிருந்தபோது படுமோசமான படைபலம் ஏன் பிரயோகிக்கப்பட் டது? தப்பியோடிக்கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அருகாமை யில் உள்ள கத்தோலிக்கத் தேவால யம் ஒன்றிற்குள் தஞ்சமடைந்ததாக நேரிற் கண்டவர்கள் பலர் கூறியிருக் கிறார்கள். எந்தவொரு வணக்கத் தலமுமே சரித்திர ரீதியாக தஞ்சமடை வதற்கான பாதுகாப்பிடங்களாக விளங்கி வந்திருக்கின்றன. இருந்தும் கூட, கட்டுநாயக்க சுதந்திரவர்த்தக வலயத்தில் ஆர்ப்பாட்டஞ் செய்தவர் கள் கலைந்தோடி தொழிற்சாலைக ளுக்குள் புகுந்த போது அவர்களை தேடித்தேடி படையினர் பழிவாங்கிய தைப் போன்று வெலிவேரியாவில் தேவாலயத்திற்குள்ளும் வீடுகளுக் குள்ளும் புகுந்தவர்கள் மீது தாக்கு தல் நடத்தப்பட்டதை நேரிற் கண்ட வர்கள் பலர் விபரித்திருக்கிறார்கள். தேவாலயத்திற்குள் புகுந்தவர்களை முழந்தாளிடுமாறு படையினர் பணித்து தலையில் துப்பாக்கிப் பிடி யினால் தாக்கினார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பெற்றோல் குண்டுகளைப் பயன்படுத்தி தாக்கு தல் நடத்தியதாக பாதுகாப்பு அதிகா ரிகள் குற்றஞ்சாட்டினார்கள். சரி அவ் வாறுதான் பெற்றோல் குண்டுத்தாக்கு தல் நடத்தப்பட்டிருந்தாலும் கூட, படையினர் பிரயோகித்த எதிர்ப் படை பலம் அதற்கு அளவொத்ததா கவா இருந்தது என்ற கேள்வி இங்கே எழுகிறது. படையினரின் வன்செயல் பழிதீர்க்கும் தன்மையானதாக இருந் ததாக ஆரம்பத்தில் வெளியான தக வல்கள் தெரிவித்தன. அத்துடன், தேசிய ரீதியில் கவனத்தை ஈர்க்கக் கூடிய அந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் பிரசன்னமாயிருந்த ஊடக வியலாளர்களை படையினர் இலக்கு வைத்தார்கள். இத்தகைய கொள்கை யொன்றை படையினர் கடைப் பிடித்து வருகிறார்கள் போலத் தெரிகி றது.

உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்பு கள் இச்சம்பவம் குறித்து அவற்றின் ஆழ்ந்த கவலையையும் கண்டனத் தையும் வெளியிட்டிருந்தன. பலியா னவர்களின் குடும்பத்தவர்களினதும் காயமடைந்தவர்களினதும் நலன் களைப் பாதுகாக்க இலவசமாக சட்ட உதவி செய்ய இலங்கை சட்டத்தரணி கள் சங்கம் முன்வந்திருந்தது.

**சமுதாயத்தை இராணுவ மயமாக்குவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் வடக்கில் இரா ணுவ மய நீக்கத்தை செய்ய வேண்டுமென்று தமிழ்த் தலைவர்கள் விடுக்கும் கோரிக்கையின் நியாயப்பாட்டையும் தென்னிலங்கை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய அவசியத்தை வெலிவேரிய சம்பவம் உணர்த்தியிருக்கிறது**

சமுதாயத்தை இராணுவ மயமாக்கு வதனால் ஏற்படக்கூடிய விளைவுக ளையும் வடக்கில் கடுமையாக இரா ணுவப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டுமென்று தமிழ்த்தலைவர்கள் விடுக்கும் கோரிக்கையை அனுதாபத் துடன் நோக்க வேண்டிய அவசியத் தையும் வெலிவேரியா சம்பவம் தென்னிலங்கைக்கு உணர்த்தியிருக் கிறது. எமது உள்நாட்டுப் போர் அதன் தன்மையில் இன அடிப்படை யிலானதாக இருந்தது. அதன் விளை வாக இலங்கை இராணுவம் பெரும் பாலும் சிங்களவர்களைக் கொண்ட தாக இருப்பது அதன் ஒரு பலவீன மான அம்சமாகும். அதிகப் பெரும் பான்மையாகத் தமிழர்கள் வாழும் வடக்கில் சிங்களவர்களைக் கொண்ட இராணுவம் நிலைகொண்டிருக்கிறது. கம்பஹா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பெரும் ஆதர வைக்கொண்ட சிங்களக் கிராமங்க ளுக்கு எதிராக அரசாங்கம் அதன் இராணுவத்தை இவ்வாறு பயன்படுத் துகிறதென்றால், அதுவும் தூய குடிநீர் கேட்டுக் குரலெழுப்பிய மக்கள் மீது இவ்வாறு இராணுவத்தை ஆட்சி யாளர்கள் கட்டவிழ்த்து விடுகிறார் கள் என்றால், ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் கேட்கும் தமிழ்க்குடிமக்களை எவ்வாறு நடத்து வார்கள் என்று அவதானிகள் சிந்தித் துப் பார்க்கக்கூடும்.

பெரிதும் மதிக்கப்படும் கல்வி மானும் எழுத்தாளரும் இராஜதந்திரி யுமான கலாநிதி தயான் ஜெயதிலக பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

'மாவிலாறை விடுவிப்பதற்கு அனுப்பப்பட்ட அதே இராணுவம், தங்களின் அன்றாடப் பாவனைக்கு குடிக்கத்தக்க நீரைக் கேட்ட நிராயுத பாணிகளான சிங்கள ஆர்ப்பாட்டக் காரர்களுக்கு எதிராக கொடூரமான முறையிலும் மதிகெட்டதனமாகவும் பயன்படுத்தப்பட்டபோது, போர் தென்னிலங்கைக்கு வந்துவிட்டது. அவ்வாறு செய்ததன் மூலமாக அர சாங்கம் சீர்செய்ய முடியாத அளவு க்கு சமுதாய ஒப்பந்தத்தில் ஆழமான பிளவை ஏற்படுத்திவிட்டது. அந்தப் பிளவின் ஊடாக அரசாங்கத்தின் நம்பகத்தன்மையும் நியாயப்பாடும் கசிந்து வெளியேறிக் கொண்டிருக் கின்றன'. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகளினால் அதிகரிக்கும் சுமைகள்



எமது அன்றாட வாழ்விலும் பொருளாதாரக் கொள்கைகளிலும் நவதாராளவாதம் எவ்வாறு இயல்பாக பின்னிப் பிணைந்துள்ளது என்பதை ஆழமாகச் சிந்தித்து அதன் போலியான இயல்பை கேள்விக்குள்ளாக்குவதன் மூலமாகவே எம்மால் நவதாராளவாதத்தை எதிர்க்கவும் கருத்தாளம் மிக்க மாற்று யோசனைகளை முன்வைக்கவும் முடியும்

மின் கட்டண உயர்வுக்கு எதிராகக் கிளர்ந்த பரவலான அதிருப்தியும், போராட்டங்களும், அரசின் பொருளாதாரக் கொள்கைகளின் போக்குகளின் மீதான மக்களின் எதிர்ப்பின் சமீபத்தைய வடிவமே ஆகும். தாம் எதிர்கொண்ட அநீதிகளை பொதுமக்கள் நியாயமான முறையில் எதிர்த்துள்ளனர். இவ்வாறான பல போராட்டங்கள் கடந்த இரு வருடங்களாக நாட்டில் இடம்பெற்றுள்ளன. தனியார் ஓய்வூதிய மசோதாவுக்கு எதிராக 2011 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இடம்பெற்ற பாரிய போராட்டங்களின் போது ஒரு தொழிலாளர் கொல்லப்பட்டார். ஜனவரி 2012 இல் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான போராட்டங்களின் காரணமாக தனியார் பல்கலைக்கழகங்கள் அமைப்பது தொடர்பான மசோதா தள்ளி வைக்கப்பட்டது. பெப்ரவரி 2012 இல் பெற்றோல் விலையேற்றத்தினைக் கண்டித்து மீனவர்கள் நாட்டின் கரையோரப் பகுதிகளில் மேற்கொண்ட போராட்டங்களின் போது மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட போது, ஒரு மீனவர் உயிரிழந்தார். நாட்டின் வரலாற்றில் இடம்பெற்ற மிக நீண்ட வேலைப் புறக்கணிப்புப் போராட்டங்களில் ஒன்றான பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டம் காரணமாகக் கடந்த ஆண்டில் மூன்று மாதங்களாக நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மின் கட்டண உயர்வு, பல்வேறு முக்கியமான தொழிற்சங்கப் போராட்ட முன்னெடுப்புகளுக்கு வழிகோலியது.

தனியார் மயமாக்கலில் அரசு காட்டும் முனைப்பு, சந்தை அடிப்படையிலான பொருளாதாரத்தில் அரசு பெருமளவு நாட்டம் காட்டுதல், சமூக நலன்புரிச் செலவின் மீதான வெட்டுக்கள், உலக நிதி மூலதனத்தினைப் பெற்றுக் கொள்வதில் அரசு காட்டும் தீவிர ஆர்வம் (குறிப்பாக சுற்றுலா மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி ஆகிய துறைகளில்) என்பன இலங்கையின் நவதாராளவாதக் கொள்கைகளின் முக்கியமான அம்சங்கள் ஆகும். அரசின் அடக்குமுறைக்கு மத்தியிலும், அரச வன்முறைக்கு மத்தியிலும் இவ்வாறான கொள்கைகள் மக்களின் எதிர்ப்பினை வெளிப்படையாகவே சம்பாதித்துக் கொண்டன என்பது இங்கு முக்கியமானது.

சனத்தொகையில் பெரும்பாலானோர் அனுபவிக்கும் இவ்வாறான துன்ப நிலை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செழிப்பான தேசியப் பொருளாதாரம் ஒன்று கட்டியெழுப்பப்படுகின்றது என்ற பிரசாரத்தினை மறுதலிக்கிறது. 2010இலிருந்து 2012 வரை, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளினைச் சார்ந்த ஊழியர்களின் உண்மை ஊதிய வீதச் சுட்டெண் 73.1 இலிருந்து 69.7ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது. சேவைகள் துறையில் இது 55.6 இலிருந்து 53.7 ஆகக் குறைந்துள்ளது. இந்த இரண்டு துறைகளும் நாட்டின் 74% ஆன வேலை செய்வோரைக் கொண்டுள்ளன. இந்தக் காலப்பகுதியில் பெரும்பாலான அரச ஊழியர்களுக்கான மெய் ஊதிய வீதச் சுட்டி ஒரே நிலையில் தேக்கம் அடைந்தோ அல்லது குறைவடைந்தோ சென்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் விலைகள் இக்காலப் பகுதியில் உறுதியாக அதிகரித்துச் சென்றுள்ளன. 2011 ஆம் ஆண்டு மே மாதத்திற்கும் 2013 ஆம் ஆண்டு மே மாதத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டி 151.5 இலிருந்து 173.9 இற்கு அதிகரித்தது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் நாளாந்த ஊதியம் பெறுவோரும் உள்ளடங்கலான தொழிலாளர் வகுப்புகள் மற்றும் வறிய மக்கள் அதிலும் குறிப்பாக வெளிநாட்டிலிருந்து பண உதவிகளைப் பெறாத குடும்பங்கள் இவ்வதிகரிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழமைவில் தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பொருளாதாரத்தினை மாற்றியமைக்கும் முயற்சிகளினை நாம் விமர்சன ரீதியாக கேள்விக்குட்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவும், பின் தங்கிச் செல்லும் ஊதியமும், சமூக நலன்புரி தொடர்பான செலவுகளின் மீதான வெட்டுகளும் பல்வேறு தீவிரமான சமூகப் பொருளாதார ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கையில் காலங்காலமாக ஊதியம் குறைவாக இருந்த போதிலும், நாட்டின் பிரஜைகள் கல்வியினையும், சுகாதார மருத்துவ சேவைகளையும் இலவசமாகப் பெற்றமையால் ஓரளவு முன்னேற்றகரமான வாழ்க்கைத் தரத்தினைக் கொண்ட நாடாக இலங்கை இருந்து வந்துள்ளது. எனினும் இவ்வாறான சமூக நலன்புரி தொடர்பான விடயங்களின் மீதான செலவினைக் குறைப்பது நாட்டின் அரசிறைச் சுமையினைத் தளர்த்துவதில் தவிர்க்க முடியாத ஒன்று என வாதிடப்படுகிறது. எரிபொருட்கள், ஏனைய பொருட்களின் விலைகளினை மேலும் அதிகரித்தல் அல்லது சந்தை மூலமாகத் தீர்மானிக்கப்பட்ட விலைகளை நியாயப்படுத்தி ஏற்றுக் கொள்ளுதல் பொருளாதாரத்தினை மேலெழுப்புவதற்கான நடவடிக்கைகளாக அமையும் என அரசாங்கம் வாதிடுகிறது. எனினும், மக்களால் எதிர்கொள்ளப்படும் பொருளாதாரச் சுமைகளின் முன்பு இவ்வாதங்கள் செல்லுபடியற்றவையாக உள்ளன என்பதனை அண்மையில் இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டங்கள் கோடிட்டுக்காட்டுகின்றன. உதாரணமாக அரசினால் கல்வியும் சுகாதாரச் சேவைகளும் வழங்கப்படுவதனைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களின் நலனுக்கு வெளிப்படையாகவே எதிராக உள்ளன. இச் செயற்பாடுகள் வீட்டுத்துறையினரை மேலும் கடன்பெறவே நிர்ப்பந்திக்கின்றன.




2006/7 காலப் பகுதிக்கான வீட்டுத்துறையினரின் வருமானம் மற்றும் செலவு தொடர்பான கணிப்பீட்டின் படி இலங்கையில் 61% இற்கும் அதிகமான வீட்டுத்துறையினர் கடன் சுமைக்கு உள்ளாகியுள்ளனர். இறுதியாக வெளிவந்த 2009/10 காலப் பகுதிக்கான வீட்டுத்துறையினரின் வருமானம் மற்றும் செலவு தொடர்பான கணிப்பீட்டின் படி வீட்டுத்துறையினரின் சராசரி மாதாந்தச் செலவுகளில் 5.1% கடன் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது. விலைகளிலும், வாழ்க்கைச் செலவிலும் ஏற்பட்டுவரும் திடமான அதிகரிப்பு, மக்களின் நாளாந்த பொருளாதார வாழ்க்கை தொடர்பான அனுபவப் பகிர்வுகள், வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் விரிவடைந்து வரும் அடகுச் சேவை வசதிகள் என்பன வீட்டுத்துறையினரின் கடன் சுமை ஏறுமுகமாக உள்ளமையினைக் காட்டுகின்றன. தேக்கமடைந்து காணப்படும் அல்லது அமுத்தப்பட்ட மெய் ஊதியத்துடன் இணைந்த அதிகரிக்கும் கடன் பொருளாதார நெருக்கடி நிலையினைத் தோற்றுவிக்கக் கூடியது.

1977இல் ஜெயவர்தனா அரசினால் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகள் தற்போதைய அரசாங்கத்தினால் முழுமூச்சாக முன்னெடுக்கப்படுகின்றன. பல்வேறு தீய விளைவுகளை ஏற்படுத்தியுள்ள நவதாராளவாதம் நாட்டிற் காணப்படும் வருமான அசமத்துவத்தினை மேலும் அகலச் செய்துள்ளது. வீட்டுத்துறையினரின் மத்தியிற் காணப்படும் வருமான ஏற்றத்தாழ்வுகளை அளவிடும் கினிக் குணகம் 1980/81 காலப் பகுதிகளில் 43 ஆக இருந்து 2009/10 காலப் பகுதிகளில் 49 ஆக அதிகரித்துள்ளது (வீட்டுத்துறையினரின் வருமானம் மற்றும் செலவு தொடர்பான கணிப்பீடு 2009-10). இந்த அதிகரிப்பின் அடிப்படையில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு, ஆசியாவில் உள்ள இரு உயர்ந்த வருமான அசமத்துவம் அவதானிக்கப்படும் நாடுகளில் ஒன்றாக சீனாவுக்கு அடுத்தபடியாக இலங்கையி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைக் குறிப்பிட்டுள்ளது. நவதாராள வாதம் குத்தகை அடிப்படையிலான கொள்வனவுகள் உள்ளடங்கலாக நுகர்வு வாதத்தினைத் தூண்டியுள்ளது. அதிகரிக்கும் செலவுகளுடன் இணைந்து இந்த நிலைமை நிதி மூல தனத்தின் கைகளைப் பலப்படுத்தியுள்ளதுடன், நுகர்வோரின் கடன் சுமையினையும் அதிகரிக்கச் செய்துள்ளது. மத்திய வங்கித் தரவுகளின் படி, 1978/79இற்கும் 2003/04 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சராசரி மாதாந்த செலவின் சதவீதமாக கடன் மீதான வட்டியின் அளவு ஏறக்குறைய நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.

பலருக்கு நெருக்குதல்களினை உருவாக்குவதன் மூலமாகவே நவதாராளவாதம் சிலருக்கு பொருளாதாரச் செழிப்பினை ஏற்படுத்தியுள்ளது. நவதாராளவாதம் ஒரு கட்டத்தில் நெருக்கடியினைச் சந்திக்கும். ஆனாலும் அது பொருளாதார வாழ்க்கை பற்றிய கருத்துகள் மீதும் பொருளாதாரக் கொள்கை வகுப்புகள் மீதும் கருத்தியல் ரீதியாக ஆதிக்கஞ் செலுத்துகிறது. நவதாராளவாதத்தினை எதிர்கொள்வதற்கு நாம் அது எவ்வாறு எமது நாளாந்த வாழ்க்கையின் ஒரு பகுதியாக உள்ளது என்பது தொடர்பாக விழிப்புணர்வு கொண்டிருக்க வேண்டும். நாம் எதனை நுகர்கிறோம், எதனைக் கற்கிறோம் என்பன பற்றி கடைகளிலிருந்து வகுப்பறை வரை நாம் கொண்டுள்ள சமூக உறவுகளில் நவதாராளவாதம் செலுத்தும் தாக்கங்கள் பற்றி நாம் விளங்கியிருத்தல் வேண்டும். எமது அன்றாட வாழ்விலும், பொருளாதாரக் கொள்கைகளிலும் நவதாராளவாதம் எவ்வாறு இயல்பாகப் பின்னிப்பிணைந்து உள்ளது என்பதனை ஆழமாகச் சிந்தித்து அதனது போலியான இயற்கைத் தன்மையினைக் கேள்விக்குட்படுத்துவதன் மூலமாகவே நாம் நவதாராளவாதத்தினை எதிர்க்கவும், கருத்தாழமிக்க மாற்றங்களை முன்வைக்கவும் முடியும்.

இலங்கையினைத் தளமாகக் கொண்டு செயற்படும் பொருளாதாரத்தினை ஜனநாயகமயமாக்குவதற்கான ஒன்றியம் வரலாற்று நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட சமூகத்துடன் தொடர்புபட்ட அரசியற் பொருளாதார பகுப்பாய்வுகளை வழங்க முற்படுகிறது. முற்போக்கான போராட்டங்களுக்கு இவ்வொன்றியம் தனது ஒத்துழைப்பினை வழங்குகிறது. இந்த அமைப்பினால் வெளியிடப்படும் கட்டுரைகளையும் ஏனைய ஆவணங்களையும் www.economicdemocratisation.org என்ற இணையத்தள முகவரியிற் பார்க்க முடியும். ■

*(பொருளாதார ஜனநாயக மயமாக்கலுக்கான ஒன்றியத்தின் அறிக்கை)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1953 ஹர்த்தால் முதல் 2013 வெலிவேரியா வரை...

**நாடு நவதாராளவாத எதேச்சாதிகார ஆட்சி ஒன்றின் கீழ் மூச்சுத் திணறுகிறது. வர்க்கப் போராட்டத்தில் பாலா தம்புவின் நம்பிக்கையும் உறுதியும் எதிர்காலத்தில் இளைய தலைமுறையினரை ஆகர்ஷித்து ஹர்த்தாலின் ஆன்மா மீள எம்மத்தியில் எழுச்சி பெறுமா?**



அகிலன் கதிர்காமர்

"மக்களின் எதிர்ப்பு பாரியதாக அமையாது என்ற எதிர்பார்ப்புடனேயே அரசாங்கம் அரிசியின் விலையை அதிகரித்தது. எனினும், ஆகஸ்ட் 12ஆம் திகதி அரசாங்கத்தின் அந்த எதிர்பார்ப்புக்கு மாறாக மக்கள் வீதிக்கு வந்தனர், வீதிக்கு வந்த மக்கள் பேருந்துகளை அடித்து நொருக்கியதுடன், புகையிரத தண்டவாளங்களையும் தொலைத்தொடர்பு தந்தித் தூண்களையும் அகற்றினர். புகையிரதங்களை வழிமறித்தார்கள். வீதிப் போக்குவரத்தினைத் தடைப்படுத்தினர். மேலும், பல இடங்களில் காவல் துறையினருடன் மோதினர். இவ்வாறு தம் பலத்தினையும் கோபத்தினையும் பல வடிவங்களில் மக்கள் வெளிப்படுத்தினர். மக்களின் இவ்வாறான எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சிய அரசாங்கம் அவசரகால நிலையை பிரகடனம் செய்தது. அத்துடன் அரிசியின் விலையைக் குறைத்ததுடன், பிரதமராக பதவி வகித்த டட்லி சேனநாயக்கா தனது பதவியை இராஜினாமாச் செய்தார். அந்த ஹர்த்தால் பலவிதமான பாடங்களைக் கற்பித்தது; நகர்ப்புறத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு கிராமத்தில் இருக்கும் தங்கள் சகோதர, சகோதரிகள் நேசசக்தியாக உள்ளனர் என்ற செய்தியை சுட்டிக்காட்டியது. மற்றும் தொழிலாளர்களும் கிராமப்புற மக்களும் ஒன்று கூடினால் முதலாளித்துவ அரசினை எதிர்கொள்ள முடியும் என்பதையும் அரசை ஆட்டங்காண வைக்கலாம் என்பதையும் தெரிவித்தது இந்த ஹர்த்தால். பலமடைந்த மக்கள் அடுத்த பாரிய போராட்டங்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்வார்கள். ஆனால், அடுத்த போராட்டம் நன்கு தயாரிக்கப்பட்டதும் பலமுள்ளதுமான எதிரியை எதிர்கொள்ள வேண்டியதொன்றாக இருக்கும்."

## (பாலா தம்பு ஹர்த்தாலின் அத்தியாயங்கள் 1956)

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் தொழிற்சங்கத்தின் தொண்ணூறு வயது -நிரம்பிய பொதுச் செயலாளர் பாலா தம்புவை கொழும்பு கொள்ளுபிட்டியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். தொழிற்சங்கங்கள் எதிர்கொள்ளும் சவால்கள், தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு பற்றி அறிந்து கொள்ளும் நோக்கிலேயே அவருடனான இச்சந்திப்பு,

உள்நாட்டு அரசியல்




1953 ஹர்த்தாலின் ஒரு காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலா தம்புவுடன் போராட்டங்கள் குறித்து ஓர் நேர்காணல்



அண்மையில் நம்மவரில் அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் சிலர், பொருளாதார ஜனநாயகமயப்படுத்தல் என்ற தன்னார்வக் குழுவொன்றை ஸ்தாபித்து முற்போக்கான போராட்டங்களுக்கு சார்பாக, அரசியல்-பொருளாதார பகுப்பாய்வை மேற்கொள்ளும் நோக்கோடு செயற்பட்டு வருகிறோம். இதனடிப்படையில் 1953 பெரும் ஹர்த்தால் எமக்களித்த வரலாற்றுப்பாடத்தினை மனதில் கொள்வதும் அதன் முக்கியத்துவத்தை தற்போதைய பின்புலத்தில் புரிந்து கொள்வதும் அவசியம் என்ற நிலைப்பாட்டில் பாலாவுடன் அதுபற்றி உரையாட நான் விரும்பினேன்.

## அரிசியும் நீரும்

இந்நேர்காணலின் போது பாலா, காலனித்துவத்துக்கெதிரான போராட்டம், காலனிய விடுதலை, 1941இல் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைமறைவு வாழ்க்கையுள் நுழைவு, ஆரம்ப காலத்தில் விவசாயத்துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தமை, 1948இல் தொழிற்சங்கத் தலைவராக தான் தலைமைவகித்தமை, பல தசாப்தங்களாக தொடர்ந்து தொழிலாளர் வர்த்தகத்தினருடனான வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றி அவர் பேசினார்.

''நீங்கள் வெலிவேரியாவில் சாதாரண, ஆயுதம் தரியாத மூவர் துப்பாக்கிச் சூட்டுக்கிரையான செய்தியைப் படித்திருப்பீர்கள். அந்தத்தாயின் முகத்தைப் பார்த்தீர்களா? திகிலடைந்த அந்த முகம்? ஒரு தாய்க்கு வேறெதையும் விட அவளின் மகன் தான் முக்கியம். அந்த மகன் அவளுடையவன், அவளின் ஒரு அங்கம். மக்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இதுதான் எல்லாவற்றையும் விட முக்கியம் பெறுகிறது. இக்கொலைகளுக்கு காரணம் யாது? ஒரு சில நூறு சாதாரண மக்கள் கண்டி வீதியில் இறங்கி போக்குவரத்தை, வாகனங்களைத் தடை செய்தனர். ஏன் செய்தார்கள்? நான் சொல்லுகிறேன், ஏனெனில் நான் 1953 ஹர்த்தாலில் நின்றிருந்தேன்,



வெலிவேரியாவில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான மாணவனின் இறுதி ஊர்வலம்

அச்சமயம் நிதி அமைச்சராயிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனா அரிசியின் விலையை மூன்று மடங்காக 25 சதத்திலிருந்து 75 சதமாக உயர்த்தினார். பலப்பிட்டியவில் வறிய மக்களின் முக்கிய வாழ்வாதார முயற்சி, தென்னைமர தும்பு செய்தல், தும்பின் விலை விழுந்தது. ஆனால், அரிசியின் விலை உயர்ந்தது. பெண்கள் குறிப்பாக தாய்மார், தம் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க வழியின்றித் தவித்தனர். அவர்களுக்கு அரிசி வாங்கப் பணமில்லை. அவர்கள் என்ன செய்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள்? மக்கள் மிகுந்த நெருக்கடிக் குள்ளாகும் பொழுது, அவர்கள் தமது கையாலாகாத நிலைமையை வெகுஜ னத்தின் கவனத்துக்குக் கொணரும் நோக்கத்துடன் வீதிக்கு வருகிறார் கள். இது ஒரு போராட்டம் எனக் கொள்ள இயலாது. வெறுமனே அவர்கள் தம் -நிலைமைபற்றி கவன ஈர்ப்புப் பெறுவதற்கு செய்யும் முயற்சியாகும். பலபிட்டியவில் ஒரு கிராமத்திலிருந்து ஒரு பெண் கள் கூட்டம் காலி - கொழும்பு வீதி யில் போய் அமர்ந்து வாகனப் போக் குவரத்தைத் தடை செய்தார்கள். அப் பொழுது அம்பலாங்கொடை பொலி ஸார் வந்தனர். ஒரு இளைய காவல் துறை அலுவலர் அங்கு அமர்ந்திரு ந்த 70 வயது பெண்மணியை அணு கினார். அவருடைய ஒரு முழங்கை யைப் பிடித்து அவரை எழுப்பி அங் கிருந்து அப்புறப்படுத்த முயன்றார். அவ்வயோதிபப் பெண்மணி தனது மறு கையால் காவல்துறை அலுவல ருக்கு கன்னத்தில் அறைந்து விட்டார். அச்சமயம் நான் லங்கா சமசமாஜக் கட்சியின் உயர் மத்திய குழுவில் இருந்தேன். இந்த நிகழ்வு ஒரு முக்கி யமான திருப்புமுனை என நான் அப் பொழுது எண்ணினேன். இது ஒரு கொழு ந்து விட்டெரியக்கூடிய ஒரு சிறு தீப்பொறி. நாம் ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டி யிருந்தது. அப்பெண்கள் வீதிக்கு இறங்கியதும் அம்முதிய பெண் உதவி காவல்துறை அதிகாரியை கன்னத்தில் அறைந்தமை அவர்கள் எவரையும் எதிர்க்கத் தயாராகிவிட்ட ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு விட் டார்கள் என்பதன் அறிகுறியேயா கும். இதுவே லங்கா சமசமாஜக் கட்சி ஒரு பொது வேலை நிறுத்தத்தை, ஹர்த்தாலை அறைகூவக்காரணமா னது.

நான் அந்த ஹர்த்தாலை ஒழுங்கு செய்திருந்ததனால் இன்று வெலிவே ரியாவில் ஏன் மக்கள் தெருவில் இறங்கினார்கள் என வினவுகின் றேன். தண்ணீர்! வெலிவேரியாவில் மக்களுக்குத் தேவை தண்ணீர், ஏன், மனிதருக்கு தண்ணீர் ஒரு அடிப்ப டைத் தேவை. நான் தாவரவியல் கற் றவனாகையால் எவ்வகையில் தண் ணீர் தாவரங்களுக்கும் தேவை என் பதை நன்கு உணர்ந்தவன். தண்ணீர், வாழ்க்கையின் அடிப்படைத் தேவை. நாம் எமது தொழிற்சங்கத்தினால் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவிருக் கின்றோம். இந்தத் தீவினில் உயிர் வாழும் ஒவ்வொரு மனிதருக்கும் தூய நீர் வசதி வழங்குவது அரசின் கடமை. முதலாளித்துவ தொழிற்சா லைகள் பல்தேசியக் கம்பனிகளிலி ருந்து வரும் கழிவுகள், இரசாயனப் பதார்த்தங்கள் மக்களின் கிணறு களை மாசடையாமல் செய்வது முக் கியம்.

தண்ணீர் தான் பிரச்சினைக்குரிய விடயம். தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நச்சு இரசாயனப் பதார்த் தங்கள் தமது கிணறுகளை மாசுபடுத் துகின்றன என நம்பிய மக்கள் போய் இராணுவத்தை எதிர்கொள்ளத் தயா ராய் இருந்தார்கள் என்பதை நாம் மூடி மறைக்க முடியாது. இப் போராட்டம் இன்னொரு விடயத் தையும் தெளிவுபடுத்துகின்றது. இந் நாட்டில் சாதாரணமானதொரு பிரச் சினைக்கு தெருவில் மறியல் செய் தால் அதற்கான தண்டனை: மரண தண்டனை! அதுதான் இங்கு நிலைமை. மரணதண்டனை!''

### ஒடுக்குமுறையும் போராட்டமும்

பாலாதம்பு தொழிற்சங்க வரலாற் றில் பலரை வளர்த்து செல்வாக்குச் செலுத்தியவர். இதேவேளை, பலரு டனும் முரண்பட்டும் உள்ளார். அவர் தொழிற்சங்கத்திற்கு தலை மைத்துவம் வழங்கிய 65 வருட காலப்பகுதியில் தொழிற்சங்கம் அர சியல் மயப்பட்டும் உள்ளது. ஆனால், பல தசாப்தங்களாக அர்ப்ப ணிப்புடனான தம்புவின் சேவையை மதிக்கும் முகமாக தொழிற்சங்க ஆராய்ச்சிக்கும் கல்விக்குமான தேசிய அமைப்பு இவரை கௌரவித் துள்ளது. இவ்வமைப்பு நாட்டில் உள்ள கூடுதலான அமைப்புகளை இணைத்து ஒரு இயக்கமாகச் செயற் பட்டு இயங்கி வருகின்றது.

பாலா தம்புவின் கருத்துகளை ஏற் றுக்கொள்கிறோமோ இல்லையோ அவருடைய ஆளுமையினால் சகல ரும் ஊக்கமடைவர் என்பதனா லேயே அவர் கௌரவிக்கப்படுகின் றார். அவரின் ஊக்கம் தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்களையும் அரசியல் வாதிகளையும் எதிர்காலத்திலும் தொடர்ந்து ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை. பாலாதம்பு ஒரு சில நாட்களில் பிரதான தொழிற்சங்கங் கள் அனைத்தும் அங்கம் வகிக்கும் தேசிய தொழிற்சங்க ஆய்வுகளுக் கும் கல்விக்குமான அமைப்பு தமது 15ஆவது வருடத்தைக் கொண்டா டும் பொழுது பாலா தம்புவை கௌர விக்க உத்தேசித்துள்ளது. உழைக்கும் மக்களுக்கான அவரது அர்ப்பணிப்பு இலங்கையிலும் வேறு நாடுகளிலும் உள்ள தொழிற்சங்கவாதிகள், இடது சாரிகளின் வரும் தலைமுறையின ருக்கு அவர் ஒரு ஆதர்ஷ புருஷனாக இருப்பார்.

எகிப்திலும் டியுனிஸியாவிலும் ஏற்பட்ட அரபு எழுச்சிகளுக்கு ஆத ரவு நல்கும் வகையில் தம்புவின் அலுவலகத்தில் சுவரொட்டிகள் ஒட் டப்பட்டுள்ளன. உலகளாவிய ரீதி யில் பாலா தம்புவுக்கு தொழிற்சங்க வாதிகளுடன் இருக்கக்கூடிய தொடர்புகள் மற்றும் உலக முதலா ளித்துவ முறைமை எவ்வகையில் அழிவைக் கொணரக்கூடும் என்பது பற்றிய அவரின் புரிந்துணர்வு ஆகி யவை எமக்குப் புலப்படுகின்றது. இத்தகைய ஒரு புரிந்துணர்வுக்கு ஒரு மார்க்ஸிய உலகளாவிய கண் ணோட்டம் அத்தியாவசியம். பாலா வின் துணிச்சல், அர்ப்பணிப்பு ஆகி யவற்றால் கவரப்பட்ட எம்மில் பலரு க்கு ஒரு கேள்வி எழுகிறது. பாலா வின் உத்வேகம் எங்கிருந்து வருகின் றது? பின்வருவது ஒரு உதாரணம்.

"1967இல் நான் அமெரிக்காவிலி ருந்த பொழுது, நியூயோர்க் திரைய ரங்கு ஒன்றில் கறுப்பர்களின் உரி மைப்போராட்டம், வியட்நாம் போருக்கெதிரான போராட்டம் ஆகி யவற்றுக்கு ஆதரவாக நடந்த ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கூட்டத்துக்குச் சென்றிருந்தேன். பலரும் என்னை ஒரு வீரியமுள்ள பேச்சாளர் எனக் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால், அந்தக் கறுப்பின பேச்சாளர்களின் பேச்சை நீங்கள் கேட்க வேண்டும். அவர்களுக்கு அருகில் நான் ஒரு சாதாரணப் பேச்சாளர் என்றுதான் கூற வேண்டும். அங்கு வன்முறையற்ற ஒருங்கிணைப்பிற்கான குழு என்ற ஒரு சங்கத்திலிருந்து ராப் பிறவுண் என்று ஒரு இளம் மாணவப் பேச்சாளர் வந்திருந்தார். வன்முறையற்ற இச்சங்கம் சார்பாக அவ்விளைஞன் தமது போராட்டங்களில் தீவைத்தலை ஒரு நியாயமான போராட்ட முறைமையாக ஆதரித்துப் பேசினான். நான் அவனுடைய பேச்சைக்கேட்டேன். பின் அவன் கைது செய்யப்பட்டான். நான் அதை தொலைக்காட்சியில் பார்த்தேன். மிக உயரமானவன், கைவிலங்குடன் காணப்பட்டான். பத்திரிகையாளர்கள் அவனிடம் கேள்வி கேட்ட வண்ணமே அவனுடன் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். இந்த 'தீவைப்பு' குற்றச்சாட்டு பற்றி என்ன சொல்கிறீர்கள் என ஒருவன் கேட்டான். 'கறுப்பர்களே ஐக்கிய அமெரிக்காவைக் கட்டி எழுப்பினார்கள் கறுப்பர்களே அதை இழுத்து வீழ்த்துவர்!' எனக் கூறினான். அவனுக்குப் பிணை வழங்கப்பட்டு நியூயோர்க்கில் கூட்டத்தில் பேச வந்தான். கூட்டம் நிரம்பி வழிந்தது. பார்வையாளர்களில் மூன்றிலொருவர் வெள்ளையர். மூன்றிலிரு பகுதியினர் கறுப்பர்கள். இதுதான் கறுப்பர் விடுதலை இயக்கமும் வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கமும் ஒன்றாக இணைந்து நடத்தியது. நானும் அன்று கூட்டத்தில் இருந்தேன். நான் பிணையில் வெளிவந்திருக்கிறேன். என்னை வழக்குக்கு கொணரும் பொழுது நீங்கள் எல்லாம் நீதிமன்றைச் சூழ்ந்து கொள்ள வேண்டும். என்னை சிறைக்கு அனுப்பினால் கோர்ட்டை உடைத்து வீழ்த்துங்கள்...' என்று அவன் சொன்னான். ஹா... ஹா....''

அறுபதுகளில் கறுப்பர் விடுதலை இயக்கமாயிருந்தாலென்ன இன்று வெலிவேரியா கிராமத்தவரின் போராட்டமாகவிருந்தாலென்ன பாலாவுக்கு ஒடுக்கப்பட்ட மக்களும் அவர்களின் போராட்டங்களுமே அரசியல் முக்கியத்துவம் பெறுபவை. அரசியல் பற்றிய அவரது கண்ணோட்டத்தின் வித்தியாசமும் அதுவே. கட்சிகளும் பாராளுமன்ற அரசியலும் அவருக்கு முக்கியமல்ல.

''அநேகமான அரசியல் கட்சிகள் உழைக்கும் மக்களை வெறும் வாக்களிக்கும் வாக்கு வங்கிகளாகவே பார்க்கின்றன. கட்சிகள் தொழிற்சங்கங்களை ஒழுங்கமைத்து, கட்டுப்பாட்டில் வைத்திருப்பதனால் தொழிலாளருடைய வாக்குகளை உறுதிப்படுத்துவதற்கு சிறந்தமுறை தொழிற்சங்கங்களில் அவர்களைப் பதிவு செய்து கொள்வது தான். பாராளுமன்ற முறைமை பற்றிய எனது அனுபவமும் அறிவும் சொல்வது யாதெனில், முதலாளித்துவ அமைப்பு பாராளுமன்ற அரசியலை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்கிறது. அசாதாரண சூழ்நிலைகளில் எழுந்த சர்வாதிகார ஆட்சிகள் இருந்துள்ளன. ஆனால், கடைசியில் அவற்றால் நிலைத்து நிற்க முடியவில்லை. தேர்தலடிப்படையிலான பாராளுமன்ற அரசியல் முறைமைகள் இச்சர்வாதிகார அரசியலை பிரதியீடு செய்கின்றன. மக்கள் பாராளுமன்ற அரசியல் பொறிமுறைக்குள் வாக்காளர்களாகச் சிக்கிக் கொள்கிறார்கள். தவிர்க்கமுடியாதபடி அரசாங்கம், எதிர்த்தரப்பு என்ற இரு துருவ அரசியல் முதலாளித்துவ முறைமைக்கு ஒரு மின் ஆழி (ஸ்விட்ச்) போல் சேவகம் செய்கின்றது. அது நிலைமாறி மாறி மின் விசை ஒளிர்ந்து அணையுமாப்போல் இயங்குகிறது. ஒரு பக்கம் அழுத்தம் கூடும் பொழுது மற்றப் பக்கம் அழுத்தம் பாய்கின்றது. அது ஒரு பாதுகாப்பு வால்வு மாதிரி இயங்குகின்றது. முதலாளித்துவ முறைமையுடன் இணைந்து முதலாளித்துவ ஆட்சியைப் பூர்த்தி செய்யும் ஒரு பாத்திரத்தை வகிக்கின்றது.''

> முதலாளித்துவ அமைப்பு பாராளுமன்ற அரசியலை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்கிறது என்பதே பாராளுமன்ற முறைமை பற்றிய எனது அறிவும் அனுபவமும். அநேகமாக அரசியல் கட்சிகள் உழைக்கும் மக்களை வாக்கு வங்கிகளாக மட்டுமே பார்க்கின்றன. மக்கள் பாராளுமன்ற அரசியல் பொறிமுறைக்குள் வாக்காளர்களாக சிக்கிக்கொள்கிறார்கள்

நாடு நவதாராளவாத எதேச்சாதிகார ஆட்சியொன்றின் கீழ் மூச்சுத் திணறுகின்றது. பாலாவின் பாராளுமன்ற அரசியலைப் பற்றிய விளக்கம் எமது சிந்தனையைத் தூண்டி ஆழமான ஒரு தேடலை மேற்கொண்டு மாற்று வழிகளைக் கண்டடைய எம்மை இட்டுச் செல்ல வேண்டும். வர்க்கப் போராட்டத்தில் பாலாவின் நம்பிக்கையும் உறுதியும் எதிர்காலத்தில் இளைய தலைமுறையினரை ஆகர்ஷித்து 1953 ஹர்த்தாலின் ஆன்மா மீள எம்மத்தியில் எழுச்சி பெறுமா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

சாந்தி சச்சிதானந்தம்

# தமிழ் அரசியல் கட்சிகளுக்கான செயற்திட்டம் - ஒரு யோசனை

**1980** களிலிருந்து மேற்கு நாடுகளின் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் சமூகப் போராட்டங்கள் பற்றிய ஆய்வுகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பார்க்கலாம். 1960 களுக்குப் பிற்பட்ட காலத்தில் குறிப்பாக பின்காலனித்துவ நாடுகளில், அரசுக்கும் அதன் பிரஜைகளின் ஓர் பகுதியினருக்கும் இடையிலே நிகழ்ந்த வன்முறையான முரண்நிலைகளே உலகின் 90வீதமான யுத்தங்களாக இருந்ததே கல்வியியலா ளர்களின் இந்த ஆர்வத்துக்குக் கார ணம் எனலாம். அரசுக்கெதிரான மக்கள் போராட்டங்களின் சமூகப் பின்னணிகளையும் மூலோபாயங்களையும் ஆராய்ந்ததன் பயனாக அவற்றின் விஞ்ஞானபூர்வமான கோட்பாடுகளை உருவாக்க அவர்களால் முடிந்தது. தற்போது வழக்கிலிருக் கும் முரண்நிலைகளின் கற்கை நெறிகளுக்குள் ஜீன் ஷார்ப் (Gene Sharp) என்பவரின் வன்முறையற்ற போராட்டங்களைப் பற்றிய கோட்பாடுகளே மிகப் பிரபலமாகப் பேசப்படுகின் றன.

வெறுமனே ஆய்வாளராக மட்டுமல்லாமல் ஓர் செயலாளியாகவும் திகழ்ந்ததே ஜீன் ஷார்ப்பின் சிறப்பாகும். காலங்காலமாக நிகழ்ந்து வந்த மக்கள் போராட்டங்களையெல்லாம் ஆய்வு செய்து அவற்றை நவீன உலகில் எவ்வாறு செயற்படுத்தலாம் என செயல் ரீதியான கோட்பாடுகளை அவர் முன்வைத்தார். விசேடமாக, அரசின் அதிகாரத்தைப் பற்றியதான அவருடைய பகுப்பாய்வு மிகச்சிறப்பானதாகும். அசைக்க முடியாத அச்சமுறும் வகையிலான அதிகாரம் பொருந்திய ஒற்றை வடிவமாக, பொதுவாக அரசுகள் மக்களினால் பார்க்கப்படுகின்றன. இதற்கு மாறாக, காலத்துக்குக் காலம் மாறுபடும் தனித்துவமான நலன்கள் கொண்டியங்கும் வெவ்வேறு மக்கள் குழுமங்களின்



> அதிகாரப் பகிர்வினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அதிகாரப் பகிர்ந்தளிப்பு

நேரடியானதும் மறைமுகமானதுமான ஆதரவுடனே இயங்கும் ஓர் பாரிய இயந்திரமாக அரசினை ஷார்ப் நிறுவினார். ஒரு இயந்திரத்தில் ஒரு சிறிய அங்கம் பழுதடைந்தால் கூட அது முழு இயந்திரத்தையும் நிலைகுலையச் செய்வது போலவே எல்லோரும் அச்சமுற்றிருக்கும் கொடுங்கோலரசுகளும் அவற்றின் ஆதரவுத் தளங்களின் ஒரு தளத்தினை இழந்தாலும் ஓரிரவுக்குள் கவிழ்த்து விட முடியும் என வாதாடினார். இன்று உலக நாடுகளில் மக்கள் போராட்டங்களை நெறிப்படுத்துபவர்களுக்கும் அவற்றில் பங்கு கொள்பவர்களுக்கும் ஜீன் ஷார்ப்பின் நூல்களே வேதவாக்காக இருக்கின்றன. 2004 ஆம் ஆண்டளவில் உக்ரெய்ன் நாட்டில் அப்போதிருந்த அரசின் தேர்தல் மோசடிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக வெற்றிகரமாகக் கிளர்ந்தெழுந்த செம்மஞ்சள் புரட்சியானது (Orange Revolution) ஜீன் ஷார்ப்பின் கோட்பாடுகளை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட போராட்டமாகும். ஜீன் ஷார்ப்பின் கோட்பாடுகள் உலக நாடுகளில் முற்றுமுழுதான மாற்றத்தைக்கொண்டு வரும் புரட்சிக்கு இன்னமும் இட்டுச்செல்லவில்லையாயினும் தமது செயலாற்றலைப் (Agency) பற்றி மக்கள் கொண்டுள்ள சிந்தனைகளிலே அவர் பாரிய மாற்றங்களைக்கொண்டு வந்திருக்கின்றார் என்றுதான் கூறவேண்டும்.

ஷார்ப் முன்வைத்த முரண்நிலையின் உருமாற்றத்திற்கான தீர்வுகள் பல எங்கள் நாட்டுக்கும் பொருந்துவனவாகும். குறிப்பாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் ஒரு முறையான மூலோபாய த்தைக் கொண்டிருக்க வில்லை எனப் பல தரப்புகளாலும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இன் றைய நிலையில், இவருடைய நடை முறைகள் அத்தகைய மூலோபாயங் களை உருவாக்கக்கூடிய ஆரம்பங்க ளாக இருக்கின்றன. ஆரம்பம் என்று கூறியதன் காரணம் யாதெனில், ஒவ் வொரு சமூகமும் ஒவ்வொரு நாடும் தனித்துவமான பண்பாடும் வர லாறும் அனுபவங்களும் கொண்ட இயல்பினால், எமக்கேயுரிய உபா யங்களை நாம் போகப்போக உரு வாக்கிக் கொண்டுபோக வேண்டும் என்பதனாலாகும்.

வித்தியாசமான இயல்புகள் கொண்ட பல பாகங்களாலான இயந் திரமே அரசு என்பதுதான் ஷார்ப்பின் முதன்மையான கோட்பாடாகும். இலங்கை அரசினை எடுத்துக்கொண் டாலும் அதனைக் கண்கூடாகக் காண லாம். அமைச்சரவைக்குள் இருக்கக் கூடிய வேறுபாடுகள், மத்திய அர சாங்கத்துக்கும் மாகாண மட்ட அர சாங்கத்துக்கும் இடையில் இருக்கக் கூடிய நலன் சார்ந்த போட்டிகள், பிர தேச மட்டங்களில் இயங்கும் அரசி யல்வாதிகளில் முதற் குடும்பத்தின் ஆதரவு பெற்றவர்களும் ஆதரவு பெறாதவர்களுக்குமிடையிலான அதிகாரப் போட்டிகள் போன்றன இந்த இயந்திரத்தினை நிலைகுலைய வைக்கும் ஆற்றல் கொண்டன. எப் பொழுதும் அதிகாரத்திலிருந்து வில க்கப்பட்டவர்கள்தாம் ஜனநாயகக் கோட்பாடுகளை ஆதரிப்பவர்களாக இருப்பார்கள் என்பதனால், மேற்கூ றிய தளங்களில் அதிகாரத்திலிருந்து விலக்கப்பட்டவர்களுடன் உறவினை வளர்த்துக்கொண்டு இரு சாரா ருக்கும் பொதுவாக இருக்கக்கூடிய விடயப் பிரச்சினைகள் தொடர்பில் கூட்டு நடவடிக்கை எடுத்தல் அவசி யமாகும். பொதுவாகவே, அரசுக் குள் இருந்துகொண்டு அதிகாரத்திலி ருந்து விலக்கப்பட்டவர்களுக்கு, தாம் தனிமைப்படுத்தப்பட்ட உண ர்வே பிரதான கவலையாக இருக்கும். அவர்களுக்குக் கை கொடுப்பதான நடவடிக்கைகளை எடுக்கும்பொழுது அவர்களை வலுவுணர வைக்கும் 13 ஆம் திருத்தச் சட்டத்தினைக் குறித்து இன்று உருவாகியிருக்கும் விவாதங் கள் இங்கு விவரிக்கப்பட்ட பின்ன ணிகளின் விளைவாலேயே ஏற்பட்டி ருக்கின்றன. இச்சட்டத்தினையொட்டி ஒரு பொது வேலைத்திட்டத்தினை தென்னிலங்கையின் அதிகாரம் நிராக ரிக்கப்பட்ட அரசியல் சக்திகளுடன் சேர்ந்து தீட்டுவதற்கான வாய்ப்பு களை அவை தந்திருக்கின்றன.

சகல மக்களினதும் நேரடியானதும் மறைமுகமானதுமான ஆதரவினால் தான் அரசுகள் நிலைக்கின்றன என் பது இக் கோட்பாட்டின் அடுத்த அம் சமாகும். இந்த ஆதரவு அரசின் ஆளும் வர்க்கத்தினால் இலாபமடை கின்ற மக்களால் மட்டுமன்றி அத னால் பாதிப்படைகின்ற மக்கள் குழு மங்களினாலும் வழங்கப்படுகின்றது. அவ்வாறு இரு பக்கத்தைச் சார்ந்த மக்களினாலும் ஆதரவு வழங்கப்படு வதனால்தான் எந்த அரசும் நிலைக் கக்கூடியதாக இருக்கின்றது. உதாரண மாக, ஸ்ரீலங்கா அரசினால் பாதிக்கப் படுகின்ற தமிழ் மக்கள் தங்களின் ஆதரவினாலும் இந்த அரசு நிலை நிறுத்தப்படுவதைக் காட்டலாம். அரச உத்தியோகத்தர்களாக சேவகம் செய்து அரசின் பல அடக்குமுறைக் கொள்கைகளையும் மறு பேச்சின்றி செயற்படுத்தும்போதும், ஆளுங் கட்சி அரசியல்வாதிகளிடம் சென்று வேலைவாய்ப்புகளை இறைஞ்சும் போதும், அரசின் அதிகாரத்துக்கு ஒரேயொரு மாற்றதிகாரமாக இருக் கக்கூடிய சிவில் சமூகங்களுக்கு தகுந்த ஆதரவு வழங்காமல் இருக் கும் போதும், வாக்குரிமையைச் செயற்படுத்துவதும் தகுந்த வேட் பாளர்களைத் தெரிவு செய்வதும் அவர்கள் தமது கடமைகளைச் செவ் வனே நிறைவேற்றுகின்றார்களா எனக் கண்காணிப்பதும் போன்ற தேர் தல் முறைவழிகளில் பங்கேற்காமல் இருக்கும்போதும், அவர்கள் அரசி னைத் தக்க வைக்கும் வழிகளில் இய ங்குகின்றனர். இந்நிலையை மாற்றுவ தற்கு, பிரதேசங்கள்தோறும் மக்கள் பேரவைகளைத் தாபித்து அவற்றின் மூலமாக அரசியல் விடயங்கள் பற்றி யும் அவற்றில் மக்களின் செயற்பாடு கள் எவ்வாறு இருக்க வேண்டும் என் பது பற்றியும் விளக்கத்தினையும் விழிப்புணர்வினையும் வழங்குதல் அவசியமாகும்.

மக்கள் போராட்டங்களின் வடிவங் களை நுண்ணியதான முறையில் பகு த்து அவற்றின் உபயோகங்கள் பற் றிய விளக்கங்களைத் தந்தது ஷார்ப் பின் அடுத்த பங்களிப்பாகும். என்ன பிரச்சினையானாலும் நாலைந்து பதா கைகளைத் தாங்கிக் கொண்டு வீதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதொ ன்றே எமது அரசியல் கட்சிகளுக்கு இதுவரை தெரிந்த ஒரேயொரு நடை முறையாக இருக்கின்றது. இதற்கு மாறாக, ஹாஸ்ய உணர்வினைத் தூண்டுவதாயும் புதுமையான வழிக ளில் தமது ஒத்துழையாமையை அர சுக்குக் காட்டுவதாயும் அரசு பதில் நடவடிக்கை எடுக்க முடியாத வகை யிலான பொது நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாயும் ஏளனம் செய் யும் யுக்தியின் மூலமாக ஜனநாயக விழுமியங்கள் பற்றிய விழிப்புணர் வினை ஏற்படுத்துவதாயும் இருக்கக் கூடிய நூற்றுக்கணக்கான யுக்திகளை ஷார்ப் வரலாற்றின் பாடங்களாக நமக்குத் தந்திருக்கின்றார். ஒவ் வொரு மக்கள் போராட்டத்தின் விளைவாகவும் இன்று இந்த நிரல் நீண்டு கொண்டேயிருக்கின்றது. போராட்டங்களின் வடிவங்கள்கூட எதிர்பாராத புதிய கூட்டணிகளைத் தோற்றுவிக்கும் தன்மை கொண்டன என்பதைக் கடந்த தசாப்தத்தின் பல உலகப்போராட்டங்கள் நமக்குக் காட் டியிருக்கின்றன.

இத்தகையதொரு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டுமானால், அதற்குப் பொருத்தமான வாகனமாக தமிழ் அரசியல் கட்சிகள் மாற்றப்பட வேண்டும். ஒரு சிறிய தலைமைக் குழு இதனைப் பாரமெடுப்பது இய லாதவொன்தென்பதனால் அவற்றின் உட்கட்டமைப்புகளில் பாரிய

*(54ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

பொ.பூலோகநாதன்



# கொழும்பு துறைமுக விஸ்தரிப்பு
# தென்னிந்திய துறைமுகங்களின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

இலங்கை - இந்திய உறவென்பது நீண்டகால பாரம்பரிய மிக்கதொன்றாகும். இன்று தனித்தனி நிலப்பரப்புகளாக பாக்கு நீரிணையில் பிரிக்கப்படும் இந்நிலப்பரப்புகள் வரலாற்று க்கு முற்பட்ட காலத்தில் ஒரே நிலப் பரப்புகளாகவே இருந்தன என்பது புவிச் சரித்திரவியலாளர்களின் கருத்தாகும். இதுவே இன, மத, மொழி ரீதியில் இரு நாட்டிற்கும் ஒத்த இயல்பைக் கொடுத்தது எனக் கூறலாம். வரலாற்றுக் காலம் தொட்டே இலங்கையின் அமைவிடம் உலக நாடுகளினைக் கவரும் வகையில் இந்து சமுத்திரத்தின் மத்தியிலும், கிழக்கு - மேற்கு வியாபாரப் பட்டுப் பாதையின் கேந்திர நிலையமாகவும் விளங்குவதனால் இயற்கையாகவே அனை த்து நாடுகளினாலும் கவரப்பெற்ற முக்கியத்துவமிக்க ஓர் தீவாக விளங்குகிறது.

பிற்பட்ட காலங்களில் இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கிலேய குடியேற்றவாதமும் இலங்கையின் முக்கியத்துவத்தினை மேலும் அதிகரிக்கச் செய்தது. இலங்கையின் இயற்கையாக அமையப்பெற்ற திருகோணமலை துறைமுகமும், செயற்கையாக அமையப்பெற்ற கொழும்பு துறைமுகம் இலங்கையின் முக்கியத்துவத்தை மேலும் மேலும் வலுப்படுத்தியது. ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியில் வியாபாரம் முக்கிய ஸ்தாபனத்தைப் பெறுகிறது. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே உரோமனியார், அரேபியர், சீனர் எனப் பலர் இலங்கையின் துறைமுகங்களினூடாக தமது கடல் வணிகத்தினை பருவ காலங்களுக்கேற்ப மேற்கொண்டனர்.

பின்னர் அந்நிய காலனித்துவ காலங்களில் குறிப்பாக கோட்டே இராச்சியக்காலத்தில் கொழும்புத் துறைமுகம் மிக முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக விளங்கியது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோர் வாசனைத் திரவியங்களையும், தேயிலை போன்றவற்றினையும் கொழும்புத் துறைமுகத்தினூடாக தமது நாடுகளுக்குக் கொண்டு சென்றனர். கொழும்பு துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்டே கொழும்புத் இலங்கையின் தலைநகரமாகவும் மாற்றம் பெற்றது. எனவே, பண்டையகாலம் தொட்டே இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக கொழும்புத் துறைமுகம் விளங்கியது என்பதில் ஐயமில்லை.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் வியாபார முக்கியத்தினை அடிப்படையாகக் கொண்டு 1980 ஆம் ஆண்டு இலங்கைத் துறைமுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் இலங்கையின் துறைமுக விஸ்தரிப்புப் பணிகள் வெகுவாக விருத்தியடையத் தொடங்கியது. கொழும்புத் துறைமுக விஸ்தரிப்புப் பணியின் ஒரு கட்டமே கொழும்பு தெற்கு துறைமுக விஸ்தரிப்புப் பணியாகும். இக்கொழும்பு தெற்குத் துறைமுகமானது 2011 ஆம் ஆண்டு டிசம்பர் தனது விஸ்தரிப்பு பணியினை ஆரம்பித்து 05.08.2013 அன்று இலங்கை ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. 500 மில்லியன் அமெரிக்கடொலர் செலவில் அமைக்கப்பட்ட இக்கொழும்புத் துறைமுக தெற்கு விஸ்தரிப்புக்கு சீன அரசாங்கம் 85% உதவியினையும் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் 15% உதவியுடனும் வெற்றிகரமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

இக்கொழும்பு தெற்குத் துறைமுக விஸ்தரிப்பின் காரணமாக இந்திய துணைக்கண்டத்திலும், இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் உள்ள பெரியளவிலான கப்பல் போக்குவரத்தினை இலங்கையை நோக்கி ஈர்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2020ஆம் ஆண்டளவில் இத்துறைமுகத்தினூடான வருமானம் 100 பில்லியனாக அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது இவ்வாறிருக்கையில், கொழும்பு துறைமுக விருத்தியினால் தென்னிந்திய துறைமுகங்கள் பல தமது பொருளாதாரத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இந்தியாவின் கிழக்கு, மேற்கு கரைத்துறைமுகங்களுக்குச் செல்லும் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தினை நாடுவதற்கு வாய்ப்பாக கொழும்புத் துறைமுக விஸ்தரிப்புப் பணி அமைந்திருக்கிறது. இதனால் தூத்துக்குடி, கொச்சி, சென்னை போன்ற இந்தியத் துறைமுகங்கள் தமது வருமானத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. தற்போது கொச்சியில் அமைக்கப்பட்டுள்ள வல்லர் பாடம் கண்டெயினர் முனையமும் சரியான முறையில் பராமரிக்கப்படுவதில்லை என்பதனால் தென்னிந்திய துறைமுகங்களுக்கு பெருமளவு பாதிப்புகள் ஏற்படும்.

கடந்த சில வருடங்களாக இந்தியா தனது கடல் வணிகத்தை விஸ்தரிக்கும் நோக்குடனும், கடல் வளத்தை பாதுகாக்கும் நோக்குடனும் 2003ஆம் ஆண்டு முதல் கடல் வள பாதுகாப்பு செயற்றிட்டத்தினை அமுலாக்கி வருகின்றது. இதற்காக ஐ.நா. விடமிருந்து 140 கோடி ரூபாய்களை உதவியாகவும் பெற்றிருந்தது. அத்தோடு சேதுக்கால்வாய் திட்டத்தினை அமுல்படுத்துவதனூடாக பிராந்திய கடல் வணிகத்தினை தனது பக்கம் திருப்புவதற்கும், இந்து சமுத்திர பிராந்திய நாடுகளுக்கிடையிலான அதிகரித்த தொடர்பு, கடல் வணிகத்தின் விருத்தி போன்ற திட்டங்களை இந்தியா தம்மிடம் வைத்துக் கொண்டிருக்கும் தருணத்தில் கொழும்பு துறைமுக விஸ்தரிப்பு இந்தியத் துறைமுகங்களில் பொருளாதார விருத்தியில் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

அதுமட்டுமன்றி, இங்கு இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்பு குறித்தும் இதனூடாக நோக்குவது சாலச் சிறந்தது. தற்போது இந்து சமுத்திர கடல் பிரதேசத்தினுள் சீனாவின் ஆதிக்கம் வெகுவாகத் தலைதூக்கியுள்ளது. இந்தியாவின் வங்காள விரிகுடாப் பகுதியிலும் அந்தமான் தீவை அண்டிய பகுதியிலும் இந்திய மத்திய தட்டை உள்ளடக்கிய கடற்பிரதேசத்திலும் சீனாவின் நேரடி ஆதிக்கம் நிகழ்கிறது. அத்துடன், இந்து சமுத்திரத்தின் வடக்கு, கிழக்கு கரையோரங்களையும் இது உள்ளடக்கியுள்ளது. மேலும் மாலைதீவின் தலைநகரான மாலேயிலிருந்து 40 கி.மீ. தென்பகுதியிலுள்ள மாரோ (Marao) தீவிலும் சீனாவின் ஆதிக்கம் அமைந்துள்ளது. இவ்வாறு பிராந்தியத்தில் சீனாவின் கடல் ஆதிக்கம் விரிவடைந்து செல்கின்ற வேளையில் கொழும்புத் துறைமுகமும் சீனாவின் உதவியுடன் விஸ்தரிப்பை மேற்கொண்டிருப்பது இந்தியாவின் பொருளாதார, பாதுகாப்பு விடயத்தில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என நம்பப்படுகிறது. குறிப்பாக சீனாவின் இராஜதந்திர நகர்வுகளில் ஒன்றாகவும் இதனை நோக்கலாம்.

எது எவ்வாறிருந்த போதிலும் வருடத்திற்கு 2.5 மில்லியன் கொள்கலன்கள் ஏற்றி இறக்கக் கூடியதாக கொழும்புத் துறைமுகத்தின் உட்கட்டுமான வசதிகள் விஸ்தரிக்கப்பட்டிருப்பது ஆசியாவின் அதிசயம் (Miracle of Asia)எனும் நோக்கினில் பயணிக்கும் இலங்கைக்கு பலமானதோர் அடிக்கல் என்பதில் சந்தேகமில்லை. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய அரசியல்

என்.எஸ்.

# 'பெரிய்ய்ய்ய' தமிழ் நாடா, சிறிய தமிழ் நாடா?



**தமிழ்நாடு முழுவதும் பரவலாக ஆதரவு கொண்ட தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் சரி, தேசியக்கட்சிகளும் சரி வட தமிழ்நாடு, தென் தமிழ்நாடு போன்ற கோரிக்கையையும் அதன் அடிப்படையிலான விவாதத்தையும் ஒருபோதும் விரும்பப்போவதில்லை**

புதிய தெலுங்கானா மாநிலம் உருவாவதை ஒட்டி இந்தியாவின் பிற பகுதிகளில் வீசும் அரசியல் அலை, அண்டை நாடான இலங்கையிலும் சரியான முறையில் எதிரொலிக்க வேண்டும். அவ்வாறானால் மட்டுமே, இலங்கையில் சிங்களப் பேரினவாதிகளும், பிரிவினை பேசும் தமிழ்த் தேசியவாதிகளும், உண்மையை உணர்ந்து, இனப் பிரச்சினைக்கு சரியான தீர்வை அடைய முடியும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று பட்ட வடக்கு-கிழக்கு மாகாணமும் அதோடு ஒட்டிய அதிகாரப் பரவலாக்கம் என்றும் பிரிவினை பேசாத தமிழ் அரசியல் மற்றும் சமூகத் தலைமைகள் கூட தொடர்ந்து பிரசாரம் செய்து வருகின்றன. இதற்கு எதிர்மாறாக, சிங்களப் பேரினவாதிகள், இணைந்துபட்ட வடக்கு-கிழக்கு மாகாணம் ஏதோ, நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் என்று கூறியே, இனப் போருக்கான சூழல் தோன்றுவதற்கு துணை செய்தனர்.

சிங்களப் பேரினவாதிகள் ஆகட்டும், அல்லது தமிழ்த் தேசியவாதிகள் ஆகட்டும், அவர்களது கருத்தும் கருதலும், தென் இந்தியாவில் தமிழ் நாட்டு அரசியல் குறித்த தங்களது புரிதலையும் எண்ணவோட்டத்தையும் ஒட்டியே அமைந்துள்ளன. அரசியல் பிரிவுகளுக்கு அப்பாற்பட்டு, சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்த வரையில், இனப் பிரச்சினையே பிரிவினையை அடிப்படையாக வைத்து தோற்றுவிக்கப்பட்டது என்று முதல் நாள் தொடக்கம் நம்புகிறார்கள். அதுமட்டுமல்ல, இலங்கையில் பிரிவினைக்கு அச்சாணி, தமிழ் நாட்டின் திராவிட இயக்கக் கட்சிகள் என்றும் என்றோ முடிவு செய்து விட்டார்கள்.

தங்களது கடந்த கால அறிவையும் அரசியலையும் மனதில் நிறுத்தியே அவர்கள் செய்து வந்த உள்நாட்டு அரசு மற்றும் அரசியல் சார்ந்த பிரசாரங்களை அவர்கள் இன்னமும் மாற்றிக் கொள்ளவில்லை. அவர்களது இந்த மூடிய எண்ணச் சூழலும் கூட தமிழ் நாட்டில் தற்போதும் இனப் பிரச்சினையில் தமிழ்ச் சமூக ஆதரவு அரசியல் முன்னிறுத்தப்படுவதற்கு முக்கியமான ஒரு காரணமாகி விட்டது.

இது போன்றே, இலங்கைத் தமிழ்த் தேசியவாதிகளும் அவர்களுடைய எண்ணச்சூழலில் சிக்கி இருக்கும் புலம்பெயர் தமிழர்களின் ஒரு பகுதியினரும், தமிழ் நாட்டையும் அங்கு அரங்கேறி வரும் உள்நாட்டு அரசியலையும் மனதில் வைத்துக் கொண்டே தங்களது அரசியல் முயற்சிகளை முன்னெடுத்து வருகிறார்கள். தமிழ் நாட்டை மனதில் நிறுத்தி, விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னெடுத்த போர் முனைப்புகள் தோல்வி அடைவதற்கு அதுவே கூட காரணமாக அமைந்து விட்டது என்பதை இன்றளவும் முழு நேர அரசியலுக்கு அப்பாற்பட்ட இலங்கைத் தமிழ்த் தேசியவாதிகள் உணர்ந்து, செயல்படுவதாகத் தெரியவில்லை.

அதிலும் குறிப்பாக, தமிழ்த் தேசிய பிரிவினைவாதிகளில் ஒரு பகுதியினரேனும்,என்றோ ஒரு நாள், ஒரு பரந்து விரிந்த தனி நாடு அமையும் என்றும், அதில் தமிழ்நாடு இணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் என்றும், அதற்கான ஆரம்பப் பணிகளில் தமிழ் நாடு அரசியல் தலைமைகளும் அங்குள்ள பிரிவினைவாதிகளும் பங்காற்றுவார்கள் என்றும் கருதுவது போலத் தோன்றுகிறது. அவர்களைப் பொறுத்தமட்டிலாவது, எதிர்காலப் பிரச்சினை தனி நாடு குறித்தது அல்ல. மாறாக, அதன் தலைமை தங்களிடம் அதாவது, இலங்கைத் தமிழ்த் தலைமையிடம் இருக்க வேண்டும் என்பதுதான்.

### சித்தாந்த உண்மை

ஆனால், தமிழ் நாட்டில் மற்றும் இந்தியாவில் களநிலை என்ன? தமிழ் நாட்டு திராவிட இயக்கம் பிரிவினை பேசுவதை விட்டு தசாப்தங்கள் பலவாகி விட்ட நிலையில், இலங்கைத் தமிழ்த் தேசியவாதிகளிடம் இருந்தும் அவர்களது புலம்பெயர் சகோதரர்களிடம் இருந்தும் புறப்படும் சமிக்ஞைகள், இந்திய மத்திய-மாநில அரசுகளை அவ்வப்போது கவலைக்குள் ஆழ்த்துகிறது. அதன் காரணமாகவே, அந்தந்த அரசுகளும் இனப் பிரச்சினை குறித்து அவ்வப்போது தங்களது நிலைப்பாட்டில் சிறிதும் பெரிதுமான திருத்தங்களைக் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தங்கள் தோன்றியுள்ளன.

இதில், ஆளும் கட்சி உட்பட்ட தமிழ்நாடு அரசியல் தலைமைகளின் கருத்து வேறு, மாநில அரசின் கருத்து வேறு என்ற சித்தாந்த உண்மையை இலங்கைத் தமிழ்த் தேசியவாதிகள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அதுபோன்றே, தங்களது நாட்டிலும், தாங்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மேலை நாடுகளிலும் கூட அரசியல் தலைவர்கள் அல்லது தலைமைகளின் தேர்தல் சார்ந்த அவசியங்கள் வேறு, அந்தந்த நாடுகளின் ''அடிப்படை நலன்கள்'' (core interests) வேறு என்ற உண்மையையும் அவர்கள் இன்னமும் உணர்ந்தார்கள் இல்லை. அவர்களது, இடைக்கால முயற்சிகள் இடைப்பட்ட காலத்தில் பயனளிப்பது போல் தோன்றினாலும், முடிவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போர் தோல்விக்கு காரணம், அவர்கள் இதுபோன்ற சில அடிப்படை உண்மைகளை உணர்ந்து செயல்படாமையே ஆகும்.

### மறக்கப்பட்ட கலாசாரம்

மத்திய அரசின் தெலுங்கானா ஆதரவு முடிவை அடுத்து, இந்தியாவின் பல பகுதிகளிலும் மறந்தடிக்கப்பட்டிருந்த புதிய மாநிலங்கள் குறித்த பல கோரிக்கைகள் புத்துயிர் பெற்றுள்ளன. இதில் நாட்டின் வடகிழக்குப் பகுதி முக்கிய இடத்தைப் பெறுகிறது. மகாத்மா காந்தியின் சுதந்திரப் போராட்டம் அந்தப் பகுதியைச் சென்றடையாததே அதற்கு முழுமுதல் காரணம். இதன் காரணமாகவும், நாட்டின் பிற பகுதிகளில் ஏழு வடகிழக்கு மாநிலங்களும் மொழி மற்றும் கலாசாரத்தில் ஒன்று என்றே கருதப்பட்டு வருகிறது.

ஆனால், இந்த ஏழு வடகிழக்கு மாநிலங்களிலும் மொழி மற்றும் கலாசாரங்கள் வெகுவாக மாறுபட்டே உள்ளன. ஆங்கிலேயர் காலத்தில் உலகிலேயே முதல் பெட்ரோலிய கிணறு இந்தப் பகுதியிலேயே நிறுவப்பட்டது. அதன் காரணமாகவே இந்தப் பகுதியில் அஸ்ஸாம் மாநிலம் பிரிட்டிஷ்-இந்திய அரசிற்கு முக்கியத்துவமானது. அங்கு, தங்களது தேவைகளுக்கு முக்கியமான ஆங்கில கல்வி, மருத்துவம் மற்றும் கிறிஸ்தவ மதம் ஆகியவற்றை மட்டுமே பரப்புவதற்கு அன்றைய ஆட்சியாளர்கள் முயற்சி மேற்கொண்டனர். அந்த மக்களின் மதம், இனம், மொழி, கலாசாரம் ஆகியவற்றைப் பற்றி ஆட்சியாளர்கள் கவலைப்படவும் இல்லை அக்கறை காட்டவும் இல்லை.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது ஒன்றாக இருந்த அஸ்ஸாம் மாநிலம் பின்னர் தெலுங்கானா போன்று பிரிந்து, அஸ்ஸாம், நாகாலாந்து, மேகாலயா மற்றும் மிஸோரம் என்று நான்கு மாநிலங்களாகப் பிரிந்தது. இன்னமும், மேகாலயா போன்ற குட்டி மாநிலத்தில், கிராமத்திற்கு கிராமம் புதிய மொழி, கலாசாரம் ஆகியவை மாறுதலாகவே உள்ளன. இது பீஹார் போன்ற பெரிய மாநிலங்களுக்குக் கூட சிறிய அளவில் பொருந்தும். உதாரணத்திற்கு, பீஹாரில் இந்தி மொழியின் ''மைதிலி'' என்ற கிளை மொழி அல்லது வழக்காடல் இன்றளவும் தனியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

### 'தென் தமிழ் நாடு' கோரிக்கை

அந்த விதத்தில், தமிழ் நாட்டையே இரண்டாகப் பிரித்து வடக்கு மற்றும் தெற்கு என்று இரண்டு தனி மாநிலங்களாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. இந்தக் கோரிக்கையை அப்போது முன்வைத்தவர், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் மற்றும் மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன் ஆகியோர். அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்து சில ஆண்டுகள் ஆகிவிட்டாலும், தற்போது தெலுங்கானா அறிவிப்புக்குப் பிறகு அந்தக் கோரிக்கையை மறுபடியும் முன்வைத்துள்ளனர்.

''தென் தமிழ் நாடு'' கோரிக்கையை முன்வைத்த தலைவர்களில், ராமதாஸ் வட தமிழகத்தில் பா.ம.க.விற்கு அரசியல் அடித்தளம் கொண்டவர். இதற்கு மாறாக, டாக்டர் சேதுராமனின் மூவேந்தர் முன்னேற்றக் கழகம் தென் தமிழ் நாட்டில் தேவர் அல்லது முக்குலத்தோர் இனத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. அவர்கள் இருவரும் சேர்ந்து ''தென் தமிழ் நாடு'' கோரிக்கையை முன்வைப்பதற்கு அரசியல் காரணம் எதுவாகினும், தலைநகர் சென்னையை நோக்கி மக்கள் புலம் பெயர்தல் காரணமாகவே, தென் தமிழ் நாடு மக்கள் தொகை உயர்வு, வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கி உள்ளது என்று ஒரு வாதத்தை முன்வைத்துள்ளனர்.

தேர்தல் காரணங்களுக்காகவும், கூட்டணி அரசியல் கட்டாயங்களுக்காகவும் அவர்கள் இருவருமே இந்தக் கோரிக்கையை அழுத்திப் பிடித்துக்கொண்டு அரசியல் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. காரணம், இதுபோன்ற கோரிக்கை அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெற வேண்டுமானால், ஆளும் அ.இ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.தி.மு.க அல்லது தற்போதைய எதிர்க்கட்சியான தி.மு.க. ஆகிய இரண்டு முக்கிய கட்சிகளின் ஒன்றின் ஆதரவு மட்டுமாவது இருக்க வேண்டும். ஆனால், தமிழ் நாடு முழுவதுமே பரவலாக ஆதரவு உள்ள இந்த இரு கட்சிகளும் சரி, தேசிய கட்சிகளும் சரி, இதுபோன்ற கோரிக்கையையும் அதன் அடிப்படையிலான விவாதத்தையும் விரும்ப மாட்டார்கள், முன்னெடுத்துச் செல்ல மாட்டார்கள். அதுவரை, ''தென் தமிழ் நாடு'' கோரிக்கை கண்டு கொள்ளப்பட மாட்டாது.

தற்போதைய 'தென் தமிழ் நாடு' கோரிக்கையின் பின்னால், 'தந்தை பெரியார்' தலைமையில் திராவிடர் கழகமும் பின்னர் பிரிந்து போன தி.மு.க.வும் நடத்திய 'திராவிட நாடு' போராட்டத்தையும் மனதில் கொள்ள வேண்டும். இதுவே பின்னர், கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக 'தனித் தமிழ் நாடு' கோரிக்கையாக மாறியது. ஆனால், 1962-ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.க தமிழ் நாடு சட்டசபையில் 51 இடங்களைக் கைப்பற்றி, எதிர் காலத்தில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பும் சந்தர்ப்பமும் உள்ளது என்பதை உணர்ந்து கொண்டதும், 'தனித் தமிழ் நாடு' கோரிக்கையை கைவிட்டது.

அதேசமயம், அடுத்த, 1967ஆம் ஆண்டு தேர்தலில் ஆட்சிக்கு வந்த தி.மு.க. தனி நாடு கோரிக்கைக்கு பதிலாக தனது சமூக-பொருளாதாரத் திட்டங்களை முன்னிறுத்தியே வெற்றி கண்டது. அன்று தொடங்கி இன்று வரை, தி.மு.க.வும் அதிலிருந்து பிரிந்து சென்ற அ.இ.அ.தி.மு.க.வும் சமுதாயச் சீர்திருத்தங்களையே தங்களது அடிப்படை அரசியல் கொள்கையாக வகுத்து, ஆட்சியில் உள்ள காலங்களில் செயல்படுத்தியும் வந்துள்ளன. அவர்களது 'திராவிடப் போட்டி' அரசியலில் முதல் படியும் கடைசிப் படியும் இதுவே.

மாறாக, வைகோ-வின் ம.தி.மு.க. சீமானின் 'நாம் தமிழர் கட்சி' போன்ற இயக்கங்கள் இலங்கைத் தமிழ் அரசியலை மையமாக வைத்து தொடங்கப்பட்டன. அவற்றிற்கு தமிழ் நாட்டு மக்களிடையே ஆதரவு இல்லை என்பதை இனப் போரின் உச்சக்கட்டத்தில் நடந்தேறிய 2009ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத் தேர்தலே எடுத்துக்காட்டு. அந்தத் தேர்தலில், இலங்கைக்கு அருகாமையில் உள்ள விருதுநகர் மக்களவைத் தொகுதியில் வைகோ படுதோல்வியைத் தழுவினார். அதுவும், அன்றளவும் முகம் தெரியாத ஒரு காங்கிரஸ் கட்சி வேட்பாளரிடம். ஆனால், இன்றளவும் இந்தியாவில் 'காங்கிரஸ் எதிர்ப்பு அரசியல்' செய்யும் இலங்கைத் தமிழ் புலம்பெயர்ந்தோருக்கு இந்த உண்மை இன்றளவும் உறைக்கவே இல்லை.

ஆனால், இதுபோன்ற தமிழ் நாட்டு கட்சிகளை நம்பி அரசியல் செய்யும் இலங்கைத் தமிழ்த் தேசியவாதிகள், பின்னர் 'தமிழ் நாடு எங்களை ஏமாற்றி விட்டது' என்று குறைபட்டுக் கொள்வது வேடிக்கையான விடயம். வருத்தப்பட வேண்டிய விடயமும் கூட. அதுபோன்றே, சிங்களப் பேரினவாதிகளும் தங்களது உள்நாட்டு அரசியலில், தமிழ் நாட்டை சுட்டிக்காட்டி, இலங்கைத் தமிழ்ச் சமூகம் மீதும், அரசியல் தலைமை மீதும் சேற்றை வாரி இறைப்பதும் நகைப்பிற்குரியதே. ஆனால், அதுவே இலங்கையின் தலைவிதியை நிர்ணயித்துவிடுமோ என்ற சூழ்நிலை எழும்போது, அது எதுவுமே நகைப்பிற்கு மட்டுமே உரிய விடயமாக முடிந்து விடுவது இல்லை. மாறாக, கவலைக்குரிய விடயமாக மாறிவிட்டது! ■

---

*(11ஆம் பக்கத்தொடர்ச்சி...)*


பகிஷ்கரிக்கப்போவதாக அமெரிக்கா விடுக்கிற அச்சுறுத்தல்களினால், ஈரானுக்கு எதிரான தடைகள் தீவிரமடைந்திருக்கின்றன. அந்நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேற்கத்தையப் பாவனையாளர்கள் கூட இதனால் பாதிப்புக்குள்ளாகிறார்கள். உதாரணமாக, உலகப் புகழ்பெற்ற பாரசீக கைத்தறி கம்பளங்களையும் தரை விரிப்புகளையும் அமெரிக்கவாசிகள் வாங்குவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஈரான் மீதான குரோத உணர்வில் அமெரிக்கா இறுக்கமாக இருக்கிறது போலவே தோன்றுகிறது. ஈரானுடனான அணுப் பேச்சுகளுக்கு புத்தூக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஜூலை 19ஆம் திகதி ஒபாமாவுக்கு அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் சபையின் 435 உறுப்பினர்களில் 131 பேர் கடிதம் எழுதியிருந்தபோதிலும், தடைகளை மேலும் கடுமையாக்குமாறு ஜூலை 31ஆம் திகதி அந்தச் சபை 400-20 வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. வாஷிங்டன்-தெஹ்ரான் உறவுகளில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படுவதற்கான சாத்தியத்தை கடுமையாகத்தாமதிக்கக்கூடியதாக அமையும் இந்தத் தீர்மானம் ஒபாமா மீது பாரிய நெருக்குதல்களைப் பிரயோகிக்கிறது.

ஈரான் விவகாரம் தொடர்பில் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாஹு வெளியிட்ட ஆத்திரமூட்டும் வகையிலான அறிக்கையும் நிலைவரங்களில் முன்னேற்றமேற்படுவதற்கு முட்டுக் கட்டையாக இருக்கிறது. தங்களுக்கு அழிவை ஏற்படுத்தப் போவதாக அச்சுறுத்துகிற ஒரு அரசாங்கத்துக்கு எதிராக தனது நாட்டைப் பாதுகாப்பதற்குத் தேவையான எதையும் செய்யத் தயாராயிருப்பதாக அவர் கூறியிருந்தார். தெஹ்ரானில் ஆட்சிமாற்றமொன்றைக் கொண்டுவருவதற்கு ஒரு புகைத்திரையாகவே அணுத்திட்ட விவகாரத்தை அமெரிக்காவும் இஸ்ரேலும் அளவுக்கு மீறிப் பெரிதுபடுத்தியதாக ரோஹானியும் அவரது மக்களும் நினைத்தால் அதைத் தவறென்று கூறமுடியாது. உண்மையில் நிலைவரங்களில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமானால், ஒபாமா அதை துணிச்சலுடனும் துரிதமாகவும் காண்பிக்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பாகிஸ்தான் மண்ணிலிருந்து வருகின்ற பயங்கரவாதப் பிரச்சினைகளைக் கையாள்வதில் இஸ்லாமாபாத் அக்கறையுடன் இருக்கிறது என்பதற்கான நம்பகமான சான்று எதுவும் கிடைக்காத பட்சத்தில் பேச்சுவார்த்தைகளை தொடரக்கூடாது என்பதே இந்தியாவில் பெரும்பான்மையான மக்களினதும் தலைவர்களினதும் நிலைப்பாடு

# மன்மோகன்சிங்கும் நவாஸ் ஷெரீபும் நியூயோர்க்கில் சந்தித்துப் பேசுவார்களா?

இந்தியாவைப் பொறுத்தவரை, 2013 இதுவரை அதன் எல்லையோரங்களில் பிரச்சினைகள் நிறைந்த வருடமாகவே இருந்திருக்கிறது. வருடத்தின் ஆரம்பத்தில் ஜனவரியிலேயே அந்தப் பிரச்சினைகள் தொடங்கிவிட்டன. காஷ்மீர் எல்லையில் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுப் பகுதிகளில் திடீர்த் தாக்குதலொன்றை நடத்திய பாகிஸ்தானின் உளவு சேவையான ஐ.எஸ்.ஐ.யும் அதனோடு இயங்கும் பயங்கரவாதக் குழுக்களும் ஜனவரி 8ஆம் திகதி இந்தியப்படைவீரர்கள் இருவரைப் பிடித்து காட்டுமிராண்டித்தனமாகச் சித்திரவதைக்குட்படுத்திக் கொலை செய்தனர். படைவீரர்களில் ஒருவரின் தலையையும் அவர்கள் துண்டித்தனர். இச்சம்பவம் இந்தியாவைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதை இந்திய அரசாங்கத்தினால் அலட்சியம் செய்யமுடியவில்லை.



பாகிஸ்தான் படையினரின் தாக்குதலில் பலியான ஐந்து இந்திய படை வீரர்களின் பூதவுடல்களுக்கு இராணுவத்தளபதி ஜெனரல் பிக்ரம் சிங் இறுதி அஞ்சலி செலுத்துகிறார். (ஆகஸ்ட் 7, 2013)






எம்.பி.வித்தியாதரன்

தாக்குதலுக்கு முன்னதாக பாகிஸ்தானிய தீவிரவாதக் குழுக்களில் ஒன்றான லஷ்கர்-ஈ-தைபாவின் தலைவர் ஹபீஸ் சயீத் ஜம்மு-காஷ்மீரில் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதிக்கு விஜயம் செய்ததாக புலனாய்வுத் தகவல்கள் மூலம் அறியக் கூடியதாக இருந்ததாக பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்தார். லஷ்கர்-ஈ- தைபாவையும் ஜாய்ஷ்-ஈ-முஹம்மத் இயக்கத்தையும் சேர்ந்த பயங்கரவாதிகள் இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகவும் இராணுவ புலனாய்வுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அந்தோனி அறிவித்தார்.

இதையடுத்து பாகிஸ்தானுடன் சமாதான முயற்சி எதிலும் ஈடுபடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது என்று அரசியல் கட்சிகளிட மிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் கடுமையான நெருக்குதல்கள் அர சாங்கம் மற்றும் காங்கிரஸ் கட்சி மீது பிரயோகிக்கப்பட்டன. பாகிஸ்தானு டன் உறவுகளைச் சுமுகமாக்குவதில் அக்கறை கொண்டவரான பிரதமர் மன்மோகன்சிங் சமாதான முயற்சிக ளைத் தாமதப்படுத்த நிர்ப்பந்திக்கப் பட்டார்.

பிறகு எல்லையோரம் பல்வேறு பகுதிகளில் சீனத் துருப்புகள் சம்பந் தப்பட்ட தொடர்ச்சியான பல சம்ப வங்கள் இடம்பெற்றன. ஆனால், இவை ஒன்றுமே வன்முறையில் முடி வடையவில்லை. சீனர்களின் நோக் கங்கள் குறித்து இந்திய மக்கள் கடு மையான ஐயுறவுகளைக் கொண்டிருந்தபோதிலும், இச்சம்ப வங்களின் விளைவாக மக்கள் மத்தி யில் கொந்தளிப்பு எதுவும் ஏற்பட வில்லை. சீனத் துருப்புகளின் அத்துமீறல்கள் தொடர்பில் உயர்மட் டத்தில் பேச்சுகள் நடத்தப்பட்டு, இரு தரப்பினரும் விவகாரங்களை விவே கமானமுறை யில் கையாண்டார்கள். இருபெரிய அயல் நாடுகளுக்கும் இடையேயான உறவுகளில் ஏற்பட்டு வந்திருக்கக்கூடிய மேம்பாட்டை பாதிக்கக்கூடிய சூழ்நிலைகள் தோன் றாதிருப்பதை உறுதிசெய்வதில் கவ னம் செலுத்தப்பட்டது.

என்றாலும், கட்டுப்பாட்டு எல் லைக்கோட்டில் இடம்பெற்ற அத்து மீறல்கள் தொடர்பில் விசனமடைந்த இந்திய அரசாங்கமும் பாதுகாப்பு நிறுவனங்களும் மலைப் பிராந்தியங் களில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான விசேட படைப்பிரி வுகளை அமைப்பதற்கும் எல்லை யோர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை களை எடுக்க ஆரம்பித்தனர்.

அதேவேளை, பாகிஸ்தானில் அர சியல் மாற்றம் ஏற்பட்டது. நவாஸ் ஷெரீப் மீண்டும் பாகிஸ்தான் பிரதம ரானதையடுத்து இருநாடுகளுக்கும் இடையேயான உறவுகள் முன்னரைக் காட்டிலும் விரைவாக மேம்படும் என்ற எதிர்பார்ப்பு இந்திய அரசாங் கத் தலைவர்கள் மத்தியில் ஏற்படத் தொடங்கியது. முன்னர் நவாஸ் ஷெரீப் பிரதமராக இருந்த காலகட் டத்திலேயே முன்னாள் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் லாகூருக்கு சரித்திர முக்கியத்துவ விஜயத்தை மேற்கொண்டார். அத னால், இத்தடவையும் ஷெரீப்பின் ஆட்சியின் கீழ் உறவுகள் மேம்படும் என்று இந்திய மக்களும் எதிர்பார்த் தார்கள்.


இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்துவதில் பற்றுறுதி கொண் டிருப்பதாக நவாஸ் ஷெரீப்பும் பிரக டனம் செய்தார். உறவுகளை மேம் படுத்துவதற்கான அவரின் முன் னைய முயற்சிகளை கார்கில் ஆக்கிர மிப்பின் மூலமாகச் சீர்குலைத்த பாகிஸ்தான் இராணுவம் இத்தடவை யும் அவரின் நோக்கங்கள் குறித்து விசனமடைந்திருப்பதாக செய்திகள் வெளியாகின. இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்துவதற்கு ஷெரீபை இராணுவம் அனுமதிக் குமா இல்லையா என்ற கேள்வி மீண் டும் எழுந்தது. அண்மையில் காஷ் மீரில் இடம்பெற்ற எல்லைச் சண்டை கள் இந்தச் சந்தேகங்களை இப்போது வலுப்படுத்தியிருக்கின்றன. மீண்டும் மன்மோகன்சிங்கும் அவரது அர சாங்கமும் வெட்கக்கேடான முறை யில் தற்காப்பு நிலைக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுவதைக் காணக்கூடி யதாக இருக்கிறது.

கடந்த தடவை கையாண்ட அதே தந்திரோபாயத்தையே இத்தடவை யும் பாகிஸ்தான் இராணுவம் பயன் படுத்துகிறது போலத் தெரிகிறது. புஞ்ச் பகுதியில் ஜனவரியில் இந்தி யப் படை வீரரின் தலை துண்டிக்கப் பட்ட சம்பவம் இடம்பெற்ற இடத்தி லிருந்து சில கிலோமீற்றர்கள் தொலைவில் இம்மாத ஆரம்பத்தில் பாகிஸ்தான் இராணுவமும் சில பயங்கரவாதிகளும் ஐந்து இந்தியப் படையினரைக் கொலை செய்தார் கள். இச்சம்பவத்தில் ஒரு படைவீரர் காயமடைந்தார். ஸ்ரீநகரில் இருந்து தென்மேற்கே 180 கிலோமீற்றர் தொலைவில் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டு ஓரமாக இந்தியப் பக்கத்தில் உள்ள சீட்டா இராணுவக் காவல் நிலையில் இருந்து நள்ளிரவு நேரம் 6 படைவீரர்கள் ரோந்துக் கடமைக்குச் சென்றார்கள். இவர்கள் மீது சுமார் 20 பேர் கொண்ட ஆயுதபாணிகள் குழு தாக்குதல் நடத்தியது. அவர்களில் பலர் பாகிஸ்தானிய இராணுவச் சீருடை அணிந்திருந்தனர்.

இந்தச் சம்பவம் ஏற்படுத்திய ஆத் திரத்தையும் விட கூடுதலான ஆத்தி ரத்தை அதை அரசாங்கம் கையாண்ட விதம் ஏற்படுத்தியது. சாதாரண உடையில் வந்த சிலருடன் சேர்ந்து பாகிஸ்தான் இராணுவத்தினரே இத் தாக்குதலை நடத்தியதாக இந்திய இராணுவம் தெளிவாகக் கூறிய அதேவேளை, அரசாங்கம் அதன் பாரதூரத்தன்மையை குறைத்து மதிப் பிடும் பாணியில் செயற்பட்டது. பாராளுமன்றக் கூட்டத்தொடர் நட ந்துகொண்டிருப்பதால் அரசாங்கம் அறிக்கையொன்றை வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டது. பாகிஸ் தான் இராணுவத்தின் சீருடையில் காணப்பட்ட சிலரினாலேயே தாக்கு தல் நடத்தப்பட்டதாக அதிர்ச்சி தரத் தக்க வகையிலும் வெட்கக்கேடான முறையிலும் பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி பாராளுமன்றத்தில் அறி வித்தார். எதிரணிக் கட்சிகள் அரசாங் கத்தின் மீது பாய்ந்தன. பாராளுமன் றக் கூட்டங்கள் சீர் குலைக்கப்பட்டன. இதையடுத்து மறுநாள் அரசாங்கம் இன்னொரு அறிக்கையை சபையில் வெளியிட வேண்டியேற்பட்டது. இந்த அறிக்கை இராணுவத்தின் நிலைப்பாட்டின் வழியில் அமைந் தது. பாகிஸ்தான் இராணுவமே தாக்குதலை நடத்தியது என்று குற் றஞ்சாட்டி இராணுவம் விடுத்திருந்த முன்னைய அறிக்கை வாபஸ் பெறப் படுவதைக் கூட அரசாங்கம் முதலில் உறுதிப்படுத்திக் கொண்டது என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை பார தூரமானதாக அரசாங்கம் கருத வேண்டும் என்றும் பேச்சுவார்த்தை களை உடனடியாக நிறுத்த வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஷ்மீரில் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டின் இந்தியப் பக்கமாக ரோந்துப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஜவான்கள்

என்றும் கோரிக்கைவிடுத்த எதிரணிக் கட்சிகள் குறிப்பாக, பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் அதற்கு இணங்காத பட்சத்தில் பாராளுமன்றத்தைச் செயற்பட அனுமதிக்கப்போவதில்லை என்று சூளுரைத்தது. ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் சில பங்காளிக் கட்சிகளும் கூட, பாதுகாப்பு அமைச்சர் அந்தோனியை அவரின் முதல் அறிக்கைக்காகக் கடுமையாகக் கண்டனம் செய்தன. தாக்குதல் சம்பவத்துக்கான பொறுப்பில் இருந்து பாகிஸ்தான் தப்பிச் செல்வதற்கு வசதியான முறையில் பாதுகாப்பு அமைச்சரின் அறிக்கை அமைந்திருந்ததாக அவை குற்றஞ்சாட்டின.

கொலைகள் குறித்து அந்தோனியினால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக பாராளுமன்ற செயற்பாடுகள் குழப்பியடிக்கப்பட்ட சில மணித்தியாலங்கள் கழித்து, பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்கள் முழு விவகாரமும் கையாளப்பட்ட முறை குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்தார்கள். மறுநாள் இராணுவத் தளபதியிடமிருந்து புதிய தகவல்களைப் பெற்று அந்தோனி தனது அறிக்கையை மாற்றிக்கொண்டார். 'பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் இருந்து கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டைத் தாண்டி வந்த ஒரு குழுவினர் தாக்குதலை நடத்தி எமது துணிச்சல் மிகு ஜவான்களைக் கொலை செய்திருக்கிறார்கள். இதில் பாகிஸ்தான் இராணுவத்தின் விசேட படைகளுக்கும் தொடர்பிருக்கிறது என்பது இப்போது தெளிவாகிறது. பாகிஸ்தான் இராணுவத்தின் ஆதரவு, உதவி, அனுசரணை மற்றும் நேரடி ஈடுபாடு இல்லாமல் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டின் பாகிஸ்தான் பக்கத்திலிருந்து எதுவும் நடைபெறுவதில்லை என்பதை நாம் எல்லோரும் அறிவோம்' என்று அவர் சொன்னார்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு எல்லையில் துப்பாக்கிப் பிரயோகங்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. புலனாய்வு அறிக்கைகளின் படி, கடந்த மூன்று வருடங்களில் 188 மோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. பாகிஸ்தான் பிரதமர் கடுமையான சில நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் அண்மைய எதிர்காலத்தில் இத்தகைய மோதல் சம்பவங்களில் தணிவு ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. நவாஸ் ஷெரீப் இராணுவத்தைத் தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதென்பது எளிதானதாக இருக்கப்போவதில்லை. பாகிஸ்தானின் வரலாற்றையும் நவாஸ் ஷெரீபின் சொந்த அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இதை விளங்கிக்கொள்வதில் எவருக்கும் சிரமமிருக்காது. நவாஸ் ஷெரீபை பதவி கவிழ்த்த முன்னாள் இராணுவத் தளபதி பெர்வெஸ் முஷாரப் பிறகு ஜனாதிபதியாகி, அவரை வெளிநாட்டுக்கு அஞ்ஞாதவாசத்துக்கு அனுப்பினார். எனவே, இந்தியாவுடன் அல்ல, இராணுவத்துடன் விவகாரங்களைக் கையாளும் போதே ஷெரீப் மிகுந்த கவனமாகச் செயற்பட வேண்டியிருக்கிறது.

காஷ்மீரில் கடந்த இரு மாதங்களில் 19 முக்கிய பயங்கரவாதிகள் ஒழித்துக்கட்டப்பட்ட சம்பவங்களின் விளைவாக பாகிஸ்தான் இராணுவத்துக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய விரக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் பிரதிபலிப்பாகவே அண்மைய தாக்குதல் அமைந்திருக்கக்கூடும் என்று இந்திய இராணுவம் கூறியிருக்கிறது. இரு வாரங்களுக்கு முன்னர் குப்வாராவில் ஐந்து பயங்கரவாதிகள் பலியாகக் காரணமான என் கவுண்டருடன் இந்த எல்லையோரத் தாக்குதலுக்கு நேரடித் தொடர்பு இருக்கக்கூடும் என்று புலனாய்வு வட்டாரங்களின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் நீலம் பள்ளத்தாக்கில் இருந்து ஜூலை 28ஆம் திகதி இந்திய இராணுவத்தினரால் 4 காஷ்மீர் ஆட்கள் கடத்தப்பட்டதாக இரு வாரங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் ஊடகங்கள் செய்திவெளியிட்டிருந்தன. கடத்தப்பட்டவர்களை 'மூலிகை சேகரிப்பவர்கள்' என்று வர்ணித்த அந்த பாகிஸ்தான் செய்திகள் எல்லையைக் கடந்து வந்த இந்திய விசேட படைகளே கடத்தலைச் செய்ததாகவும் குறிப்பிட்டன. ஆனால் இந்திய இராணுவம் இதை அடியோடு மறுத்துவிட்டது.

எல்லையோரம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து நவாஸ் ஷெரீப் கவலையை வெளியிட்டாரென்றபோதிலும், பாகிஸ்தான் இராணுவத்தின் தீவிர ஈடுபாடு குறித்து இந்தியா தெரிவித்த குற்றச்சாட்டுக்கு அவர் பதிலளிக்கவில்லை. இஸ்லாமாபாத்தில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுகளுக்குப் பிறகு நவாஸ் ஷெரீப், அடுத்த மாதம் நியூயோர்க்கில் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்திப்பதில் ஆர்வங்கொண்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் போர் நிறுத்தத்தை மீண்டும் உறுதியான முறையில் கடைப்பிடிப்பதற்கு பயனுறுதியுடைய நடவடிக்கைகளை இந்தியாவும் பாகிஸ்தானும் எடுக்க வேண்டும் என்று ஷெரீப் கூறினார்.

ஆனால், இந்தியாவில் பெரும்பான்மையான மக்களும் நிபுணர்களும் தலைவர்களும் பாகிஸ்தான் மண்ணில் இருந்து வருகின்ற பயங்கரவாதப் பிரச்சினைகளைக் கையாளுவதில் இஸ்லாமாபாத் அக்கறையுடன் இருக்கிறது என்பதற்கான நம்பகமான சான்று எதுவும் கிடைக்காத பட்சத்தில் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடரக்கூடாது என்ற நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறார்கள். பாகிஸ்தான் இராணுவமும் பயங்கரவாதிகளும் இந்தியாவிற்குள்ளும் ஆப்கானிஸ்தானில் உள்ள இந்திய நிலைகள் மீது தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொள்கின்ற வேளையில், பேச்சுவார்த்தைகளைத் தொடருவதில் எந்த அர்த்தமுமேயில்லை என்று பாரதீய ஜனதாவும் பல நிபுணர்களும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். செப்டெம்பர் இறுதிவாரத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக மன்மோகன்சிங்கும் நவாஸ் ஷெரீபும் நியூயோர்க் செல்லவிருக்கின்றார்கள். அந்தவேளை, இருதலைவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்வதற்கு உத்தேசிக்கப்படுகிறது.

கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுப் பகுதியில் ஐந்து ஜவான்கள் கொல்லப்பட்ட சம்பவத்தில் பாகிஸ்தான் இராணுவம் சம்பந்தப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் அந்தோனியும் இராணுவத்தளபதியும் தெளிவாகக் கூறியபிறகு, பாகிஸ்தான் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் மன்மோகன்சிங் அக்கறைகாட்டக்கூடாது என்று பாரதீய ஜனதா தலைவரும் முன்னாள் பிரதிப் பிரதமருமான எல்.கே.அத்வானி தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அமைச்சரும் இராணுவத்தளபதி ஜெனரல் பிக்ரம் சிங்கும் இந்தளவு உறுதியாகக் கூறிய பின்னர், ஷெரீபுடன் பேச்சு நடத்தும் ஆர்வத்தை மன்மோகன்சிங் கைவிடவேண்டும் என்று அத்வானி வலியுறுத்தியிருக்கிறார்.

2004 ஜனவரி 6 ஆம் திகதி அன்றைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு அளித்த உறுதி மொழியை பாகிஸ்தான் காப்பாற்றும்வரை எந்த மட்டத்திலும் குறிப்பாக பிரதமர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் இருக்கவே கூடாது என்று இன்னொரு சிரேஷ்ட பாரதிய ஜனதா தலைவரும் முன்னாள் வெளியுறவு அமைச்சருமான யஸ்வந்த் சின்ஹா கூறியிருக்கிறார். இந்தியாவும் பாகிஸ்தானும் 2004 ஜனவரியில் கைச்சாத்திட்ட உடன்படிக்கையில், இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் மண் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்கப்போவதில்லை என்று இஸ்லாமாபாத் உறுதியளித்திருந்தது. எதிர்காலத்தில் அத்தகைய தாக்குதல்கள் இடம்பெறும் பட்சத்தில் பதிலடி கொடுக்க இந்தியப் படைகளுக்கு அரசாங்கம் உத்தரவிடவேண்டும் என்றும் சின்ஹா வலியுறுத்தினார்.

கடுமையான நடவடிக்கையில் இறங்குவதற்கு இப்போது இந்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது போலத் தெரிகிறது. பாகிஸ்தானிலிருந்து அத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அவற்றைத் தடுத்து நிறுத்த அவசியமான எந்த நடவடிக்கையையும் இராணுவம் எடுக்கலாம் என்று அந்தோனி கூறியிருக்கிறார்.

அதேவேளை, இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானின் தூண்டுதலுடன் தொடர்ச்சியாக பயங்கரவாதத் தாக்கு

**பேச்சுவார்த்தைகள் அக்கறையுடன் முன்னெடுக்கப்பட வேண்டுமானால் பாகிஸ்தான் அதன் மனப்போக்கை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் பிரதமர் மன்மோகன் சிங்கும் இந்திய சுதந்திர தினச் செய்தியில் தெளிவுபடக் கூறியிருந்தனர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்கள் நடத்தப்பட்டு வருவதால், அடுத்த மாதம் நியூயோர்க்கில் மன்மோகன் சிங்கிற்கும் நவாஸ் ஷெரீப்புக்கும் இடையேயான உத்தேச பேச்சுகளை ரத்துச் செய்யுமாறு இந்தியாவின் முன்னாள் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், சிவில் சேவை அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது. புதுடில்லியில் செய்தியாளர் மகாநாடொன்றில் உரையாற்றிய அவர்கள் "எமக்கு எதிராக தினமும் பாகிஸ்தான் பயங்கரவாதத்தைப் பயன்படுத்திவரும் ஒரு நேரத்தில், பாகிஸ்தான் பிரதமருடன் மன்மோகன்சிங் பேச்சுவார்த்தை நடத்துவது சரியான ஒரு காரியமாக இருக்காது. ஏனென்றால், அவ்வாறு பேச்சுவார்த்தையை நடத்தினால், அது இரு நாடுகளும் வழமைபோன்று தங்கள் அலுவல்களைச் செய்து கொண்டிருக்கின்றன என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும்" என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

"அதனால், நாம் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தையொன்றுக்கு அவசரப்படக்கூடாது என்று கடுமையாக வலியுறுத்திக் கூறுகிறோம். இரு நாடுகளினதும் பிரதமர்களுக்கிடையேயான உத்தேச சந்திப்பு ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று நாம் கோருகிறோம்" என்று அந்த முன்னாள் இராணுவ மற்றும் சிவில் சேவை அதிகாரிகள் குழு விடுத்திருக்கும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ், முன்னாள் புலனாய்வு பணியகத் தலைவர் அஜித் டோவால், முன்னாள் தூதுவர் ஜி.பார்த்தசாரதி மற்றும் முன்னாள் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சதிஷ் சந்ரா உட்பட பல முன்னாள் சிரேஷ்ட அதிகாரிகள் செய்தியாளர் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

செப்டெம்பரில் இரு பிரதமர்களும் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த நியூயோர்க் சந்திப்பை அடிப்படையாகக் கொண்டே, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தைகள்

**இரு பிரதமர்களும் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த நியூயோர்க் சந்திப்பை அடிப்படையாகக் கொண்டே இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையேயான அதிகார மட்ட பேச்சுவார்த்தைகள் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கும் என்ற எதிர்பார்ப்புகள் அதிகரித்திருந்தன**

விரைவில் மீண்டும் ஆரம்பிக்கும் என்ற எதிர்பார்ப்புகள் அதிகரித்திருந்தன. ஆனால், ஆப்கானிஸ்தானின் ஜலலாபாத்தில் உள்ள இந்திய உதவித் தூதரகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுப் பகுதியில் 5 இந்தியப் படைவீரர்கள் கொல்லப்பட்ட அண்மைய சம்பவமும் நியூயோர்க் சந்திப்புக்கான வாய்ப்புகளைச் சீர்குலைத்துவிட்டன. இரு நாடுகளும் அவற்றுக்கிடையேயான ஊடாட்டங்களை மீண்டும் முன்னோக்கிய பாதையில் கொண்டு செல்வதற்கு உதவக்கூடிய இன்னொரு வாய்ப்பை இழக்கின்றன என்பதே இதன் அர்த்தமாக இருக்க முடியும்.

எல்லை மோதல்கள் தொடர்பில் வெறித்தனமான தேசியவாத உணர்வுகளைக் கிளறிவிடுவதில் இரு நாடுகளினதும் ஊடகங்கள் கணிசமான அளவுக்கு ஈடுபட்டிருக்கின்றபோதிலும், குழப்பநிலைக்கான முழுக் குற்றத்தையும் ஊடகங்கள் மீது சுமத்துவது பொருத்தமற்றதாகும். சொந்த மக்களின் மேம்பாட்டுக்காக, ஒட்டுமொத்தத்தில் பிராந்தியம் முழுமையினதும் மேம்பாட்டுக்காக செயற்படுவதற்கு பரஸ்பர இணக்கத்துடனான நிபந்தனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த இருநாடுகளிலும் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தவறிவிட்டன. இருநாடுகளையும் பொறுத்தவரை நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளையும் விட சரித்திர ரீதியான மரபுகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவருவதன் விளைவாக இரு தரப்பு உறவுகள், பெருவாரியான சம்பவங்களுக்கு பயணக்கைதியாகிப் போய்விட்டன.

எல்லைச் சம்பவம் குறித்து இந்திய அரசாங்கம் போட்ட குட்டிக் கரணம்-அதாவது, இருநாட்களில் இருதடவைகள் அறிக்கைகளை மாற்றிய பாதுகாப்பு அமைச்சரின் செயல் நிலைவரத்தைக் கையாளுவதில் கடைப்பிடிக்கப்படுகின்ற அணுகுமுறைகளின் குறைபாட்டை வெளிக்காட்டுகிறது. இந்தியாவின் குற்றச்சாட்டை பாகிஸ்தான் நிராகரித்திருக்கிறது. அமைதி காக்குமாறு அழைப்பு விடுத்திருக்கும் நவாஸ் ஷெரீப் அடுத்த 10 வருடங்களுக்கு போர் நிறுத்த உடன்படிக்கையொன்றை செய்துகொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கிறார். ஷெரீப்பின் அறிக்கை இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலொன்றை முன்னெடுப்பதில் அவர் மிகுந்த அக்கறையுடன் இருக்கிறார் என்பதை வெளிக்காட்டுகிறது.

ஆனால், ஷெரீப்பின் அறிக்கை வெளிவந்த உடனடியாகவே, பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எல்லைப் பதற்ற நிலைக்காக இந்தியாவைக் குற்றஞ்சாட்டியதுடன், காஷ்மீர் நெருக்கடி குறித்தும் சர்ச்சை கிளப்பியிருந்தது. இந்த நடவடிக்கை இப்போது நிலைவரத்தை முற்றுமுழுவதுமாக மாற்றிவிட்டது. ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் சஹீத் ஹமீத்தினால் முன்மொழியப்பட்ட தீர்மானம் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுப்பகுதியில் 'ஆத்திர மூட்டப்படாமலேயே ஆக்கிரமிப்பில்' ஈடுபட்டதாக இந்தியத் துருப்புகளைக் குற்றஞ்சாட்டியதுடன், காஷ்மீர் மக்களின் போராட்டத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவையும் தெரிவித்தது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு காஷ்மீர் மக்கள் தங்களின் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு நடத்திவருகின்ற நீதியானதும் நியாயபூர்வமானதுமான போராட்டத்துக்கு பாகிஸ்தான் அதன் இராஜதந்திர, அரசியல் மற்றும் தார்மீக ஆதரவைத் தொடர்ந்து வழங்கிவரும் என்றும் பாராளுமன்றத் தீர்மானத்தில் மீள வலியுறுத்தப்பட்டிருந்தது.

இவ்வருட ஆரம்பத்தில் நடந்ததைப் போன்றே, பாகிஸ்தான் பாராளுமன்றத் தீர்மானத்துக்கு பதிலளிக்குமுகமாக இந்தியப் பாராளுமன்றமும் தீர்மானமொன்றைக் கொண்டு வந்தது. தாக்குதல்களில் ஈடுபடுவதற்காக பாகிஸ்தான் இராணுவத்தை கண்டனம் செய்த அத்தீர்மானம், சர்வதேச எல்லை மற்றும் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பது என்ற 2003 ஆம் ஆண்டின் உறுதிமொழிக்கு கட்டுப்பட்டு நடக்குமாறு பாகிஸ்தான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது.

லோக் சபாவும் ராஜ்ய சபாவும் ஒரே மாதிரியான தீர்மானங்களை ஏக மனதாக நிறைவேற்றின. இருநாடுகளும் அவற்றின் மக்களின் நலன்களை மேம்படுத்தும் பணியில் வளங்களையும் சக்தியையும் அர்ப்பணிக்கக்கூடியதாக அமைதியானதும் சினேகபூர்வமானதும் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டதுமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் ஒரு நேரத்தில் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல்களில் ஈடுபடுவது கவலை தருகிறது என்று அத்தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'2013 ஆகஸ்ட் 13 இல் பாகிஸ்தான் பாராளுமன்றம் (தேசிய சட்டசபை) நிறைவேற்றிய தீர்மானத்தையும் பஞ்சாப் மாகாண சட்டசபை நிறைவேற்றிய தீர்மானத்தையும் இச்சபை நிராகரிப்பதுடன், கண்டிக்கவும் செய்கிறது. அத்தீர்மானங்கள் இந்திய இராணுவத்துக்கும் இந்திய மக்களுக்கும் எதிராக முற்றிலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கின்றன. ஆகஸ்ட் 6ஆம் திகதி கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டில் எமது பக்கத்தில் இந்திய இராணுவ ரோந்துப் படையினர் மீது ஆத்திர மூட்டப்படாமலேயே தாக்குதலை மேற்கொண்டது பாகிஸ்தான் இராணுவம் என்பதில் பாகிஸ்தான் தேசிய சட்டசபை உறுப்பினர்கள் உட்பட எவருக்கும் சந்தேகம் இருக்கக் கூடாது. பாகிஸ்தான் இராணுவத்தின் செயலை இச்சபை கடுமையாகக் கண்டனம் செய்வதுடன், பாகிஸ்தான் பலாத்காரமாகவும் சட்டவிரோதமாகவும் ஆக்கிரமித்திருக்கும் பிராந்தியம் உட்பட ஜம்மு-காஷ்மீர் மாநிலம் முழுவதும் இந்தியாவின் தவிர்க்க முடியாத பகுதி. தொடர்ந்தும் அவ்வாறே இருக்கும்' என்று ராஜ்ய சபாவில் தலைவர் ஹமீட் அன்சாரியினாலும் லோக்சபாவில் சபாநாயகர் மீரா குமாரினாலும் வாசிக்கப்பட்ட தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாகிஸ்தானுடன் உறவுகளை மேம்படுத்துவதில் அக்கறை கொண்டிருக்கும் மன்மோகன்சிங் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது லோக்சபாவில் பிரசன்னமாயிருந்தார்.

இந்த விவகாரம் இத்துடன் நின்றுவிடவில்லை. ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் பிரதமர் மன்மோகன் சிங்கும் விடுத்த சுதந்திர தினச் செய்திகளில் எல்லை மோதல்கள் குறித்து குறிப்பிட்டதுடன், பேச்சுவார்த்தைகள் அக்கறையுடன் முன்னெடுக்கப்பட வேண்டுமானால், பாகிஸ்தான் அதன் மனப்போக்கை மாற்றிக் கொள்ளவேண்டியது அவசியமாகும் என்பதையும் தெளிவுபடக் கூறியிருந்தனர். 'இந்தியாவின் பொறுமைக்கு எல்லைகள் உண்டு என்று எச்சரிக்கை செய்த ஜனாதிபதி பாதுகாப்பை உறுதிப்படுத்த அவசியமான சகல நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டார். அதேவேளை, பாகிஸ்தானுக்குக் கடுமையான செய்தியொன்றை விடுத்த மன்மோகன்சிங், கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதியில் ஜவான்கள் கொல்லப்பட்ட அண்மைய சம்பவம் போன்ற கொடுஞ்செயல்களைத் தடுக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். உறவுகள் மேம்படவேண்டுமானால், பாகிஸ்தான் மண்ணில் இருந்து மேற்கொள்ளப்படுகிற இந்திய விரோத நடவடிக்கைகள் முடிவுக்கு வரவேண்டும் என்று வலியுறுத்தினார்.

**எல்லை மோதல்கள் தொடர்பில் வெறித்தனமான தேசியவாத உணர்வுகளை கிளறி விடுவதில் இரு நாடுகளினதும் ஊடகங்கள் கணிசமான அளவிற்கு ஈடுபட்டிருக்கின்ற போதிலும் குழப்ப நிலைக்கான முழுக்குற்றத்தையும் ஊடகங்கள் மீது சுமத்துவது பொருத்தமற்றது**

இத்தகைய ஒரு உச்சநிலைக்கு நிலைவரங்கள் சென்றிருப்பதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் தனிப்பட்ட முறையில் பிரதமர் மன்மோகன் சிங் விரும்பினாலும் கூட நவாஸ் ஷெரீப்பைச் சந்தித்து பேச்சு நடத்த அவர் துணிவு கொள்வது சாத்தியமில்லை என்றே தெரிகிறது. ஏனென்றால், அடுத்த வருடம் அரசாங்கம் பொதுத் தேர்தலை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. பயங்கரவாதத்தை ஆதரிக்கிற பாகிஸ்தான் தொடர்பில் அரசாங்கம் மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கிறது என்று மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய எந்தவொரு எண்ணமும் பிரதமரின் காங்கிரஸ்கட்சிக்கு பெரும் அனர்த்த விளைவுகளையே ஏற்படுத்தும்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் திருவிழாவுக்கு ஏற்பாடுகள்





மாவட்ட அளவிலான போராட்டத்திற்குத் தயாராகும் தி.மு.க.

சாதனைப் பிரசாரத்தை முன்னெடுத் திருக்கும் அ.தி.மு.க.

'ஆடிக் கூழ்' ஊற்றும் நிகழ்ச்சி சென்னையில் உள்ள மாரியம்மன் கோயில்களில் எல்லாம் பிரபலம். ஆடி மாதம் தொடங்கினால் போதும் ஆங் காங்கே உள்ள மாரியம்மன் ஆலயங்களில் 'ஞாயிறுக் கொண்டாட்டம்' தொடங்கிவிடும். பந்தல் போட்டு, மேளம் அடித்து, கூழ் ஊற்றி மக்கள் கொண்டாடி 'அம்மன் அருள்' பெற வேண்டுதல் நடத்துவார்கள். அந்த 'ஆடிக் கூழ்' ஊற்று விழா போல் இப்போது 'தேர்தல் திருவிழா' தொடங்கி விட்டது. அதற்கு முதலில் மணி கட்டியிருப்பது திராவிட முன்னேற்றக் கழகம். தன் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை ஆகஸ்ட் 16ஆம் திகதி நடத்தி எட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார். அதில் 'தேர்தல் கொண்டாட்டத்திற்கு' தேவையான தீர்மான மும் இருக்கிறது. அதுதான் 'எட்டாவது தீர்மானம்'. அதில், '16 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் பற்றி மாவட்ட செய லாளர்கள் கருத்து தெரிவித்தார்கள். எந்தெந்த கட்சிக ளோடு கூட்டணி வைப்பது என்றும் கருத்துத் தெரிவித்தார்கள்' என்று சுட்டிக்காட்டியுள்ள அந்தத் தீர் மானம், 'கூட்டணி குறித்து முடிவு எடுக்க தி.மு.க. தலை வர் கருணாநிதிக்கும், பொதுச்செயலாளர் பேராசிரியர் அன்பழகனுக்கும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அதி காரம் அளிக்கிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




முத்தையா காசிநாதன்

இக்கூட்டம் தொடங்கியதுமே பல மாவட்டச் செய லாளர்களும், 'தே.மு.தி.க.வுடன் கூட்டணி வைக்க வேண் டும்' என்ற வாதத்தை எடுத்து வைத்தார்கள். வேறு சில ரோ, 'விஜயகாந்த் மட்டும் போதாது. காங்கிரஸையும் சேர்த்துக் கொண்டு ஒரு மெகா கூட்டணி அமைக்க வேண் டும்' என்று கோரிக்கை வைத்தார்கள். ஆனால், முன்னாள் அமைச்சர் பொன்முடி போன்றவர்கள் மட்டும், 'காங்கிர ஸுடன் மத்திய அரசில் நாம் இருந்த போது நம்மை காங்கி ரஸ் சிக்கலில்தான் மாட்டி விட்டது. அதனால் அந்தக் கட்சி யுடன் கூட்டணி வைத்து பிரயோசனமில்லை' என்ற ரீதியில் பேச, தென் சென்னை மாவட்டச் செயலாளர் அன் பழகன், 'நாம் தனியே நின்றால்கூட பாராளுமன்றத் தேர்த லில் ஜெயிப்போம். கூட்டணி தேவையில்லை' என்று 'ஆச் சரியமான' கருத்தைத் தெரிவித்தாராம்.

இதன் பிறகுதான் 'தலைவருக்கும், பொதுச் செயலாள ருக்கும் அதிகாரம்' என்று மாவட்டச் செயலாளர்கள் அறி வித்துள்ளார்கள். இதன் பின்னணியில் வேறு ஏதும் வித்தி யாசமான கூட்டணியை அமைக்கப் போவதில்லை என்று 'இப்போதைக்கு' மெஸேஜ் கொடுத்துள்ளது தி.மு.க. தலைமை. ஏனென்றால் பா.ஜ.க. வுடன் கூட்டணி வைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அது பற்றிய கேள்விகளைத் தனியாக ஒரு பேப்பரில் அச்சடித்து அதை பொதுக்குழு உறுப்பினர்கள் மத்தியில் 'சர்குலேட்' பண்ணி கருத்துக் கேட்ட கட்சி தி.மு.க. அதனால் இந்த முறை அப்படியேதும் செய்யாமல், கட்சித் தலைமையிடம் மட்டும் பொறுப்பைக் கொடுத்து விலகிக் கொண்டிருக்கிறது மாவட்டச் செயலாளர்கள் கூட்டம். வழக்கமான 'கூட்டணி'தான் அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு இருக்கப் போகிறது என்றால் தி.மு.க. எதிரே இருக்கும் கட்சிகள் இரண்டே இரண்டுதான். ஒன்று புதிதாக விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தைச் சேர்ப்பது. இன்னொன்று காத்திருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு 'கண் அசைவு' காட்டுவது. அதை நோக்கித்தான் தி.மு.க.வின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுத்துள்ள முடிவுகள் செல்கின்றன.

'ஹைதராபாத்'தில் தன் முதல் தேர்தல் பிரசாரத்தைத் தொடக்கிய

இலங்கையில் வட மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறவிருக்கும் சமயத்தில் தி.மு.க.வின் மாவட்ட செயலாளர் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் பற்றிய தீர்மானம் மிஸ்ஸிங்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடி கூட்டணிக்கு வருவார்கள் என்று கருதும் பல தலைவர்களைப் பாராட்டிப் பேசினார். ஆந்திராவில் உள்ள தெலுங்கு தேசக் கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடுவை கவரும் விதத்தில் அவரது கட்சியை உருவாக்கிய 'மறைந்த என்.டி.ராமராவை' பாராட்டினார். பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தன் கூட்டணியில் சேர்க்கும் வியூகத்துடன் தமிழகத்தில் நடைபெறும் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசை புகழ்ந்து விட்டு, 'இங்குள்ள காங்கிரஸ் தலைமையிலான ஆந்திர அரசு தமிழகத்திடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்' என்று அட்வைஸ் பண்ணினார். மோடியின் இந்தப் பேச்சின் பின்னணி காரணமாக தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் 'காங்கிரஸ் மற்றும் தே.மு.தி.க. கூட்டணி வேண்டும்' என்ற பேச்சு எழுந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் தி.மு.க. தலைவர் கருணாநிதியைப் பொறுத்த மட்டில், 'கூட்டணி பேசுவது இருக்கட்டும். முதலில் நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருங்கள். அதுதான் முக்கியம்' என்று 'ஷாக்' கொடுத்துள்ளார். அதேபோல் அக்கட்சியின் பொருளாளர் மு.க. ஸ்டாலினும், 'கட்சி நிதி வசூல்' பற்றி சில கருத்துகளை முன்னிறுத்தி பேசியிருக்கிறார்.

ஆனால், மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் 'கூட்டணி ஆசை' மொட்டு மலராமல் இல்லை என்றே தெரிகிறது. அங்கே நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் அதை வெளிப்படுத்துகின்றன. எட்டாவது அரசியல் தீர்மானம் தவிர, மீதியுள்ள 7 தீர்மானங்களிலும் மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கும் தீர்மானம் இரண்டு. ஒன்று சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்மானம். இரண்டாவது 'தமிழக மீனவர்கள் சிங்களக் கடற்படையால் தாக்கப்படுகிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்ற தீர்மானம்! அதிலும் குறிப்பாக சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றுவது தொடர்பான தீர்மான வாசகங்கள் 'அர்த்தங்கள்' நிறைந்த வரிகளாக இருக்கின்றன. அதில், மத்திய அரசே திட்டத்தை நிறுத்தி விட்டது என்று கடுமையாகச் சாடவில்லை. அதற்கு பதில், மத்திய அரசு நிதி ஒதுக்கி 'துரிதமாக' நடைபெற்றது அந்தத் திட்டம் என்று பாராட்டி விட்டு, 'சிலரின் தூண்டுதல் முயற்சியால்' அந்தத் திட்டம் 'நிறுத்தி வைக்கப்பட வேண்டிய தாகி விட்டது' என்று பூங்கொத்தால் மென்மையாக மத்திய அரசை அடித்திருக்கிறது தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம். அதை விட முக்கியமாக கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக கையில் எடுக்காத 'மதவாத கோஷத்தை' இந்த விடயத்தில் மீண்டும் எடுத்திருக்கும் தி.மு.க., 'மதவாதச் சக்திகளை முனை மழுங்கச் செய்ய'சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கூறியிருக்கிறது. அர்த்தமுள்ள இந்த வரிகள் காங்கிரஸை அரவணைக்கத்தானே என்ற எண்ணம் தி.மு.க.வினர் மத்தியில் எழுந்தால் ஆச்சரியப்பட முடியாது.

இது ஒரு புறமிருக்க, இதுவரை 'இலங்கைத் தமிழர் போராட்டம்' 'சேதுசமுத்திரத் திட்டம் கோரி



போராட்டம்' 'தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்துப் போராட்டம்' என்று கொடி பிடித்தது தி.மு.க. ஆனால் இந்தப் போராட்டங்கள் 'வாக்கு வங்கி'யைச் சேர்க்க உதவாது என்ற எண்ணம் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்து 28 மாதங்கள் கழித்து தி.மு.க.விற்கு பிறந்திருக்கிறது. அதனால்தான் இப்போது சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட 'உள்ளூர்ப் பிரச்சினைகளை' முன்வைத்து ஆங்காங்கே உள்ள தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் போராட்டத்தில் குதிக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துள்ளது. அது மட்டுமன்றி, முதல் தீர்மானமே அ.தி.மு.க. அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மின் வெட்டுப்பிரச்சினை தமிழகத்தில் இப்போது ஒரு வாக்கு வங்கிப் பிரச்சினையல்ல என்ற நிலை உருவாகி விட்டது. காங்கிஸிலிருந்து தி.மு.க. விலகி விட்டதால் இலங்கை தமிழர் பிரச்சினையும் சுருதி குறைந்து விட்டது. இந்த நேரத்தில் புதிய தலைவலியாக ஜெயலலிதா அரசுக்கு வந்திருக்கிறது சட்டம் ஒழுங்கு பிரச்சினை**

செயல்படுத்தத் தவறிய 15,000 கோடி ரூபா மதிப்புள்ள 11திட்டங்களை பட்டியலிட்டுக் காட்டியுள்ளது. அதில் முக்கியமானது கைவிடப் படுமோ என்று அஞ்சப்படும் 'மதுரா வயல்- துறைமுகம்' உயர்மட்ட பறக்கும் சாலைத்திட்டம் ஆகும்! அதைத் தவிர 'விழுப்புரம் மாவட்டத்தில் பல மாதங்களாக அமுலில் இருக்கும் 144 தடையுத்தரவை வாபஸ் பெறக் கோருவது, 'ஜனநாயக நடைமுறைகளுக்கு வழி விடுங்கள்' போன்ற கோரிக்கைகளையும் தீர்மான வடிவில் அ.தி.மு.க. அரசுக்கு எதிராக கொண்டு வந்திருக்கிறது தி.மு.க. ஆனால், இலங்கையில் வட மாகாணத் தேர்தல் நடைபெறும் சமயத்தில் 'இலங்கைத் தமிழர் பிரச்சினைகள்' பற்றிய தீர்மானம் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் மிஸ்ஸிங். ஆகவே ஆகஸ்ட் 16ஆம் திகதி நடைபெற்ற தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம், 'புதிய கூட்டணியின்' வியூகமாகவும், அ.தி.மு.க. அரசுக்கு எதிராக வாக்காளர்களைத் திரட்டும் 'மாவட்ட அள விலான போராட்டமாகவும்' அறிவித்து முடிந்திருக்கிறது. 'தேர்தல் திருவிழாவை' தி.மு.க. முதலில் தொடக்கி விட்டதால், இனி மற்றக் கட்சிகளின் காட்சிகளுக்கு பஞ்சமிருக்காது.

### 'சவாலை' சமாளிக்க அ.தி.மு.க.வின் 'சாதனைப் போர்'?

இந்தக் காட்சிகள் 'பிரதான' கட்சியாக இருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தெரிகிறது. அக்கட்சியின் சார்பில் முதல்வராக இருக்கும் ஜெயலலிதா இந்த வியூகங்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் களமிறங்குவார் என்றே எதிர்பார்க்கலாம். கொடநாட்டில் சில வாரங்கள் தங்கியிருந்து விட்டு சென்னை திரும்பிய முதல்வர் ஜெயலலிதா முதலில் சட்டம்- ஒழுங்கு பற்றிய ஆய்வினை உயர் அதிகாரிகளுடன் நடத்தினார். அதில் மாநில டி.ஜி.பி. ராமானுஜம், சென்னை மாநகர பொலிஸ் கமிஷனர் ஜார்ஜ், தமிழக உள்துறைச் செயலாளர் நிரஞ்சன் மார்டி, தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர். அதைத் தொடர்ந்து நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கடந்த இரண்டரை ஆண்டு கால அரசின் திட்டங்களைப் பட்டியலிட்டார். அவருடைய சுதந்திர தின உரையில் அரசின் சாதனைகளே முக்கியத்துவம் பெற்றது. ஆனால், மத்திய அரசுக்கு எதிரான தாக்குதலை சுதந்திர தின விழா பேச்சிலும் கைவிடவில்லை.

தமிழகத் தலைமைச் செயலகத்தில் சுதந்திர தினக் கொடியை ஏற்றி வைத்துப் பேசிய முதல்வர் ஜெயலலிதா, மத்திய அரசின் 5 தவறான கொள்கைகளைப்பட்டியலிட்டார். அதில் முக்கியமானது 'தவறான பொருளாதாரக் கொள்கை'! இந்தத் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் தான் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று மத்திய அரசை சாடினார். கடுமையான விலை வாசி உயர்வு வாக்காளர்களை தன் அரசுக்கு எதிராக திருப்பி விடுமோ என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கை போல் இந்த 'மத்திய அரசின் மீதான தாக்குதல்' தெரிகிறது என்றே அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். இது மட்டுமின்றி 'கச்சதீவின் உரிமையை நிலைநாட்டுவோம்' என்று உறுதிபடப் பேசியுள்ள முதலமைச்சர், 'அனைவருக்கும் பொது விநியோகத் திட்டம் தமிழகத்தில் தொடரும்' என்று வாக்குறுதி அளித்துள்ளார். மத்திய அரசு கொண்டு வரும் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 67 சதவீத கிராம மக்களும், 37 சதவீத நகர்ப்புற மக்களும் பயன்பெறுவார்கள். இவர்கள் தவிர மீதியுள்ளவர்களுக்கு 'ரேஷன் அரிசி' கிடைக்காதோ என்ற அச்சம் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே இந்த 'வாக்குறுதியை'க் கொடுத்துள்ளார் ஜெயலலிதா.

அரசின் சாதனைகளை விளக்கி ஏற்கனவே அ.தி.மு.க.வின் தொலைக் காட்சி பல 'ப்ரோக்ராம்ஸ்' மூலம் பிரசாரம் செய்து வருகிறது. இந்நிலையில் சுதந்திர தின விழா உரையிலும் சாதனைகளைப் பேசியுள்ளார். சட்டம்- ஒழுங்கு பிரச்சினைகள் பற்றி ஆய்வு நடத்தியிருக்கிறார். இதற்கு பின்னணி இல்லாமல் இல்லை. 2011 மே மாதம் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் 'கடும் மின்வெட்டு' தமிழகத்தில் இருந்தது. பல்வேறு தரப்பட்ட மக்களும் டென்ஷன் ஆனார்கள். இது பற்றி 'வெள்ளை அறிக்கை' வெளியிட்டு, 'மின்வெட்டுப் பிரச்சினையை நான் தீர்ப்பேன். கவலைப் படாதீர்கள்' என்று முதல்வர் ஜெயலலிதாவே முன்வந்து அறிக்கை வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த அளவிற்கு அ.தி.மு.க. அரசின் மீது 'அதிருப்தி' எடுத்த எடுப்பில் தொடங்கியது. அதே போல் 'இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான போராட்டமும்' சூடுபிடித்தது. காங்கிரஸுடன் தி.மு.க. இருந்தது அதற்கு வசதியாக அமைந்தது. ஆனால் இப்போது 'மின்வெட்டு' பிரச்சினை தமிழகத்தில் 'வாக்கு வங்கிப் பிரச்சினை' அல்ல என்ற நிலை உருவாகி விட்டது. அதே போல் காங்கிரஸிலிருந்து தி.மு.க. விலகி விட்டதால், 'இலங்கைத் தமிழர் பிரச்சினை யும்' சுருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்து விட்டது. இந்த இரு பிரச்சினைகளும் இல்லாத நேரத்தில், புதிய தலைவலியாக அ.தி.மு.க. அரசுக்கு வந்திருப்பதுதான் 'சட்டம் ஒழுங்குப் பிரச்சினை'!

தென் மாவட்டங்களில் முதலில் 'இமானுவேல் சேகரன்' ஜெயந்தியில் பரமக்குடி துப்பாக்கிச் சூடு. அடுத்து தேவர் ஜெயந்தியில் 10இற்கும் மேற்பட்டோர் பல்வேறு வகையில் கொல்லப்பட்ட சம்பவம் முதலில் பதற்றத்தை ஏற்படுத்தியது. கூடங்குளப் போராட்டத்தால் ஏற்பட்ட விளைவுகள் தென்கோடி மாவட்டங்களில் கவலை ரேகை படர விட்டது. 'காதல் திருமணத்தால்' பாட்டாளி மக்கள் கட்சியினருக்கும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினருக்கும் வட மாவட்டங்களில் ஏற்பட்ட மோதல்கள், டாக்டர் ராமதாஸ் கைதுக்குப் பிறகு ஆங்காங்கே கல்வீச்சு போன்ற சம்பவங்கள் வட மாவட்டங்களில் நிம்மதியைக் கெடுத்தது. பா.ஜ.க.வின் முன்னணித் தலைவர்கள் ஆங்காங்கே கொலை செய்யப்பட்டமை அகில இந்தியத் தலைவர்களையும் தமிழகத்திற்கு வர வைத்தது. இப்படி அடுத்தடுத்து சட்டம்- ஒழுங்குப் பிரச்சினைகள் அம்பலத்திற்கு வந்தன. பொதுவாக அ.தி.மு.க. அரசு ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சமயத்திலும், 'சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டும் ஆட்சி' என்ற இமேஜ் பிரையாரிட்டியாக இருக்கும். ஆனால், இந்த முறை இப்படி தொடர்கதை போல் வந்த சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் அ.தி.மு.க. ஆட்சிக்கு சாதாரண தலைவலி போய் பெரும் திருகுவலியைக் கொடுத்தது. இதற்கு போட்டியாக உருவானது அத்தியாவசியப் பொருட்களின் 'விலைவாசி உயர்வு! அடித்தட்டு மக்களும் இதன் தாக்கத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைச் சமாளிக்க 'அம்மா உணவகம்' 'ரேஷன் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் சப்ளை' என்றெல்லாம் செய்தாலும், இந்த இரு விடயங்களும் அ.தி.மு.க.விற்கு 'அதிருப்தி வாக்காளர்களை' கொடுத்து விடப் போகிறதோ என்ற அச்சம் அ.தி.மு.க. தலைமைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் சுதந்திர தின விழாவில் 'சாதனைகளைப் பேசி', அதிகாரிகளுடன் 'சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை' பற்றி ஆய்வு செய்திருக்கிறார் முதல்வர் ஜெயலலிதா. தி.மு.க.வின் 'உள்ளூர்ப் பிரச்சினைகளுக்கு எதிரான போராட்ட யுக்தியை' இது முறியடிக்கும் என்பது அவரது எண்ணம்! இக்கட்டான தேர்தல் வருடத்தில் வருகின்ற செப்டம்பர் 11இல் வரும் 'தியாகி இமானுவேல் சேகரன் ஜெயந்தி', அடுத்து அக்டோபர் 30இல் வரும் 'பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் ஜெயந்தி' ஆகிய இரு நிகழ்ச்சிகளையும் 'பிரச்சினை ஏதுமின்றி' நடத்திட வேண்டும் என்பதும் பொலிஸாரின் அடுத்த கவலையாக இருக்கிறது.

தி.மு.க.வின் 'மாவட்ட அளவிலான போராட்டம்', அ.தி.மு.க.வின் 'சாதனைப் பிரசாரம்' என்ற இரு முனைப் போட்டிக்கு தமிழகத் தேர்தல்களம் தயாராகிக் கொண்டிருக்கிறது. அதன் எதிரொலி சமீபத்தில் நடந்து முடிந்த சுதந்திரதின நிகழ்ச்சிக் கொண்டாட்டத்திலும், தி.மு.க.வின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும் தெரிகிறது. இனி அடுத்த அரசியல் கட்சிகள் இந்த 'ஏர்' உழுத பாதையில் உழுது செல்லத் தொடங்கும்! ■

---

*(56ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

தீர்த்துக்கொள்ள நினைக்கிறது. ஆனால், ரஷ்யா விடயத்தில் இந்த நெருக்குதல் தந்திரோபாயம் பயனளிக்கவில்லை' என்று சமூக மற்றும் அரசியல் கற்கைகளுக்கான நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி விலென் இவானோவ் கூறினார். உச்சி மகாநாடு நடைபெறப்போவதில்லை என்பதால் ரஷ்ய-அமெரிக்க உறவுகளில் நெருக்கடியொன்று மூண்டு விடப் போவதில்லை என்பதே இவரின் அபிப்பிராயம். 'நீண்ட உறைநிலை இருக்கப் போவதில்லை ரஷ்யா அமெரிக்காவுடன் ஆக்கபூர்வமான ஊடாட்டங்களைத் தொடர் ந்து செய்யும். ஏனென்றால் எமது நலன்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன' என்று கலாநிதி இவானோவ் தெரிவித்திருக்கிறார்.

சினோடன் விவகாரம் தங்களுக்கிடையிலான உறவுகளில் ஒரு முற்றுமுழுதான முறிவைக் கொண்டுவருவதை அனுமதிக்க மாஸ்கோவோ அல்லது வாஷிங்டனோ விரும்பவில்லை. ஆப்கானிஸ்தானில் அமைதியான முறையிலான மாற்றத்தை உறுதி செய்வதில் ரஷ்யாவின் ஒத்துழைப்பு அமெரிக்காவுக்கும் தேவை. சிரியா ஜிஹாதிகளின் ஒரு சொர்க்க புரியாக மாறுவதைத் தடுக்கவும் ஈரானின் அணுத்திட்டம் தொடர்பான முட்டுக்கட்டை நிலையைத் தீர்த்து வைப்பதற்கும் ரஷ்யாவின் ஒத்துழைப்பு அமெரிக்காவுக்கு அவசியம்.

உச்சிமகாநாடு ரத்துச் செய்யப்பட்டதற்கு மத்தியிலும் கூட, ஆகஸ்ட் 9 ஆம் திகதி வாஷிங்டனில் அமெரிக்க, ரஷ்ய வெளியுறவு அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு அமைச்சர்களுக்கும் இடையிலான பேச்சுவார் த்தைகள் திட்டமிட்டபடி நடந்தேறின. 6 வருடங்களில் இத்தகைய சந்திப்புகள் நடைபெற்றது இதுவே முதற்தடவையாகும். இச்சந்திப்புகளை வருடாந்தம் நடத்துவதற்கும் இரு நாடுகளும் தீர்மானித்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ■

*(29ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும். இங்கு, தென்னிலங்கை சக்திகளுடனும் புலம்பெயர் தமிழ்க் குழுக்களுடனும் இணைந்து பணி செய்யவும், மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வுப் பணிகளைச் செய்யவும், மக்களை அணிதிரட்டி பொதுப் போராட்டங்களில் ஈடுபடுத்தவுமென வெவ்வேறு குழுக்கள் உருவாக்கப்பட்டு, கட்சிகளுக்குள் தீர்மானம் எடுக்கும் அதிகாரங்கள் பரந்தளவில் பகிர்ந்தளிக் கப்படவேண்டிய தேவை ஏற்படுகின்றது. அதிகாரப்பகிர்வினைக் கோரக் கூட அதிகாரம் பகிரப்படவேண்டியிருக்கின்றது, இல்லையா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்



# சினோடன் விவகாரமும் அமெரிக்க – ரஷ்ய உறவுகளும்



விளாடிமிர் ரட்யூஹின்

செப்டெம்பர் முற்பகுதியில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் நடத்தத் திட்டமிட்டிருந்த உச்சிமகாநாட்டை ரத்துச் செய்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எடுத்த முடிவு ஏற்கனவே கசப்படைந்திருக்கும் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் முறுகல் நிலைக்குள்ளாக்கும். ஆனால், உறவுகளை முற்றுமுழுதாகத் தடம் புரட்டிவிடப்போவதில்லை என்று ரஷ்ய அதிகாரிகளும் அவதானிகளும் கூறியிருக்கிறார்கள்.

உச்சிமகாநாடு ரத்துச் செய்யப்பட்டதற்கு மாஸ்கோ கடுமையான அளவுக்கு எதிர்மறையான பிரதிபலிப்பைக் காட்டப் போகின்றது. ஏனென்றால், ஒபாமாவின் விஜயம் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்புகளை வளர்த்திருந்த மாஸ்கோ அந்த உச்சி சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் பெருமளவு நேரத்தையும் முயற்சியையும் செலவிட்டுள்ளது என்று கிரெம்ளினுடன் தொடர்புடைய வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளுக்கான கவுன்சிலின் தலைவரான ஃபியோடோர் லுக்யானோவ் கூறினார். புட்டினைச் சந்திப்பதற்கு மறுத்த ஒபாமாவின் செயல் அமெரிக்க- ரஷ்ய உறவுகளில் உறைநிலையை ஏற்படுத்துமென்று கூட பெயரைக் குறிப்பிடவேண்டாமென்று கேட்டுக் கொண்ட கிரெம்ளின் அதிகாரியொருவர் எதிர்வு கூறினார்.

கெடுபிடி யுத்தத்தின் (Coldwar) முடிவுக்குப் பிறகு ரஷ்யாவினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவினதும் தலைவர்களுக் கிடையிலான உச்சி மகாநாடொன்று ரத்துச் செய்யப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும் என்பது கவனிக் கத்தக்கது.

செப்டெம்பர் 4-5 திகதிகளில் சென்.பீட்டர்ஸ் பேர்க்கில் நடைபெற விருக்கும் ஜி-20 உச்சி மகாநாட் டுக்கு முன்னதாக ஒபாமா புட்டினைச் சந்திக்கவிருந்தார். ரஷ்ய ஜனாதிபதி யுடனான சந்திப்பு ரத்துச் செய்யப் பட்டிருக்கின்ற போதிலும், ஜி-20 மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஒபாமா ரஷ்யாவுக்கு விஜயம் செய் வார் என்று வெள்ளைமாளிகை கூறி யிருக்கிறது.

அமெரிக்க- ரஷ்ய உச்சி மகாநாடு ரத்துச் செய்யப்பட்டது குறித்து பெரும் ஏமாற்றம் அடைந்திருப்ப தாக மாஸ்கோ தெரிவித்திருக்கிறது. ஆனால், அமெரிக்க அரசாங்கத்தின் ஒட்டுக்கேட்பு மற்றும் இணையத் தளக் கண்காணிப்பு சதித்திட்டத்தை அம்பலப்படுத்திய எட்வேர்ட் சினோ டனுக்கு கிரெம்ளின் தஞ்சம் அளித்த பிறகு ஒபாமாவின் முடிவு மாஸ்கோ வில் அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை.

'சினோடன் விவகாரத்தின் பின்பு லத்தில் நோக்கும் போது வெள்ளை மாளிகையின் தீர்மானம் முற்றுமுழு தாகத் தவிர்க்க முடியாததாகும். இந்த விவகாரத்தை அமெரிக்கா முழுமை யாக அரசியல்மயப்படுத்திவிட்டது. ரஷ்யா சினோடனை அமெரிக்கா திருப்பியனுப்ப வேண்டுமென்ற தனது கோரிக்கையை வெள்ளைமா ளிகை ஒரு கோட்பாட்டு விடயமாக மாற்றிவிட்டது. சினோடனுக்கு ரஷ்யா தஞ்சம் அளித்ததற்குப் பிற கும் கூட, புட்டினைச் சந்திப்பதற்கான தனது மாஸ்கோ விஜயத்தை ஒபாமா முன்னெடுக்கத் தீர்மானித்திருந்தால், அமெரிக்காவில் கடுமையான கண்ட னங்களுக்குள்ளாகியிருப்பார் என்று லுக்யானோவ் தெரிவித்தார்.

ஹொங்கொங்கிலிருந்து கியூபா நோக்கிப் பயணம் செய்யும் நோக்கு டன் மாஸ்கோ வந்ததாகச் சந்தேகிக் கப்படும் சினோடன் மாஸ்கோ விமான நிலையத்தில் சிக்குப்பட்டு நின்ற போது அவரை அமெரிக்கா வுக்கு திருப்பியனுப்புமாறு ஒபாமா நிருவாகம் ரஷ்யாவைக் கேட்டுக் கொண்டது. அவ்வாறு திருப்பியனுப் பாவிட்டால் பாரதூரமான விளைவு கள் ஏற்படுமென்று மாஸ்கோவை வாஷிங்டன் எச்சரிக்கை செய்தது.

அரசாங்கத்தின் உயர் இரகசிய கண்காணிப்புத் திட்டங்களைப் பற்றி,

> ரஷ்யாவை பழைய சோவியத் யூனியனின் வெளிறிய ஒரு நிழலா கவே அமெரிக்கா நோக் குகிறது. ரஷ்யாவோ தன்னை ஒரு உலக வல்லாதிக்க நாடாகப் பார்க்கிறது. ரஷ்யாவை சமத்துவமான ஒரு பங்கா ளியாகக் கருதி கையாளு வதற்கு அமெரிக்கா மறுப் புக்காட்டும் போக்கையே பிரச்சினையின் மூல வேராக நோக்குகிறது கிரெம்ளின்

தகவல்களைப் பற்றி அம்பலப்படுத் துவதற்காக வேவு பார்த்ததாக அமெ ரிக்காவில் குற்றஞ்சாட்டப்பட்டிருக் கும் தேசிய பாதுகாப்பு (National Security Agency) நிறுவனத்தின் முன்னாள் பணியாளரான சினோ டனை நாடு கடத்துவதற்கு மறுத்த கிரெம்ளின் அவருக்கு ஒருவருட காலத்துக்கு தஞ்சம் வழங்கியது.

அமெரிக்கர்கள் தங்களைத் தாங் களே ஒரு மூலைக்குள் தள்ளிவிட் டார்கள் என்று ரஷ்ய இராஜதந்திரி யொருவர் 'கொமெர்சான்ற்' என்ற வர்த்தக தினசரிக்குக் கூறினார்.

அதேவேளை, ரஷ்ய - அமெரிக்க உறவுகளில் ஏற்படத் தொடங்கிய புதிய சரிவை மேலும் ஊக்குவித்த ஒரு புள்ளியாகவே சினோடனை மாஸ்கோ கருதுகிறது. ரஷ்யாவுட னான அமெரிக்காவின் உறவுகளில் உத்வேகத்தை ஏற்படுத்தும் முயற்சி கள் 2009 ஆம் ஆண்டு ஒபாமா வெள்ளை மாளிகைக்குள் பிரவேசி த்தபோது ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், அந்த முயற்சிகள் முன் னோக்கி நகரமுடியாமற் போய்விட் டது. ஏனென்றால், இரு நாடுகளுமே அவற்றின் அணுவாயுதங்களில் ஒரு அடையாள பூர்வமான குறைப்பைத் தவிர, வேறு எதிலும் இணங்கிக் கொள்ள முடியவில்லை.

சிரிய நெருக்கடி மற்றும் ஏவு கணைப் பாதுகாப்பு போன்ற விவகா ரங்களில் விட்டுக்கொடுக்காத நிலைப்பாட்டை மாஸ்கோ கடைப் பிடிப்பதாக வாஷிங்டன் குற்றஞ்சாட் டுகின்ற அதேவேளை, ரஷ்யாவை சமத்துவமான ஒரு பங்காளியாகக் கருதி விவகாரங்களைக் கையாளுவ தற்கு அமெரிக்கா மறுப்புக் காட்டும் போக்கையே பிரச்சினையின் மூல வேராக நோக்குகிறது கிரெம்ளின்.

'சமத்துவமான அடிப்படையில் ரஷ்யாவுடன் உறவுகளைக் கட்டியெ ழுப்புவதற்கு அமெரிக்கா இன்னமும் தயாரில்லை என்பதையே நிலைவ ரங்கள் வெளிக்காட்டுகின்றன என்று மாஸ்கோ உச்சிமகாநாடு ரத்துச் செய் யப்பட்டமை குறித்து கருத்துத் தெரி வித்த புட்டின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் யூரி உஷா கோவ் கூறினார்.

ரஷ்யாவை பழைய சோவியத் யூனியனின் வெளிறிய ஒரு நிழலா கவே அமெரிக்கா நோக்குகிறது. அதேவேளை, ரஷ்யாவோ தன்னை ஒரு உலக வல்லாதிக்க நாடாகப் பார்க்கிறது. சினோடன் விவகாரம் தொடர்பான சர்ச்சையும் ஒபாமாவின் மாஸ்கோ விஜயம் ரத்தும் இருநாடுக ளினதும் எண்ணங்களில் இருக்கக் கூடிய பாரதூரமான பொருத்தப் பாட்டைப் பிரதிபலிக்கின்றன.

'வெளியுறவுக் கொள்கையில் அமெரிக்காவுக்குப் பிரச்சினைகள் வரும்போது, அது ஏனைய நாடுகள் மீது நெருக்குதலைப் பிரயோகிப்ப தன் மூலம் அவற்றைத்

(54ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுலகம்

# 'வேகமாக முன்னேற்றம் காண வேண்டிய நிலையில் இலங்கை சினிமாவின் தரம்'

இலங்கைச் சினிமாவின் தரம் வேகமாக முன்னேற்றம் காண வேண்டிய நிலையிலேயே இருக்கிறது. நவீன சினிமாவுக்கான புதிய களங்களையும் காட்சிப்படுத்தல் ரீதியில் புதுமையான உத்தி வழிமுறைகளை யும் கொண்ட வீறார்ந்த படைப்புகள் உருவாக வேண்டிய தேவை இருக்கிறது. ஆரோக்கியமான சினிமாக்கலாசாரம் ஒன்றை இலங்கையில் தோற்றுவிக்க முதலில் உலகத் தரம் வாய்ந்த சினிமாக்கலை எமது பார்வையாளர்களுக்கு இலகுவாகக் கிட்டச்செய்ய வேண்டும் என்று இலக்கியம், சினிமா, தொடர்பாடல் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவரான பேராசிரியர் விமல் திசாநாயக்க கூறுகிறார்.

ஹவாய் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கும் திசாநாயக்க, ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் கௌரவ பேராசிரியராவார். சினிமா, கலாசார ஆய்வுகள் தொடர்பாக அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் முப்பதுக்கும் அதிகமான நூல்களை அவர் வெளியிட்டிருக்கிறார். ஆசிய சினிமா தொடர்பில் ஒரு சர்வதேச சான்று வலிமையுடைய ஒரு நிபுணருமாவார்.

இவர் அண்மையில் டெயிலி நியூ 'ஆர்ட்ஸ் கோப்' பகுதியில் பிரத்தியேக பேட்டியொன்றை அளித்திருந்



பெரியளவிலான ஆசிய சினிமாப் பரப்பில் இலங்கை சினிமாவுக்கு உரியதான இடம் குறித்து நுணுக்கமாக ஆராய்வது அவசியமாகும் என்கிறார்

பேராசிரியர் விமல் திஸாநாயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். மேற்கூறப்பட்ட துறைகள் சம்பந்தமாக அப்பேட்டியில் விளக்கங்களையும் சமகால போக்குகளைப் பற்றிய தனது பார்வைகளையும் முன் வைத்திருக்கிறார். அவற்றை 'சமகாலம்' வாசகர்களுக்காக தருகிறோம்.

**கேள்வி :-** படைப்பாளுமை குறித்த எழுத்தைப் பொறுத்தவரையில் தாய்மொழி பேசுபவர்கள் தமதல்லாத வேறு மொழிகளில் பெரும்பாலும் பிரகாசிப்பதில்லை என்பதைத் தமது கணிப்பாக வலியுறுத்தும் பேராசிரியர் சிறிகுணசிங்கவின் கருத்துத் தொடர்பில் உங்களது அபிப்பிராயம் என்ன? இருமொழிப்புலமையுடன் கூடிய படைப்பாற்றலாளரும் சமகாலத்தவருமான உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயம் என்ன?

**பதில் :-** ஆம், நான் அக்கருத்துடன் உடன்படுகிறேன். படைப்பாளர்கள் குறிப்பாகத் தமது தாய்மொழி ஆக்கங்களில் அசாத்தியமான எல்லைகளைத் தொட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் பெருமளவில் எமது ஆழமான மிக நெருக்கமான உணர்வுபூர்வமான அனுபவங்கள், குறிப்பாக சிறு பராயத்து இளம்பராயத்து நினைவுகள் போன்றன யாவும் தாய்மொழியுடனேயே பின்னிப் பிணைந்தவையாக இருப்பதனாலேயாகும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் கவிதைகளைச் சிங்களத்திலேயே எழுதுகிறேன். ஆனால் துறை சார்ந்த மற்றும் விமர்சனப் படைப்புகளைச் சிங்களம், ஆங்கிலம், ஆகிய இருமொழிகளிலும் எழுதுகிறேன். சிங்களத்தில் எழுதிய கவிதைகளில் மிகவும் திருப்திகரமானவையாகச் செழுமையானவையாக நான் கருதும் ''மியாகியா உவசியா'' மற்றும் ''டியிகி கிலுனு அயாற்ற'' போன்றன எனது சிறுபராயத்து வன்னியின் நினைவுத் தூறல்களாகும்.

எவ்வாறாயினும் மேலெழுந்தவாரியாக ஒரு தளத்தில் பார்ப்பதை விடுத்து, சற்று ஆழமாக நோக்கினால் இப் பிரச்சினை சிக்கலான பரிமாணத்தைக் கொண்டிருப்பது எமக்குப் புரிய வரும். ஏனெனில் மிக உன்னதமான எழுத்தாளர்கள், நோபல் பரிசுக்குரியவர்கள் தமது படைப்புகளை இரண்டாவது அல்லது மூன்றாவது மொழிகளிலும் எழுதியிருக்கிறார்கள்.

யோசப் கொன்றாட் பொதுவாக ஆங்கில இலக்கியத்தில் தனியிடம் வகிக்கிறார். சிறந்த நாவல் இலக்கியப் படைப்பாளியாகக் கருதப்படுவதுடன், அவருக்குரிய பாணியிலான எழுத்து நடைக்குப் பேர்போனவர் அவர். ஆனால் இத்தனைக்கும் அவரது முதலாவது மொழி போலிஷ் ஆகும். இரண்டாவது பிரான்சிய மொழி. மூன்றாவதே ஆங்கிலமாகும். எனினும் ஆங்கிலத்தில் எழுதுவதையே தெரிவு செய்திருந்தார்.

சாமுல் பெக்கற் ஆங்கிலம், பிரான்சியமொழி ஆகிய இரண்டிலுமே எழுதினார். விளாடிமிர் நப்கோவ் ரஷ்ய மொழியிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். யோசப் புரோட்ஸ்கி ரஷ்ய மொழியிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். ரவீந்திரநாத் தாகூர் வங்காளியிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். பெக்கற், புரோட்ஸ்கி, தாகூர் ஆகியோர் நோபல்விருது பெற்றவர்கள். தாகூரைப் பொறுத்தவரையில் எனது வங்காளிய நண்பர்கள் தாகூரின் வங்காளிய எழுத்து அவரின் ஆங்கில எழுத்தை விட மிகவும் உன்னதமானதும் வலிமைமிக்கதும் எனக் கூறுகின்றனர்.

இலங்கையில் அதிகளவில் பிரபல்யமடையாதவரான யோசப் புரோட்ஸ்கியை உதாரணமாக எடுத்துக் கொண்டால் அவர் ரஷ்ய மொழியில் எழுதிய கவிதை உருவகப் பண்புகளுடன் செறிவான படிமங்களையும் கொண்டவை. மேற்குக்கு வந்ததன் பின்னர் கவிதைகளையும் கட்டுரைகளையும் அவர் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினார். எனது கணிப்பின்படி கட்டுரையாக்கத்தில் அவரின் எழுத்தின் வலிமை அபாரமானது. உதாரணத்திற்கு அவருடைய படைப்பான 'வாட்டர் மார்க்' (Water Mark) வெனிஸ் பற்றிய சிந்தனையைத் தூண்டும் அற்புதமானதொரு படைப்பு எனலாம். நுண்நோக்குடன் கூடிய அவதானிப்புகளைக் கொண்ட விதத்தில் குறிப்பாக நீர், சிற்பம், பெண்கள், ஜனநாயகம், அழகு, கலை மற்றும் மரணம் போன்றவற்றை உள்ளடக்கியதாகத் தத்துவார்த்தப் பின்னணியில் அமைந்த காத்திரமானதொரு படைப்பு இதுவாகும்.

இலங்கையில் இருமொழியாற்றல் மற்றும் படைப்பாற்றல் தொடர்பாகச் சிந்திக்கையில் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் கரிபியன் பிரித்தானிய காலனிகளுக்கு, காலனித்துவ ஆட்சியின் பிரிக்கமுடியாத வலுவானதொரு கூறாக ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அது பூர்வீக மக்களை அடிபணிந்து மௌனிக்கச் செய்து ஆதிக்கத்திற்குள் உள்ளீர்க்கும் ஒடுக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. ஆங்கிலமும், ஆங்கிலத்தை ஊடகமாகக் கொண்டு உருவாகின பலநூலாக்கங்கள், பிரதிகள் ஆகியன பெருமளவில் காலனித்துவத்தின் மேலாதிக்கத்தை நிலைப்படுத்துவனவாக அதன் விரிவாக்கத்திற்கு துணைபோவனவாக இருந்தன. அதேவேளை, மேற்குலகப் பெறுமானங்கள், சிந்தனைகள், எண்

**ஆங்கிலத்தை படைப்புக்கான மொழியாக தெரிவு செய்யும் எழுத்தாளர் ஒருவர் எதிர்கொள்ளும் பிரச்சினை மௌனமாக்கப்பட்ட, நசுக்கப்பட்ட உண்மையான குரல்களை அவர்களின் அசலான வெளிப்பாடுகளின் அடிப்படையில் அவை வெளிவர விடாது என்பதாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்கள், சமூக உண்மைகள் குறித்த புரிதல்கள் மற்றும் எங்களையும் அவர்களையும் பிரிக்கும் பிரிவெல்லைகள் போன்றன ஆங்கிலத்தின் வளர்ச்சியில் தாக்கங்களை ஏற்படுத்தின. அதனால் இலங்கையிலுள்ள எழுத்தாளர்களும் மற்றும் காலனித்துவத்திற்கு பின்னான சமூகங்களைச் சேர்ந்தோரும் மக்களது உண்மையான ஆழமான உணர்வுகளையும் அவர்களது நேரடியான அனுபவங்களையும் வெளிப்படுத்துவதில் சிக்கலான பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். பூர்வீக மக்களது அசலான நேரடியான உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு பாதகமாக அவர்களது வாக்குரிமைகள் உட்பட உரிமைகளைப் பறிக்கும், காவுகொள்ளும் கருவியாகப் பயன்படுத்தப்படும், அதே ஆங்கிலம் அம்மக்களது மன எழுச்சிகளுக்கும் அவர்களது ஆழமான மன உணர்வுகளுக்கும் அவசங்களுக்கும் எவ்வாறு ஊடகமாக வடிகாலாக மாறுவது சாத்தியம்?

இன்னொரு விதத்தில் இதனைக் கூறுவதானால் ஆங்கிலத்தைப் படைப்புக்கான மொழியாகத் தெரிவு செய்யும் எழுத்தாளரொருவர் எதிர்கொள்ளும் பிரச்சினை என்னவெனில் மௌனிக்கப்பட்ட நசுக்கப்பட்ட உண்மையான குரல்களை அவர்களின் அசலான வெளிப்பாடுகளின் அடிப்படையில் அவை வெளிவர விடாது. அடக்குமுறைக்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்ட அதே மொழியை அல்லது அதே ஊடகத்தை ஆதாரமாகக் கொண்டு எந்த வழியில் மீட்டெடுக்க முடியும் என்பதாகும்.

**கேள்வி :-** ஆரம்பத்தில் இருந்தே கவிதை முனைப்புக் கொண்டவராகக் கவிதைகள் படைப்பாக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்திருந்தீர்கள். பின்னர் எவ்வாறு ஆசிய சினிமாவை பகுப்பாய்வு செய்யும் நாட்டம் உங்களுக்கு ஏற்பட்டது?

**பதில் :-** ஆரம்ப காலத்திலிருந்தே கவிதை எழுதுவதில் ஈடுபட்டு வருகிறேன். பின்னர் எனது துறை சார்ந்த ஈடுபாடாக ஆசிய சினிமாவை ஆராய முற்பட்டேன். எனினும் தொடர்ந்தும் சிங்களத்தில் கவிதைகளை எழுதி வருகிறேன். எனது புதிய கவிதைகளை உள்ளடக்கிய கவிதைத் தொகுதி இந்த வருடம் வெளியாகவுள்ளது. சினிமா மீதான ஆர்வம் எனக்கு ஏற்கெனவே இருந்து வந்த ஒன்றுதான். திடீரென சினிமாவுக்குள் பிரவேசிக்கவில்லை.

பெனிஸில்வேனிய பல்கலைக்கழகத்தில் சினிமா பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து ஹவாய் கிழக்கு - மேற்கு நிலையத்தின் திரைப்பட ஆய்வு தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டத்தின் தலைவராக நியமிக்கப்பட்டேன். அக்காலப்பகுதியில் ஆசியத் திரைப் படங்களைப் பெருமளவில் பார்க்கவும், முக்கிய திரைப்பட ஆளுமைகளைச் சந்திக்கவும் அரிய வாய்ப்புக் கிட்டியது. ஆசிய சினிமா குறித்து, எனது ஆய்வுகளைத் திரட்டி முக்கிய தலைப்புகளில் பல புத்தகங்களை வெளிக்கொணர்ந்தேன். Melo drama and Ashes cinema (Cambridge University Press), New Chinese cinema (Oxford University press), Ashes of Time (Hong Kong University Press), Colonialism and Nationalism in Asian cinema (Indian University Press), Indian Popular Cinema (Trentham), Rethinking Third Cinema (Rout ledge) கடைசியாக வெளியிட்ட புத்தகம் Rout ledge Handbook of Indian Cinema.

சிங்களத்தில் கவிதை எழுதும் அதேவேளை, சினிமா தொடர்பில் குறிப்பாக ஆசிய சினிமா ஆய்வு தொடர்கிறது. East-West திரைப்பட ஆய்வு சஞ்சிகையின் ஸ்தாபக ஆசிரியரான நான் Hong Kong University Pressக்காக Hong Kong ci-nema பற்றிய தொடர் புத்தகங்களைத் தொகுத்துள்ளேன். ஏற்கெனவே அந்த வரிசையில் 15 புத்தகங்கள் வெளியாகிவிட்டன.

**கேள்வி :-** வெளிநாடு சென்று குடியேறியிருக்கிறீர்கள். உங்களது தாய்நாட்டை விட்டு வெளியேறியதற்கு மூலகாரணம் என்ன?

**பதில் :-** எனது நண்பர்களுள் பலரும் முன்னாள் எனது மாணவர்களும் மீண்டும் மீண்டும் இலங்கையை விட்டு ஏன் வெளியேறினீர்கள் என்று கேட்டு வந்தார்கள். நான் எழுதிய தொரு சிங்களக் கவிதையில் இரு வரிகளில் இதற்கான உள்ளார்ந்த பதில் அடங்கியிருக்கலாமென நான் கருதுகிறேன்.

*"நான் இலங்கையை விட்டு வெளியேறவில்லை*
*நான் இலங்கையுடன் வந்தேன்."*

சில தசாப்தங்களுக்கு முன்னதாக மேற்குக்கு வருவதற்கு முடிவெடுத்ததற்கு முற்றிலுமான காரணம், எனது கல்வி சார்ந்த ஈடுபாடுகளுக்கும் எனது படிப்புகள் மற்றும் ஆய்வுத் துறைகளை மேம்படுத்துவதற்காகவுமேயாகும். மூன்று பிரதான விடயங்கள் ஒன்றையொன்று சார்ந்த விடயப் பரப்புகளுக்குள் எனது தேவையும் ஈடுபாடும் இருந்து வந்திருக்கிறது எனலாம். அவை, இலக்கியம், தொடர்பாடல் மற்றும் சினிமாவாகும். நவீன கலாசாரக் கோட்பாடுகள் சிந்தனைகளின் வெளிச்சத்தில் அவை குறித்துப் படிப்புகளிலும் ஆழமான ஆய்வுகளிலும் ஈடுபடுவதே எனது அடிப்படை நோக்கமாக இருந்திருக்கிறது. அதனால் பல்கலைக்கழகப் பாடநெறிகளைப் படித்தேன். மேலும் துறைசார்ந்த ஈடுபாடு கொண்ட குழுவினருடன் தொடர்புகளை வளர்த்தேன். அத்துடன் நின்றுவிடாது நவீன, கலாசாரக் கோட்பாடுகள், சிந்தனைகளில் உலகில் முன்னணி வகிக்கும் யாக்குயிஸ் தெரிதா, மிச்சல் போக்கல்ற், றேமன்ட் வில்லியம்ஸ், ஜேக்கிலிஸ் மில்லர், எட்வேர்ட் செயித், காயத்ரி ஸ்பிவாக் மற்றும் ஹெமிபாவா ஆகிய ஆளுமைகளுடன் நீண்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்டேன்.

அதேவேளை, இலங்கையில் ஆறு புத்தகங்களையும் வெளியிட்டேன். சிங்களத்தில் நான்கு, ஆங்கிலத்தில் இரண்டு. இவையாவும் நவீன கலாசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரக் கோட்பாடுகள் சார்ந்தனவாகும். உள்நாட்டு மட்டங்களில் அவற்றை அறிமுகப்படுத்தும் முயற்சியாகவே இதனை முன்னெடுத்தேன். நான் துறைசார்ந்து நவீன தேடல்களில் ஈடு பட்டுப் பெற்றதை அறிவார்ந்த தளத் தில் உள்நாட்டு பொருத்தப்பாடுக ளுக்கு ஏற்ப இனங்கண்டு இலங்கை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வ தில் தொடர்ச்சியாக இடையறாத முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறேன். இதனைப் பரவலாக்கும் அல்லது ஒரு விரிந்ததொரு தளத்துக்குக் கொண்டு செல்வதற்கானதொரு முயற்சியா கவே பல வருடங்களாகச் சிங்கள, ஆங்கில வாராந்தப் பத்திரிகைகளில் தொடர்ந்தும் எழுதி வருகிறேன். நான் வாராந்தம் ஆங்கிலத்தில் எழு திய பத்தி எழுத்துகளை "CROSS CURRENTS" என்ற தலைப்பிட்டு தொகுத்திருக்கிறேன்.

**கேள்வி :-** கல்விப்புலம் சார்ந்த எழுத்துகள் படிப்பு காரணமாக வேலைப்பளு, படைப்பாக்க முயற்சி களுக்கு குறிப்பாகக் கவிதை எழுது வதற்கு தடையாக இருக்கிறதா?

**பதில் :-** ஆம், கல்விப்புலம் சார்ந்த எழுத்துக்கும் இலக்கியப் படைப்பாக்கத்திற்குமிடையே எப் போதுமே ஒருவித பதற்றம் தவிர்க்க முடியாத விதத்தில் உருவாகிவிடுகி றது. இவை வித்தியாசமான இரு தளங்களில் இயங்குகின்றன என்றே கூறவேண்டும். ஏனெனில் இரண்டிற் கும் வெவ்வேறான கற்பனைவளம், செயற்பாடு இருத்தல் வேண்டும். ரி.எஸ் எலியற் கவிஞராகவும் விமர்ச கராகவும் நன்கு பிரகாசித்தார். சிங்கள இலக்கியத்தை எடுத்துக் கொண்டால் மார்ட்டின் விக்கிரம சிங்க, எதிரிவீரசரச்சந்திர, குணதாச அமரசேகர போன்றோர் படைப்பாக் கத்திலும் இலக்கிய விமர்சனத்திலும் அவ்வாறே நன்கு பிரகாசித்தனர்.

கல்விப்புலம் சார்ந்த முயற்சிக ளையும் படைப்பாக்க எழுத்து நட வடிக்கைகளையும் ஒருசேர நோக் கும்போது நிச்சயமாக அங்கு பதற் றத்தை எதிர்கொள்ள நேர்வது தவிர் க்கமுடியாதது.

இந்த வகையில் புலம் சார்ந்த ஆரா ய்ச்சிகளிலும் அதேவேளை, படைப் பாக்க முயற்சிகளிலும் தம்மை தடை யின்றி தாராளமாக அல்லது சம அளவில் வெளிப்படுத்திக் கொண் டோர் ஒரு சிலரே. என்னைப் பொறுத் தவரையில் இரு வேறுபட்ட தளங்க ளிலுமிருந்து முரண்பாடான சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந் திருக்கிறது.

**கேள்வி :-** கடந்த 20 வருடங் களாக ஹவாயில் வசித்து வருகிறீர் கள். இலக்கியப் போக்குகள் குறித்த உங்களது அனுபவங்கள் என்ன?

**பதில் :-** இலக்கியப் போக்குகள் குறித்து அவதானிக்க முற்படுகையில் முதலில் இலக்கியப் படிப்பு மற்றும் ஆய்வுகள் பற்றி சற்று சுருக்கமாகப் பார்ப்போம். கடந்த மூன்று தசாப்தங் கள் இடையறாதவகையில் இலக் கியப் படிப்பில் பெருத்த மாற்றங்க ளைக் கொண்டு வந்துள்ளன. அவ ற்றை நெருங்கிய வட்டாரங்களிலி ருந்தே என்னால் அவதானிக்க முடிந் தது. 1960களிலும் 1970களிலும் மேற்குலக இலக்கிய படிப்புகளில் புதிய விமர்சன செல்நெறிகளை யும் பின்னர் அமைப்பியல் வாதம் ஆதிக் கம் செலுத்துவதையும் அவதானிக்க முடி ந்தது. 1980களில் இருந்து பின் அமைப்பியல் வாதம், பின் நவீனத்து வம் ஆகியவற்றின் எழுச்சியுடன் பல மாற்றங்கள் துரிதமாக நிகழ்ந்துள் ளன. யாக்குயிஸ் தெரிதா, றோலன்ட் பார்தெஸ், யாக்குயிஸ் லக்கான், பிய ரிபோக்யு, மைக்கேயில் பக்தின் போன்ற ஐரோப்பிய சிநத்னையாளர் களது எழுத்துகள் ஆழமான, பரவ லான தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கின. இதையடுத்து பின்கால னித்துவ கோட்பாடு, பெண்ணிய ஆய்வுகள் மற்றும் புதிய வரலாற்றி யல் அணுகுமுறைகள் போன்றவற் றின் செல்வாக்குகள் அதிகரிக்கத் தலைப்பட்டன. எட்வேர்ட் செயித் உட்பட காயத்ரி ஸ்பிவேக், ஹொமி பாபா, யுடித்பட்லர், ஸ்ரீபன் கிரீன் பிளாற் ஆகியோரின் முக்கிய படைப் புகள் இளம் புலமையாளர்களின் கற் பனைகளையும் தேடல்களையும் பெருமளவில் தூண்டியுள்ளன.

மேலும் அண்மைக்காலங்களில் சிந்தனையாளர்களான யாக்குயிஸ் ரான்ஸியாஸ், அலன்பாயன் சில வோஜ் சிஸேக் ஆகியோரின் எழுத்து கள் இலக்கியப் புலமையாளர்களது சிந்தனைத் தடங்களையும் தளங்க ளையும் விரிவடையச் செய்வதில் பங்காற்றியிருக்கின்றன. மேற்குலக புதிய கலாசாரச் சிந்தனைகள், கோட் பாடுகளுடன் எங்களை படிப்படியாக பரிச்சயப்படுத்திக் கொள்வதற்கு அக் கறை கொள்ளவேண்டும். பின்நவீ னத்துவம் மற்றும் கட்டவிழ்ப்பு போன்றவை குறித்து பல அறிமுகக் குறிப்புகள், பிரதிகள் ஆகியன உங்க ளுக்கு ஆரம்பத்தில் உதவக்கூடும். எவ்வாறெனினும் அவை அறிமுக மட்டத்தில் மாத்திரமே உள்ளன என் பதை இனங்கண்டு அதற்கப்பாலும் செல்லவேண்டும். வெறுமனே அறி முக நூல்களுடன் முடங்கிவிடாது தேடல்களையும் ஆய்வு முயற்சி களையும் விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். மூன்றாவது நிலையாக கருத்தியல் சார்ந்த கோட்பாட்டியலா ளர்களான தெரிதா, லக்கான், போக் கல்ற், பார்தஸ் ஆகியோரின் சற்றுக்க டினமானதும் செறிவுமிக்கதுமான எழுத்துகளுடனும் பரிச்சயத்தை ஏற் படுத்திக் கொள்ள வேண்டும். இவை குறித்த தெளிவான பார்வையினை வளர்த்துக் கொள்வது அவசியமா கும். இதையடுத்து நான்காவது நிலை யாக மேற்கத்தைய படைப்புகளை ஒப்பியல் நோக்கில் எமது மரபியல் சார்ந்த நிலையில் விமர்சனபூர்வமாக அணுகவேண்டும். உதாரணமாக தெரிதாவின் இலக்கணவியலை (Grammatology) நாகர்ஜுனி னது "முலமாதியம்மா காரிகை" யுடன் ஒப்பியலாய்வு செய்வது மிகவும் பொருத்தமானதொரு அனுபவம் எனலாம். இதேபொருளில் நானும் சில ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு எழுதியும் இருக்கிறேன். உண்மை யில் இரு பிரதிகளும் வெவ்வேறான பாரம்பரியங்களிலிருந்து உருவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையெனினும் அவையிடையே பொதுத்தன்மைகளும் ஒத்த இயல்புகளும் காணப்படுகின்றன. இலக்கியச் சிந்தனைகள் தொடர்பில் போக்குகள் குறித்து நான் பேசியுள் ளேன். இதேவேளை, படைப்பாக்க எழுத்துகள் குறித்தும் நாம் பேசலாம். அதனை இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம். இலக்கியப் போக்குகள் குறித்து பேசும்போது இரு விடயங்களை நாம் அவதானிக்க வேண்டும். ஒன்று எப்போதுமே அசலான அடிப்படைப் பிரதிகளை நாம் வாசித்தாக வேண்டும். இரண்டாவது அத்தகைய போக்குகளை எமது ஈடுபாடுகளுடனும் பொருத்தி அவற்றிடையே விமர்சன பூர்வமான ஒரு அணுகுமுறையைப் பேணி வசப்படுத்திக் கொள்வதற்கு முற்படவும் வேண்டும்.

பிரசன்ன விதானகே, அசோக கந்தகம ஆகியோருடன் வேறு சிலரையும் குறிப்பிடமுடியும். எனினும் பொதுவாகப் பார்க்கையில் இலங்கை சினிமாவின் தரம் வேகமாக முன்னேற்றம் காணவேண்டிய நிலையிலேயே இருப்பதை கவனிக்கவேண்டும். நவீன சினிமாவுக்கான புதிய களங்களையும் காட்சிப்படுத்தல் ரீதியில் புதுமையான உத்தி வழிமுறைகளையும் கொண்ட வீறார்ந்த படைப்புகள் உருவாக வேண்டியதொரு தேவை உள்ளது.

சிறியதொரு நாடான இலங்கையைப் பொறுத்தவரையில் அவ்வாறானதொரு எதிர்பார்ப்பு சாத்தியப்படாது என அடிக்கடி கூறப்பட்டு வருகிறது. இது ஏற்கக்கூடியதல்ல. சிறியநாடுகள் பிராந்தியங்களான தைவான், கொங்கொங் போன்றவை

**உலக சினிமா வரிசையில் இலங்கை சினிமாவுக்கு இடம் தேடிக்கொடுத்த படைப்பாளராக இன்னமும் லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் அடையாளப்படுத்தப்படுகிறார். அவரைத்தொடர்ந்து கவனிப்புக்குரியவர்கள் பத்திராஜா போன்றோர்கள் இருந்திருக்கிறார்கள். ஆற்றல் வாய்ந்த நெறியாளர்களாக பிரசன்ன விதானகே, அசோக கந்தகம ஆகியோருடன் வேறு சிலரையும் குறிப்பிட முடியும்**

**கேள்வி :-** ஆசிய சினிமா தொடர்பில் இலங்கை சினிமா பற்றிய உங்களது கணிப்பு என்ன?

**பதில் :-** பெரியளவிலான ஆசிய சினிமாப் பரப்பில் இலங்கை சினிமாவுக்குரியதான இடம் குறித்து நுணுக்கமாக ஆராய்வது அவசியமாகும். உலக சினிமா வரிசையில் இலங்கை சினிமாவுக்கு இடம் தேடிக்கொடுத்த படைப்பாளராக இன்னமும் லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் அடையாளப்படுத்தப் படுகிறார். அவரைத் தொடர்ந்து கவனிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவர்களாக பத்திராஜா போன்றோர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் இருவரையும் அடுத்ததாக நவீன சினிமாவைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்த நெறியாளர்களாக

அண்மைக்காலத்தில் சர்வதேச ரீதியில் நவீன சினிமா மூலம் அளப்பரிய புகழைத் தேடிக் கொண்டுள்ளதை நாம் மறந்து விடக்கூடாது. அங்லீ, ஹோசியா - ஸீன், எட்வேர்ட் யாங்மற்றும் சியாமிங்லீயாங், ஆகிய சர்வதேச திரைப்பட நெறியாளர்கள் சகலரும் தைவான்நாட்டைச் சேர்ந்தவர்களே. அங்லீயின் 'Brokeback Mountain', 'The life of Pi' ஆகிய இரு திரைப்படங்களும் அக்கடமி விருதுகள் பெற்ற அதேவேளை, 'Crouching Tiger', 'Hidden Dragon' ஆகிய இரண்டும் சர்வதேச ரீதியில் பிரமாண்டமான திரைப்படங்களாக சாதனை படைத்துள்ளன. உலக சினிமாவில் கவனிப்புக்குரிய தனித்துவம் மிக்க திரைப்படநெறியாளர்களாக ஹோஸியா ஸீன், எட்வேர்ட் யாங், சியா மிங்லீயாங்ஆகியோர் கருதப்பட்டு வருகிறார்கள். பேராசிரியர் ஜோன் ராம் உடன் இணைந்து நான் எழுதிய சீன சினிமா பற்றிய 'New Chinese Cinema' நூலொன்றில் இவர்கள் இருவரது படைப்புகள் குறித்து விரிவாக ஆராய்ந்திருக்கிறேன். கொங்கொங் சினிமாவை எடுத்துக் கொண்டாலும் இதேபோன்றதொரு நிலைமையே காணப்படுகிறது. நெறியாளர்களும் திரைக்கதை ஆசிரியர்களுமான மார்ட்டின் சோஸி, குயின்ரன் ராறின் ரினோ போன்றோர் கொங்கொங் ''அக்ஸன்'' சினிமாவினால் நேரடியான பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். இதேவேளை, வொங்காவாய் உலக சினிமாவில் தனித்த இடத்தை வகிக்கிறார். அவரது படைப்புக்களான 'In a mood for love', 'Changking Express', 'Happy Together' ஆகியன சினிமாவைப் பற்றி ஆர்வத்துடன் கற்கும் உலகின் பல பாகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அப்படைப்புகளில் விரவியிருக்கும் கூருணர்வுடன் கூடிய திரை நுணுக்கங்களுக்காகவும், கலைப்பாங்கான தன்மைக்காகவும் உதாரணப் படைப்புகளாக மாறியுள்ளன.

எனவே, படைப்பின் வலிமைக்கும் சிறிய நாடு, பிராந்தியம் என்பவற்றுக்கும் எத்தகையதான தொடர்பும் கிடையாது. இலங்கையில் வீறார்ந்த சினிமாக் கலாசாரம் ஒன்றினைத் தோற்றுவிக்க முதலில் உலகத் தரம் வாய்ந்த சினிமாக்களை எமது பார்வையாளர்களுக்கு இலகுவாகக் கிட்டச் செய்யவேண்டும். ■

தமிழில் : ஜி.ரி. கேதாரநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிநாதன்



சினிமாவும் அரசியலும்

# தலைவாவுக்கு தலையிடி வந்த காரணம்

அரசியல் கட்சி 'தலைவருக்கு' மட்டுமல்ல, சினிமாப் பட 'தலைவா' விற்கும் சிக்கல்தான்! 'சூப்பர் ஸ்டார்'என்று தன்னை சினிமாத் தளத்தில் மட்டுமன்றி, அரசியல் தளத்திலும் முன்னிறுத்த நினைக்கும் நடிகர் விஜய் நடித்த 'தலைவா' படம் ரிலீஸ் ஆக முடியாமல், 'மெஜாரிட்டி இல்லாமல்' அரசை அமைக்கத் துடிக்கும் அரசியல் தலைவர் போல் விழி பிதுங்கி நின்றது. இந்த இடியப்பச் சிக்கலில் 'விஜய்' மாட்டிக்கொள்ள பிள்ளையார் சுழி போட்டது என்னவோ அவரது தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர்தான் என்பது சினிமா வட்டாரத்தில் சீவி சிங்காரித்து ஒய்யாரமாக பவனி வரும் டயலொக்!

பிரமாண்டமாக எடுக்கப்பட்ட நடிகர் விஜய் படம் 'தலைவா' ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதி ரிலீஸ் செய்யப்படுவதற்கான பட்டாபிஷேகத்திற்கு (தங்கள் பிரியத்திற்குரிய நடிகர்களுக்கு ரசிகர்கள் குடம் குடமாக பால் ஊற்றி அபிஷேகம் செய்வதுண்டு) காத்திருந்த நேரம். இரு நாட்களுக்கு முன்பு திடீரென்று 'ஒடுக்கப்பட்ட மாணவர் புரட்சிப் படை' என்ற பெயரில் தியேட்டர்களுக்கு மிரட்டல் கடிதங்கள் குவிந்தன. அதில் 'படத்தை திரையிட்டால் தியேட்டர் குண்டு வைத்து தகர்க்கப்படும்' என்ற அச்சுறுத்தல்கள். இதைப்பார்த்த தியேட்டர் அதிபர்கள் பதறிப்போனார்கள். 9ஆம் திகதி படம் ரிலீஸ் பண்ணுவதற்கு பொலிஸ் பாதுகாப்புக் கேட்டனர். ஆனால், பொலிஸ் தரப்பிலோ பாஸிட்டிவான பதில் இல்லை. இதனால் படத்தைத் தயாரித்த தயாரிப்பாளர் சந்திரபிரகாஷ் ஜெயின் தூக்கத்தை இழந்தார். அவரும், விஜய் நடிகரை அழைத்துப் பேசினார். இருவருமாகச் சேர்ந்து கொடநாட்டில் தங்கியிருந்த முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து 'இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது' என்று முடிவு செய்தார்கள். அதற்காக முதல்வரை சந்திக்கச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று காத்திருந்ததாகவும் செய்திகள் கசிந்தன.

முதல்வரின் அப்பாயின்மென்ட் நடிகர் விஜய்க்குக் கிடைக்கவில்லை என்றதும் தியேட்டர் அதிபர்களின் பயம் அதிகரித்தது. இதனால் படம் ரிலீஸ் பண்ண முடியாது என்ற சூழ்நிலை பிறந்தது. இதைச் சமாளிக்க முடியாமல் திணறினார் விஜய். 'விஸ்வரூபம்' படத்திற்கு சிக்கல் பிறந்த போது அதை தீர்த்து வைக்க திரைப் படத்துறை முன்னுக்கு வந்தது. பலரும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு கோரிக்கை விடுத்தனர். ஆனால் அது போன்றதொரு 'பாக்கியம்' நடிகர் விஜய்க்கு கிடைக்கவில்லை. உபயம்: நடிகர் விஜயின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகருக்கும், திரையுலகத்தில் உள்ளவர்களுக்கும் இடையில் உள்ள பனிப்போர். கமலுக்கு கை கொடுக்க முன் வந்த அரசியல் கட்சிகளும், திரையுலகப்பிரமுகர்களும் விஜய்க்கு மனமிரங்கவில்லை. தி.மு.க. தலைவர் கருணாநிதி மட்டும் ஒரு அறிக்கை விட்டார். அதில் கூட, 'அ.தி.மு.க.விற்கு வேண்டிய விஜய் அவர் படத்தையே திரையிட முடியாமல் இருக்கிறார்' என்று கூறி, விஜய் அ.தி.மு.க.விற்கு வேண்டியவர் என்பதை தன் தொண்டர்களுக்கு பிரகடனப்படுத்தவே விரும்பினார். தன் வாக்கு வங்கியில் விஜய் எந்த 'சுரண்டலை'யும் செய்து விடக்கூடாது என்பதற்கான எச்சரிக்கை மூவ் அது!

தத்தளித்த விஜய் 'சரண்டர்' தியேரியை பாலோவ் பண்ணினார். 'தமிழக முதல்வர் சிறப்பான மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள். என்.எல்.சி. பிரச்சினை, காவிரிப் பிரச்சினை போன்றவற்றில் நல்ல தீர்வு கண்டார்கள். அம்மா உணவகம் அமைத்து மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்' என்றெல்லாம் பாராட்டி அறிக்கை விட்டு, 'தலைவா திரைப்படம் வெளியிட அம்மா உதவ வேண்டும்' என்ற ரீதியில் கருணை மனு போட்டார். ஆனாலும் அரசு தரப்பிலிருந்து எந்த உதவியும் இல்லை. ஏனென்றால், காவல் துறையைப் பொறுத்தமட்டில் 'சட்டம் -ஒழுங்கு' கோணத்தில் தியேட்டர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க முன்வரவில்லை. ஏனென்றால் பிரச்சினை அரசாங்கத்திற்கும், நடிகர் விஜய்க்கும் அல்ல! தியேட்டர் அதிபர்களுக்கும்- புரட்சிகர மாணவர் படைக்கும் பிரச்சினை என்ற நிலைப்பாட்டில் இருப்பதே இதற்குக் காரணம். இதன் பிறகு படத் தயாரிப்பாளர் சந்திரபிரகாஷ் சிங், 'ஆகஸ்ட் 16ஆம் திகதிக்குள் படம் ரிலீஸ் ஆகவில்லை என்றால் என் குடும்பம் தெருவுக்கு வந்து விடும்' என்று உருக்கமான பேட்டி கொடுத்தார். ஆனாலும், ஆகஸ்ட் 16 ஆம் திகதி 'தலைவா' தியேட்டர்களில் தலை தூக்க முடியவில்லை.

இவ்வளவு பெரிய தர்மசங்கடம் நடிகர் விஜய்க்கு ஏன் வந்தது? இத்தனைக்கும் சென்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.விற்கு ஆதரவாக வாக்குக் கேட்டவர்தானே என்ற கேள்வி எழாமல் இல்லை. இதற்கு அரசியல் பின்னணிகள் பல அணிவகுத்து நிற்கின்றன. முதல் காரணம் நடிகர் விஜயை சினிமாவில் முன்னிறுத்தி அரசியலில் ஜெயிக்க வேண்டும் என்ற அவரது தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரின் (எஸ்.ஏ.சி) ஆசைதான். இந்த விருப்பத்தில் அவர் 'தலைவா' படத்தில் 'அண்ணா' என்ற கேரக்டரை 'சத்யராஜுக்கு' வைத்தார். நான் 'அண்ணா'. என் மகன் விஜய் 'எம்.ஜி.ஆர்' என்று சில இடங்களில் பேசினார் என்ற அரசல்புரசலாக தகவல் பறந்தது. அது அரசியல் வட்டாரத்தைக் கலக்கினாலும், குறிப்பாக அ.தி.மு.க. தலைமைக்கு எரிச்சலூட்டியது. ஏனென்றால், இப்படி அரசியலில் பிரவேசித்த விஜயகாந்தால் ஏற்கனவே அக்கட்சி 2006, 2009 தேர்தல்களில் சங்கடத்தைச் சந்தித்தது. அது போன்றதொரு ஆபத்தை 'விஜய்' வடிவில் சந்திக்க அ.தி.மு.க. தயாராக இல்லை.

இந்தப் பின்னணியில் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்தே நடிகர் விஜய் மற்றும் அவரது தந்தை எஸ்.ஏ.சி. ஆகியோருக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கொண்டது. எஸ்.ஏ.சி. பாணியில் சொல்வதென்றால், 'நடிகர் சரத்குமாருக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை என் மகன் விஜய்க்கு அ.தி.மு.க. அரசு கொடுப்பதில்லை. ஏனென்றால், என் மகன் எம்.ஜி.ஆர். போல் செல்வாக்குப் பெற்றவன் என்று கருதுகிறார்கள்' என்று சுய தம்பட்டம் அடித்துக்கொண்டதும் முன்னணிக் காரணங்களில் ஒன்று. திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தேர்தலின் போது எஸ்.ஏ.சி.க்கும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கே.ஆர். தரப்பிற்கும் மோதல் வெடித்தது. அதில் எஸ்.ஏ.சி எதிர்பார்த்த ஆதரவு அவருக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவில்லை. அதனால், இப்போது அந்தத் தலைவர் தேர்தல் நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறது. ''இந்த ஆட்சி அமைந்தவுடன் எஸ்.ஏ.சி.யின் 'தலைவர்' பதவிக்கு சிக்கல் ஏற்பட்டது. இப்போது அவரது மகன் விஜயின் 'தலைவா' படத்திற்குப் பிரச்சினை வந்தது என்று சினி வட்டாரத்தில் செய்திகள் சிறகடித்துப் பறந்தன.

இப்பிரச்சினை முடிந்த பிறகு விஜய் நடித்த 'துப்பாக்கி' பட ரிலீஸிலும் சோகம் காத்திருந்தது. இஸ்லாமிய அமைப்புகள் அப்படத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கின. அப்போதும் விஜய்க்கு பெரிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இஸ்லாமிய அமைப்புகளின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு கண்டுகொள்ள வேண்டிய நிலை விஜய் தரப்பிற்கு ஏற்பட்டது. ஆகவே 'சுவற்றில் தனக்காக எழுதப்பட்டுள்ளது என்ன' என்பதை நடிகர் விஜய் அப்போதே கவனிக்கத் தவறிவிட்டார் என்று எண்ண வேண்டும். ஆனால், தன் மகனை அரசியல் ரீதியாக முன்னிறுத்தும் ஆசைக்கு மேலும் தூபம் போட்டது 'துப்பாக்கி' பட வெற்றி. ஒரு காலகட்டத்தில் ரஜினி படங்கள் தமிழகத்தில் 20 தியேட்டர்களுக்கு மேல் 50 நாட்கள் ஓடாது. ஆனால், அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற 1991 வாக்கில் எடுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட ரஜினியின் 'அண்ணாமலை' படம் அமோக வெற்றியைக் கொடுத்தது. இந்த வெற்றிக்குப் பிறகுதான் தமிழகத்தில் ரஜினியின் படங்கள் 70 தியேட்டர்களுக்கு மேல் 50 நாள் வரை ஓடும் என்ற நிலை ஏற்பட்டது. அதை வைத்துத்தான் அரசியலுக்கு வருகிறார் ரஜினி என்ற கோஷம் வலுப்பெற்றது. அதேமாதிரி 'இமேஜ்' துப்பாக்கிப்பட வெற்றிக்குப் பிறகு தன் மகனுக்குக் கிடைத்து விட்டதாக எஸ்.ஏ.சி. ப்ரஜெக்ட் பண்ணினார். அதற்கு நடிகர் விஜய் உதவிக்கரம் நீட்டினார்.

சென்னை புறநகரில் சில மாதங்களுக்கு முன்பு மிகப் பிரமாண்டமான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு எஸ்.ஏ.சி. ஏற்பாடு செய்தார். விஜய் தலைமையில் நடக்கும் அந்த நிகழ்ச்சியில் குறைந்தது 20,000 பேரைத் திரட்ட முடிவு செய்யப்பட்டது. ஆனால், நிகழ்ச்சி நடத்திக் கொள்ள தங்கள் மைதானத்தைக் கொடுத்த கல்லூரி திடீரென்று அந்த அனுமதியை திரும்பப் பெற்றுக் கொண்டது. இதைத் தொடர்ந்து காவல்துறை அதிகாரிகளிடம், 'என் மகன் சினிமாவில் இன்னும் 10 வருடம் நடிப்பான். அரசியலுக்கு வரும் நோக்கம் எல்லாம் இல்லை. நான் என் விழாவை நடத்திக் கொள்கிறேன்' என்று கேட்டுப்பார்த்தார். அது மறுக்கப்படவே, 'சரி. நான் அங்கு விழா நடத்தவில்லை. ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நடத்திக் கொள்கிறேன். அங்கே அனுமதி கொடுங்கள்' என்று கெஞ்சிப் பார்த்தார். அதற்கும் பொலிஸ் சம்மதிக்கவில்லை. இறுதியில் விஜய் ஏற்பாடு செய்திருந்த அந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவையே ரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த ரத்து நிகழ்ச்சி விஜய் மற்றும் அவரது தந்தை எஸ்.ஏ.சி. ஆகியோர் மனதில் ஆறாத வடுவாக அமைந்தது.

இப்படி வளர்ந்து வந்த 'வம்புகள்', பிறகு 'தலைவா' படத்திற்கு 'கெட்ட சகுணம்' ஆகின. முதலில் அப்படத்திற்கு 'வரிச் சலுகை' கிடைக்காமல் போனது. மாநில அரசு அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டது. அதுவே ''விஜய் நடித்த 'தலைவா' படத்திற்கு அரசு எந்தவிதத்திலும் ஆதரவு கொடுக்காது'' என்ற செய்தியாகி விட்டது. அடுத்து, ஆகஸ்ட்-9 ஆம் திகதியன்று மற்ற மாநிலங்களில் எல்லாம் படம் 'ரிலீஸ்' ஆகிவிட்டது. ஆனால் தமிழகத்தில் எங்கும் ஓடவில்லை. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா ஒரு தியேட்டரில் அன்றைய தினம் ஒரு ஷோ மட்டும் படம் ஓடியது. அதுவும் தடுத்து நிறுத்தப்பட்டது. இதனால் நடிகர் விஜய் திக்கு முக்காட வேண்டியேற்பட்டது. தயாரிப்பாளரோ 'தலையில் துண்டு போடும்' நிலைமைக்கு வந்து விட்டேன் என்று பேட்டி கொடுத்தார். பிரச்சினை 'அரசுக்கும், விஜய்க்கும் இல்லை' என்ற ரீதியில் காவல்துறையின் போக்கு நீடித்தது. அதே நேரத்தில் 'அரசு உதவி இல்லையென்றால் மிரட்டல் கடிதங்கள் வந்திருக்கின்ற நேரத்தில் படத்தை ரிலீஸ் பண்ண முடியாது' என்ற மனநிலையில் தியேட்டர் அதிபர்கள் ஒதுங்கி நின்றார்கள். ஆனால் அரசிடமோ, தமிழக முதல்வர் ஜெயலலிதாவிடமோ பேசி 'தலைவா' பட ரிலீஸை உறுதி செய்ய சரியான பிரதிநிதிகள் இல்லாமல் தடுமாறினார் நடிகர் விஜய். அவருடைய தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரும் அப்படித்தான்!.

'தலைவா' படம் அரசியல் தலைவர் பதவியைப் பிடிக்க நடிகர் விஜய் எடுக்கும் ஒரு ஆரம்ப கட்ட முயற்சி என்ற எண்ணம் அ.தி.மு.க.விற்கு ஏற்பட்டிருக்கிறது. நடிகர் விஜய் மற்றும் அவரது தந்தையை அ.தி.மு.க.விற்கு ஆதரவாகச் சென்ற தேர்தலில் செயல்பட வைத்தது சசிகலாவின் கணவர் நடராஜன் என்ற பேச்சு நிலவுவதால், விஜய் வடிவமைத்துள்ள இந்தப் புதிய வியூகத்தில் நடராஜனின் கைவண்ணம் இருக்குமோ என்ற சந்தேகம் அரசியல் வட்டாரத்தில் காட்டுத் தீ போல் பரவிக் கிடக்கிறது. ஆகவே, 'அரசியல்' ஐடியாவிற்கு அவுட் கொடுத்து விட்டு, 'சினிமா'விற்கு மட்டுமே 'இன்' என்ற நிலைப்பாட்டை எடுத்தால் மட்டுமே விஜய் எடுத்த 'தலைவா' படத்தின் தலை தப்பிக்கும் என்ற நிலை உருவானது. அந்த நிலைப்பாட்டை இப்போது விஜய் எடுத்திருக்கிறார் என்றே தெரிகிறது. 'என் மகன் அரசியலுக்கு வர மாட்டான்' என்பது போன்றதொரு உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிறார் எஸ்.ஏ. சந்திரசேகர் என்பது திரையுலக வட்டாரப் பேச்சு. இது மட்டுமன்றி, பட அதிபர் சந்திரபிரகாஷ் சிங் திடீரென்று நெஞ்சுவலியால் அவதிப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இது போன்ற சூழ்நிலையில், விஜய் நடித்த 'தலைவா' வெள்ளித்திரைக்கு வந்திருக்கிறது. 'எது நடந்தாலும் நடக்கட்டும். நான் அரசியல் கட்சியை இப்போதே ஆரம்பிக்கிறேன்' என்றெல்லாம் திரைமறைவில் 'வீராப்புப்பேசி' வந்த 'ஆல் தோட்ட பூபதி' இப்போது குஷி என்பதை விட 'குட்டுப்பட்டு' நிற்கிறார்! ■

**அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்து நடிகர் விஜய்க்கும் அவரது தந்தை சந்திரசேகருக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை குறைத்துக் கொண்டது. 'நடிகர் சரத்குமாருக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை என்மகன் விஜய்க்கு அ.தி.மு.க. அரசு கொடுப்பதில்லை. ஏனென்றால் என் மகன் எம்.ஜி.ஆர். போல் செல்வாக்குப் பெற்றவன் என்று கருதுகிறார்கள்' என்று சந்திரசேகர் சுயதம்பட்டம் அடித்ததும் முன்னணிக் காரணங்களில் ஒன்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

அவர்களுடைய பெயர்கள்தாம். ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, டலஸ் அழகப்பெரும என்ற பெயர்கள் அவ்வப்பெயர் இன்றைய கால கட்டம் நமது இனத்தவர்கள் பலர் செல்வாக்குமிக்க பிறமொழி, பிறபண்பாட்டுச் சூழலுக்குள் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர். அவர்களுடைய அடுத்த அடுத்த தலைமுறையினர் தாய்மொழியை - தமிழ்மொழியை அறிந்தவர்களாக இருக்கப்போவதில்லை. அவர்களின் இனத்துவம் அவர்களது பெயர்களிலாயினும் புலனாகவேண்டும். புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் வருங்காலத்தில் நிகழ்த்தவிருக்கும் சாதனை குறித்து 'என் இனத்தவன் செய்த சாதனை' என்று பெருமைப்படுவதற்கான வாய்ப்பினை, அவனுக்கு இடப்படும் தமிழ்ப் பெயரால் மாத்திரமே தரக் கூடியதாக இருக்கும்.

பல தசாப்தங்களாகப் போராடினோம், இழக்கக்கூடிய யாவற்றையும் இழந்தோம். நாம் சண்டை பிடித்தது எல்லாம் எமது அடையாளத்தை நிலை நிறுத்துவதற்காகத்தான். ஆனால், எமது அடையாளப்படுத்தலுக்காக, சுலபமாக எம்மாலேயே மேற்கொள்ளக்கூடிய காரியங்களை நாம் செய்யாது விடுகிறோம். தமிழ் தமிழ் என்று சாகிறோம், தமிழுக்கு நாமே கொடுக்கக் கூடிய அந்தஸ்தைக் கொடுக்காமல் விடுகிறோம். எமது மொழிப்பற்றும் இனப்பற்றும் சந்தேகிக்கத்தக்கனவாகவே உள்ளன.

அறிவுக்குப் பொருந்தாத வகையில் எண்சோதிடம் என்றும் சோதிடம் என்றும் அலைகிறோம். பெயர் மாற்றங்களால் எமது வாழ்க்கை உன்னத நிலை எய்திவிடும் என்று அங்கலாய்க்கிறோம். ஊடகங்களும் அவற்றுக்கு அநியாயமாக முக்கியத்துவம் கொடுக்கின்றன. நாகரிகம் என்ற பேரில் அறியாமையால் தமிழ்ச் சமூகத்தின் பேச்சுப்பழக்கத்துக்கு (speech habit) மாறான ஒலிகளை - எழுத்துகளைக் கோத்துப் பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கிறோம் (உம் : டிலூஸன், நிலக்ஸ், டினேஸ்) எந்த அர்த்தமும் இல்லாத பெயர்களை வைக்கிறோம். தமிழ்ப் பெயர்களை அல்ல, குறைந்த பட்சம் ஏதேனும் ஒரு மொழியில் அர்த்தம் உள்ளதான ஒரு பெயரை வைத்தாலே போதும் என்று எண்ணத் தோன்றும் நிலைக்கு எமது சமூகம் மாறி வருகின்றது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு அமைப்பு ரீதியாகப் பாடுபட வேண்டிய தேவை வந்துவிட்டது. யாரேனும் முயன்றால் பலன் காணலாம். ஊடகங்கள் இவ்விடயத்தில் கணிசமாக பணியாற்றலாம்.

ஆட்பெயர்கள் மாத்திரம் அல்ல, கிராமம், வீதி முதலானவற்றுக்கு இடப்படும் சிறப்புப் பெயர்களும் மொழி, இன, பண்பாட்டு அடையாளங்களைப் பேணுபவையாகவே இருக்கவேண்டும். தமிழ்நாட்டில், வடமொழிச் செல்வாக்குமிக்கிருந்த காலத்தில், திருமறைக்காடு, திருவெண்காடு முதலான தூய தமிழ்ப் பெயர்கள் முறையே வேதாரணியம், சுவேதாரணியம் என்று மாற்றப்பட்டன. எனினும் தமிழ்ச் சமூகம் சுயநிர்ணய உரிமையோடு வாழும் சூழல் அங்கு இருப்பதால் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை. ஆனால், இலங்கையில் நிலைமை வேறு, அதிகாரத்தில் உள்ளவர்கள் தமிழரின் பூர்வீக பிரதேசங்களில் உள்ள கிராமங்களுக்குப் புதிய பெயர்கள் சூட்ட முனைவதை அல்லது இருக்கும் பெயர்களுக்கு தமக்கு வசதியான வியாக்கியானங்கள் செய்ய முனைவதைக் காண்கிறோம். கொழும்பில் 'ஆனந்தக் குமாரசுவாமி மாவத்தை', 'நெலும் பொக்குண மாவத்தை'யாக மாற்றப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் பூர்விக இருப்புக்கான - குடிப்பரம்பலுக்கான அடையாளங்களை மெல்ல மெல்ல இல்லாமற் செய்துவிடும் பெருந் திட்டம் ஒன்றின் பகுதியாகவே இத்தகைய காரியங்களை உணர்ந்து கொள்ளவேண்டும். இத்தகையனவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான பலம் சிறுபான்மைச் சமூகங்களுக்கு இன்று இல்லாமற் போய்விட்டது. ஏன் பெரும்பான்மைச் சமூகத்தவர் கூட நீதியை நிலைநாட்டும் பலம் அற்றவர்களாகவே போய்விட்டார்கள். எது எவ்வாறாயினும் நம் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதற்கான அதிகாரம் இன்னும் நம் கையை விட்டுப் போய்விடவில்லை. அந்த அதிகாரத்தையாவது தக்கபடி பயன்படுத்திக் கொள்வோம். ■

GET சமகாலம் DELIVERED TO YOUR HOME

3 months 600/-

6 months 1200/-

1 Year 2,400/-

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700

*For more details, please contact :*
Overseas & Local Subscriptions
S.Surainie - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322783

Subscription rates (inclusive postage) and delivery within Colombo.

ORDER FORM :

சமகாலம்

Manager Subscriptions
Samakalam
No. 185, Grandpass Road, Colombo - 14,
Sri Lanka.
Tel : +94-11-7322783 / +94-11-7322741
Fax : +94-11-4614371

FOLD HERE

SUBSCRIBER INFORMATION :
Title :.................... Last Name :..............................
First Name :..............................
Organization :..............................
Address :..............................
..............................
Phone :.................... Mobile :....................
Fax :.................... E-mail :....................
Payment : Amount Rs....................
☐ Cash ☐ Cheque
Payable to : Express Newspapers (Cey.) (Pvt) Ltd.
Bank :.................... Cheque No :....................
Signature :....................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# 'பெயர்' கெடும் தமிழ்ச் சமூகம்



கனகசபை ரகுபரன்

ஆட்களுக்கும், இடங்கள், நதிகள் முதலானவற்றுக்கும் இட்டு வழங்கும் சிறப்புப் பெயர்கள் மொழிக் கூறுகளுள் மிக இன்றியமையாத ஒரு வகையின. இவற்றை ஆங்கிலத்தில் Proper Noun என்பர். இச் சிறப்புப் பெயர்களுள் இடங்கள், நதிகள் முதலானவற்றுக்கான சிறப்புப் பெயர்கள் (உம் : யாழ்ப்பாணம், பொதிய மலை, மாவலிகங்கை) யாரால் எப்போது இடப்பட்டன என்ற விபரம் பெரும்பாலும் தெரிய வருவதில்லை. ஆனால், தனிமனிதர்களுக்கு இட்டு வழங்கப்படும் பெயர்கள் அவர்கள் பிறந்தவுடன் அவர்களின் பெற்றோர், உற்றோரால் ஆசையோடு இட்டு வழங்கப்படுவன. தாய், தான் கர்ப்பம் தரித்த காலம் முதலே பிள்ளை ஆணா? பெண்ணா? அதற்கு என்ன பெயர் வைக்கலாம்? என்று கனவு காணத் தொடங்கிவிடுகிறாள். தந்தையும் மற்றும் நெருங்கிய உறவுகளும்கூட அவ்வாறான கனவுகளிலே காலம் செலுத்துவார்கள்.

ஒருவனுக்கு இட்டு வழங்கும் சிறப்புப் பெயர்தான் அவனுக்கு அடையாளம். அவனது நற்செயல்களால் தேடுகின்ற புகழும் தீய செயல்களால் தேடுகின்ற இகழ்ச்சியும் அவனுக்கு உரியவையே என்றாலும் அவன் 'நல்ல பேர் எடுத்தான்', 'கெட்ட பேர் வாங்கினான்' என்று அவனுக்கு இட்டு வழங்கப்படும் பெயரின் மேலேயே அவற்றை ஏற்றிச் சொல்லுகிறோம். மனிதர்களைத் தொகுதியாக நோக்குகிற போதும் 'இத்தனை பேர்' என்று பெயரின் அடிப்படையிலேயே நோக்குகிறோம். பண்டைக்காலத்தில் நாட்டப்பட்ட 'நடுகல்' முதல், இன்றைய 'அடையாள அட்டை' வரையில் பெயர்தான் ஒருவனுக்கு, ஒருத்திக்கு அடையாளம்.

உலக வரலாற்றில் பண்டைக்காலத்தில் எத்தனை ராஜாதிராஜர்கள் சக்கராதிபத்தியம் செலுத்தினார்கள். அவர்களுடைய பரம்பரையினர் என்று யாரையாவது இன்று அடையாளம்காட்ட முடிகிறதா? எஞ்சிநிற்பன அசோகன், இராஜராஜன், சந்திரகுப்தன் முதலான அவர்களின் பெயர்கள் மாத்திரமே. புகழ்பூத்த அறிஞர்கள், எத்தனைபேர் வாழ்ந்து முடிந்தார்கள். அவருடைய சந்ததி என்று யாரையாவது இனங்காட்ட முடிகிறதா? எஞ்சி நிற்பது அவரவர் பெயர் மட்டுமே.

பெயரானது தனிநபர் ஒருவரை மற்றவர்களிலிருந்து பிரித்து அடையாளப்படுத்துவதை மாத்திரம் செய்வதில்லை. அவருடைய இனம், மொழி, சமயம் முதலானவற்றையும் அடையாளப்படுத்தி நிற்பது. தமிழ்மொழியில் இடப்பட்ட பெயரை உடையவன் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதம் தமிழனாகத்தான் இருப்பான் என்று நாம் உறுதி செய்யலாம். சமயசார்பான பெயர்கள், இவர் இன்ன சமயத்தைச் சேர்ந்தவர் என்பதை உணர்த்தும். சிவ சங்கர் என்ற பெயரை உடையவர் ஒரு இந்துவாக இருப்பதற்கே சாத்தியப்பாடு அதிகம். ஆயினும் அவர் மொழியால், இனத்தால் தமிழராயோ வங்காளியாயோ, தெலுங்கராயோ இருக்கலாம். ஆனால் 'சிவ சங்கரன்' என்ற னகர ஈற்றுப் பெயரை உடையவன் இந்துத் தமிழனாக இருப்பதற்கே சாத்தியம் அதிகம். Antony என்பதை அந்தோனி என்று தமிழ் மயப்படுத்தி வைத்த ஒருவனை நாம் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றுகின்ற தமிழன் என்று உறுதி செய்வோம். கபிலன், நக்கீரன், சேக்கிழான் முதலான பெயர்களை எவரேனும் கொண்டிருந்தால் அவருடைய பெற்றோர் அல்லது அவருக் குப் பெயர் வைத்தவர் தமிழிலக்கிய ஈடுபாடு உடையவர் என்று ஊகிக்கலாம். காலத்துக்குக் காலம் ஆட்பெயர்களின் பாணி (Style) மாறுபட்டாலும் அவை ஏதோ ஒருவகையில் மொழி, இன, மத அடையாளங்களைப் புலப்படுத்தியே நிற்கும். அதாவது ஆட்பெயர் என்பது தனிமனிதனை மாத்திரமன்றி அவனது பண்பாட்டையும் அடையாளப்படுத்தி நிற்கும்- நிற்கவேண்டும்.

ஆட்பெயருக்குள்ள அத்தன்மை காரணமாகத்தான் மேற்கிந்திய தீவுகளின் துடுப்பாட்ட வீரரான சிவ் நாராயணனை எவரும் சொல்லாமலே தமிழன் என்று இனங்கண்டு கொள்கிறோம். பிஜி, மொறீசியஸ் முதலான நாடுகளிலுள்ள தமிழர்கள் தமிழை எழுதப் பேசத் தெரியாதவர்களாக இருந்தபோதும் அவர்களைத் தமிழர்கள் என அடையாளப்படுத்தி நிற்பவை

(65ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# Happiness is getting life's little things that your heart desires

Life is about being able to do those many little things that are close to our hearts. And happiness comes from all those little things adding up to make a full and enriched life.

## Personal Loans
from DFCC Vardhana Bank

- Loans from Rs.100,000 - Rs. 4,000,000
- Minimum documentation and simplified loan application processes
- "Turbo Charge" option to top-up your loan any time during the loan period
- Extended repayment term up to 5 years
- Ability to co-apply with joint borrowers
- No hidden charges

DFCC
**Vardhana Bank**
Your Most Caring and Trusted Bank

Call now: **0112 663 888**
**www.dfcc.lk**

DFCC Vardhana Bank is rated AA-(lka) Fitch Ratings Lanka.
DFCC Vardhana Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

*Terms and Conditions apply.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.